19 வது வருடத்தில்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338
416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 | பாலம் 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2009

# அதி உச்சமயான பயங்கரத்தை எட்டும் இலங்கைப் போர்

மனித உரிமை போராளி அருந்ததி ராய்!



"சுற்றும் புறமும் மயான மௌனம் காக்கும் காரணத்தையே சாதகமாக்கிக்கொண்டு அதி பயங்கர கொடுமையொன்று இலங்கையில் நிகழ்ந்தே விடும் சாத்தியத்தில் இருக்கிறது." என்று உலகப்புகழ்பெற்ற எழுத்தாளரும் மனித உரிமைப் போராளியுமான அருந்ததி ராய் தெரிவித்துள்ளார். இந்திய நாளேடான டைம்ஸ் ஒ.ஃ.ப் இன்டியா இதழில் எழுதியுள்ள ஆய்வில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அனேகமாக அங்கே நடக்கிற இந்த பாரிய கொடுமைகள் பற்றி இந்திய ஊடகங்கள் வாயே திறப்பதில்லை என்றால் உலக ஊடகங்களும் இவ்விசயத்தில் இவற்றிற்கு சளைத்தவைகளாக இல்லை. ஏன் இந்த அதர்ம மௌனம்?. இது மிகவும் கவலைக்குரியது. மெல்லக்கசிந்து வரும் தகவல்கள் புலப்படுத்துவது யாதெனில் இலங்கை அரசு "பயங்கரவாதத்துக்கெதிரான போர்" என்ற தொனியில் நாட்டின் மொத்த ஜனநாயக கட்டமைப்புக்களையும் உடைத்து நொருக்கி விட்டு தமிழ் மக்களுக்கெதிரான சொல்ல வொண்ணாத கொடுமைகளை தாராளமாக நிகழ்த்திகொண்டிருக்கிறது. தாங்களே தங்களை நிரூபித்துக்காட்டும்வரை தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகளே என்னும் கொள்கையுடன் அவர்களின் வாழ்விடங்கள், மருத்துவமனைகள், தஞ்ச மடைந்த தலங்கள் என பேதமின்றி குண்டுமழை பொழிந்து யாவற்றையும் போர்க்களமாக சிதைத்து வைத்திருக்கிறது.

200,000-க்கும் மேலான மக்கள் இத்தகு அவலக்களங்களில் சிக்குண்டுள்ளார்கள் எனவும் அவர்களை நோக்கி பல்குழல் உந்திகள் உள்ளிட்ட கனரக ஆயுதங்கள் தரித்து வானூரும் படையுதவ இலங்கை இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

இதற்கிடையில் இடம்பெயரும் மக்களை குடியமர்த்த மன்னாரிலும் வவுனியாவிலும் ""நலன்புரி இல்லங்கள்" அமைத்திருப்பதாக அரசு செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் அவ்வகை மையங்கள் யாவும் உயிருக்கு பயந்து தப்பிக்க நினைத்த மக்களை பலவந்தமாக தடுத்து அடைத்து வைக்கப் பயன்படும் வதை மையங்கள் எனவும். இந்தக்கொடும் வதை மையங்களுக்கு அரசு சூட்டியுள்ள கவர்ச்சிப் பெயர் தான் "நலன்புரி மையங்கள்" என டெய்லி டெலெக்ரா.ஃ.ப் நாளேடு (.ஃ.பெப் 14, 2009) சுட்டிக்காட்டுகிறது. இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர கூறுகையில் "அரசு சில மாதங்களுக்கு முன் கொழும்பில் வசித்து வரும் அத்தனை தமிழர்களின் விவரங்களையும் பதிவு செய்தது. இந்த நடவடிக்கைகள் நாஜிகள் 1930-ல் நடத்தியதியதைப்போன்று ஒரு கொடும் நோக்கத்துடனேயே நடந்துள்ளன. அவ்வாறு பதியப்பட்ட விவரங்களைக் கொண்டே அவர்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என எதிர்காலத்தில் அறிவிக்கும் நோக்கிலேயே இப்பதிவானது நிகழ்த்தப்பட்டிருக்கிறது" என்றார்.

புலிகளை ஒழித்துக்கட்டுவது என்ற போக்கில் புலிகளோடு சேர்த்து உடனுறையும் இலட்சக்கணக்கான மக்களையும் கொலைபுரியும் கொடும் மதி நோக்கில் முழுவளவிலான இனப்படு கொலையை நடத்தி முடித்திடும் ஏற்பாட்டின் கடையெல்லையில் நிற்கிறது இலங்கை அரசு. பல்லாயிரகணக்கில் மக்கள் கொல்லப்பட்டு விட்டனர் என்றும் மேலும் ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் ஐ. நா கூறுகிறது. நேரில் பார்த்த ஒரு சில சாட்சிகளோ நரகத்தின் கொடுங்கனவே அங்கு நிகழ்வதாக பதைத்தோய்கின்றனர். இவ்வாறு நேரில் பார்க்கப்படுவதுவுமாக, செய்திகளாய் கேட்கப்படுவதுமாக, முழு உலகின் கண்களையும் திறமையாக மறைத்து அந்த நாட்டில் நடத்தப்படுவது பச்சையான, வெளிப்படையான பேரினவாதப்போரேதான். தண்டிக்கப்படும் பயம் ஏதுமின்றி தமிழ் மக்களின் மேல்கட்டவிழ்த்து விடப்படும் இத்தகைய கொடுங்குற்றங்கள் மற்றும் அநீதிகள் தமிழர்களின் மீது சிங்களவரின் அடிமனத்தில் புதைந்து கிடக்கும் வெறுப்பையும் காழ்ப்பையும் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன். இதே காழ்ப்புணர்வுகள்தான் முதற்கட்டமாக தமிழ் மக்களின் உரிமையை மறுத்து அவர்களை ஒதுக்கி அந்நியயப்படுத்தக் காரணமாக இருந்தன. இப்பேரினவாதம் சமூக வெறுப்புகளில் தொடங்கி பொருண்மிய மறுப்புகளாக வளர்ந்து திட்டமிட்ட படுகொலைகளாகவும் சித்திரவதைகளாகவும் ஓங்கி நின்றது.

அமைதிவழியில் அஹிம்சைப் போராட்டமாக தொடங்கி இன்று உச்சக்கட்ட ஆயுதப்போராக வெகுண்டிருக்கும் இந்த யுத்தம் மேற்சொன்ன பேரினவாததில்தான் வேர்பிடித்தது என்றால் அது சாலவும் உண்மை. நம் அண்டையில் இவ்வன் கொடும்செயல்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது இந்திய மக்கள் மத்தியில் ஏன் இந்த கண்டுகொள்ளாத மயான மௌனம்?!.

இன்னொரு செவ்வியில் இலங்கையில் சுதந்திர ஊடகம் என்ற ஒன்று முற்றிலுமாக அழித்தொழிக்கப்பட்டு இல்லாத ஒன்றாக (Non-Existent) ஆக்கப்பட்டுவிட்டது என வெதும்புகிறார் சமரவீர. இது பற்றியான (ஊடக சுதந்திரம்) துளி கவலை கூட இந்தியாவில் பரவவேயில்லையே?! மேலும் கொலைப்படையணிகள் (Death Squads) பற்றியும் வெள்ளை வான் கடத்தல்கள் (White Van abductions) பற்றியும் ஆன கலவர நிலவரங்களை பற்றியும் சமரவீர பேசுகிறார். அனர்த்தங்களை எதிர்த்த தலைவர்கள், அநியாயங்களை தட்டிகேட்ட ஊடகவியலார்கள் கடத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டும் கதை முடிக்கப்பட்டுவிட்டார்கள். ஒட்டு மொத்த சமூகமும் உயிர் பயத்தில் உறைந்து போயிருப்பதாக அவர் கூறுகிறார்.

மேலும் பயரங்கரவதத்துக்கெதிரான கறுப்பு சட்டங்கள், காணாமல் போகச் செய்தல், படுகொலைகள் ஆகிய ஒருங்கிணைந்த மிரட்டல்கள் மூலம் இலங்கை அரசு ஊடகவியலாளரின் குரல்வளைகள் நெரிப்பதாக அகில உலக ஊடகவியலார் அமைப்பு குற்றம் சாட்டுகிறது.

துரித பணமாற்றுச் சேவை

- 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

416.267.8221

என் பணி அடமானக் கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

CENTUM™ Veedu Mortgages Inc.

STANDARD MORTGAGES INC

ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520

Reliance
Financial & Investment Co Inc

MORTGAGES
▶Residential ▶Commercial ▶Line of Credit
▶Low Interest ▶40 Lenders ▶Pre-approval
▶Re-finance ▶Debt Consolidation
▶Bad or No Credit OK ▶Self-employed OK
▶New Immigrant OK ▶Private Funds also OK

We GET YOU MORTGAGE even if Banks say 'No'

INSURANCE
▶All Insurance Companies ▶Life ▶Critical illness ▶Disability ▶Health & Dental ▶Travel ▶Visitors ▶Mortgage

RESP ▶Govt. grants ▶Highest scholarships paid ▶Flexible

RRSP ▶Excellent growth ▶Reduced taxes ▶Investment loans

Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES

Email: reliancefico@ymail.com, Fax: 647-342-2399

SATHYA SAIRAM DRIVING SCHOOL

- உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
- பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
- உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?

அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969

HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank

Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!

- No Lawyers Fee
- No Appraisal Fee
- No Discharge Fee

- 1st Time Home Buyers
- Pre-Approvals
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self-Employed Programs
- Over 20 years of experience with RBC
- Fast and Efficient Service

Always with a Smile!!!

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region

Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

REALTY EXECUTIVES

Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501

Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

சி.ஐ.பிசி வங்கியின் பொருளாதார நிபுணர் ஜெய்ரூபின் ரொறொன்ரோ பங்குச் சந்தையில் விலைகள் தொடர்ந்து விழும். 7000 புள்ளிகளைத் தொடும். வருட இறுதிக்குள் 9000 புள்ளிகளைத் தொடுவதும் கடினம் என்று ஒரு புதிய கணிப்பை மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் தெரிவித்திருந்தார். அவர் கருத்து பத்திரிகைகளில் பிரசுரம் ஆன பின்பு தொடர்ந்து சந்தை பொதுவில் ஏறுமுகமாகவே உள்ளது. இக்கட்டுரை எழுதப்படும் நேரம் (மார்ச் 25) ரொறொன்ரோ பங்குச் சந்தையின் குறியீட்டு அளவு 8800 புள்ளிகளாக உள்ளது. மந்த நிலை முடிந்து ஏறுமுகத்தின் ஆரம்பமா அல்லது தற்காலிக ஏறுமுகமாக இருந்து மீண்டும் ஒரு சரிவுக்கு ஆரம்பமா என்றும் தெரியவில்லை. ஆனால் நம்பிக்கை தெரிகின்றது. தொடர்ந்து ஏழு, எட்டு தினங்களாகக் காணப்பட்ட சந்தை ஏறுமுகம் பலருக்கும் ஒரு நம்பக்கையைக் கொடுத்துள்ளது. விலை இறங்குவதை எப்படிக் கணிக்க இயலாதோ, அப்படியே ஏறுவதையும் கணிக்க இயலாது. பொருளாதாரத்தில் நடக்க இருப்பதை முன்கூட்டியே தெரிவிக்கும் அறிவிப்பான் தான் பங்குச் சந்தை நிலவரம். பொருளாதாரம் மேம்படுமுன் பங்குச் சந்தை மேம்படும். பொருளாதாரம் சரிவுக்கு ஆளாகுமுன் பங்குச் சந்தையில் சரிவு ஏற்படும். சந்தையில் நேரத்தைக் கணித்து இறங்கி இலாபம் சம்பாதிப்பது என்பது நூற்றில் ஒருவருக்கு வேண்டுமானால் இயலக்கூடியதாக இருக்கலாம். பொதுவில் பலருக்கும் அத்தகைய அணுகுமுறை நன்மை பயப்பதில்லை. சந்தையில் நீண்டகாலம் இருக்கும் போது பொதுவில் இலாபம் ஏற்படும் என்று சரித்திரம் தெரிவிக்கின்றது. இருபது வருடங்கள் பங்குச் சந்தையில் இருந்து நட்டம் அடைந்தவர் இல்லை என்று சொல்லலாம். ஏன் பத்தாண்டுகளில் கூட நட்டம் வருவதில்லை. வருடம் குறையக் குறைய இலாப நட்டங்களைக் கணிப்பது என்பது மிகச் சிரமம் ஆனதாக இருக்கும்.



**பெரி. முத்துராமன்**

நண்பர் ஒருவர் தங்கத்தைப் பற்றி எழுதுங்கள் என்று விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார். என்னிடம் சொன்ன ஒருவரைப் போல், தேவையுள்ள பலபேர் சொல்லாமல் இருக்கலாம். அத்தகையோருக்காக தங்கத்தைப் பற்றிய சில குறிப்புக்களை இங்கே தருகின்றேன்.

அமெரிக்க டொலர் பலவீனம் அடையும் போதெல்லாம் தங்கவிலை ஏறிவந்துள்ளது. பங்குகளின் விலைகளில் சரிவு ஏற்படும் போதும் தங்கத்தின் விலை ஏறிவந்துள்ளது. தங்கத்தை உலகம் முழுவதும் பாதுகாப்பான முதலீடாகக் கருதுகிறார்கள். நம்மக்களுக்குத் தங்கத்தின் மேல் இருக்கும் ஆசையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

என்னுடைய நண்பர், அவரின் திருமணத்திற்கு முன் சொன்ன வார்த்தைகள் தான் நினைவுக்கு வருகின்றது. அவர் இன்றைய தமிழ்நாட்டு எழுத்தாளர்களில் மிகவும் பிரபல்யமான ஒருவர். பெயரைச் சொல்வது சரியில்லை. அவரின் வருங்கால மனைவி மூன்று தங்கங்களால் நிறைந்தவராக இருக்கவேண்டும் என்று என்னிடம் சொன்னார். அதை அப்போதே ஒரு சிறுகதையாக 'அமுதசுரபி' என்ற பத்திரிகையில் எழுதியிருந்தேன். அந்த மூன்று தங்கங்கள் என்னவென்றால் 1. தங்கமான குணம் 2. தங்கமான நிறம், 3. உடல்நிறைய தங்கம்.

தங்கத்தின்மேல் நம்மவருக்கு உள்ள ஆசையை வெளிப்படுத்த இன்னும் சொல்ல வேண்டுமா என்ன?

அத்தகைய தங்கத்தை நீங்கள் கனடாவில் சேமிப்புக்கு என்று வாங்கலாம். ஸ்கோஷிய வங்கியில் கிடைக்கின்றது. அருகில் உள்ள கிளையை அணுகினால் விபரம் கிடைக்கும். தங்கம் மட்டும் இன்றி வெள்ளியையும் ஸ்கோஷியா வங்கியில் வாங்கலாம். ஆர். ஆர். எஸ். பி போன்றவற்றிலும் சர்டிபிகேட்டுகளாக தங்கம் வெள்ளி போன்றவற்றை வாங்கி வைத்திருக்கலாம். தேவைப்படும்போது சர்டிபிகேட்டுகளை கட்டித் தங்கமாகவோ, வெள்ளியாகவோ மாற்றிக் கொள்ளலாம். அல்லது பணமாக மாற்ற நினைக்கும் போது அன்றைய விலையில் சர்டிபிகேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் தங்கத்தை ஸ்கோஷியா வங்கியிலேயே கொடுத்து கனடிய டொலர்களாக மாற்றிக் கொள்ளலாம்.

தனிப்பட்ட முறையிலும், தங்கம் மற்றும் வெள்ளி போன்ற விலைஉயர்ந்த உலோகங்களை ஸ்கோஷியா வங்கியில் பொருளாகவோ, பத்திரமாகவோ (சர்டிபிகேட்) பெற்றுக் கொள்ளலாம். வாங்கும், விற்கும் தினத்தைப் பொறுத்து விலைகள் மாறுபடும். வங்கியிலேயே பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு என்று சர்டிபிகேட்டுகளுக்கு ஒரு சிறிய தொகை சேவைக்கட்டணமாக, சர்டிபிகேட்டுகளை மாற்றும்போதோ, அல்லது திரும்ப வங்கியில் விற்கும் போதோ வசூலிக்கப்படுகின்றது. மாநில விற்பனை வரி (PST) சில மாநிலங்களில் உள்ளது. ஆனால் GST / HST கிடையாது. சர்டிபிகேட்டுகளுக்கு எந்த விற்பனை வரியும் இல்லை. தங்க நாணயங்களையும், வெள்ளிக் கட்டிகளையும் ஸ்கோஷியா வங்கிகளை ஒன்றின் மூலம் தான் வாங்க வேண்டும். அதற்கு வங்கிக் கிளைக்கு என்று ஒரு சிறு தொகையைச் சேவைக் கட்டணமாகக் கொடுக்க வேண்டியிருக்கும். உங்களின் அடையாள அட்டைகள் இரண்டை வங்கி அலுவலர் விற்குமுன் பார்க்க விரும்புவர்.

நகைக்கு என்று தங்கம், வெள்ளியை வாங்குகிறீர்களோ இல்லையோ, சேமிப்புக்கு என்று ஒரு பகுதியை பத்துசதவீதம் என்று வைத்துக் கொள்வோமே. தங்கம், வெள்ளியில் முதலீடு செய்யலாம். இதுவும் ஒருவகை Diversification என்று சொல்லப்படும். பலதரப்பட்ட சேமிப்பாகும். மேலும் தங்கத்தில் முதலீடு செய்வதைப்பற்றி அறிய விரும்பினால் பார்க்க வேண்டிய இணையதளம் www.scotiamocatta.com. ஆர்.ஆர்.எஸ்.பி. யில் தங்கம் வெள்ளியை வைத்திருப்பது பற்றி மேலும் விபரம் அறிய தொலைபேசி எண் - 1 800 263 3430.



மொத்தத்தில் உங்களுடைய சேமிப்புக்களை பற்றிக் கருத்துக் கேட்கவும், ஆலோசனை பெறவும் இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண்: 416.439.3040 Ext. 2010.

# ஒன்ராரியோ வரவுசெலவுத்திட்டம்

இன்று வேலைவாய்ப்புக்களை உருவாக்குகின்றது நாளை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்றது

மக்கின்ரி அரசாங்கம் 32.5 பில்லியன் டொலரை கட்டமைப்பில் முதலீடு செய்கின்றது. விற்பனை வரிச் சீர்திருத்தத்தைப் பிரேரிக்கின்றது. மக்களுக்கு 10.6 பில்லியன் டொலர் வரியுதவியை வழங்குகின்றது. மார்ச் 26, 2009

செய்தி

மக்கின்ரி அரசாங்கத்தின் 2009 வரவுசெலவுத் திட்டம், பூகோளப் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கான ஒரு திட்டத்தினை வடிவமைப்பதுடன், ஒரு மேலும் செழிப்பான எதிர்காலத்தை எய்தும் வகையில் ஒன்ராறியோவை உன்னத நிலைக்கு எடுத்துச் செல்கின்றது.

பொருளாதாரத்தைத் தூண்டுவதற்கென அடுத்த இரண்டு வருடங்களுக்கு 34 பில்லியன் டொலரை ஒன்ராறியோ அரசாங்கம் முதலீடு செய்கிறது. உரிய நேரத்தில் உரிய இலக்குடன் மேற்கொள்ளப்படும் இந்த முதலீடு, கட்டமைப்புச் செலவினத்துக்கான 32.5 பில்லியன் டொலரையும் திறன் பயிற்சிக்கான மேலதிக நிதியளிப்பான 700 மில்லியன் டொலரையும் உள்ளடக்கும். இது ஒன்ராறியோவின் குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் அடுத்த இரண்டு வருடங்களில் 300,000க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்களைப் பாதுகாக்கும் அல்லது உருவாக்கும்.

அரசாங்கமானது Ontario Child Benefit (OCB)இன் காலவரையறையை இரண்டு வருடங்கள் முன்னதாகத் துரிதப்படுத்தவும், சமூக உதவிக் கொடுப்பனவை அதிகரிக்கவும், சமூகவுதவி இல்லங்களின் கட்டமைப்பில் முதலீடு செய்யவும் பிரேரிக்கின்றது.

இந்த வரவுசெலவுத் திட்டமானது ஜூலை 01, 2010இல் ஒரு தனி, 13 சதவீத பெறுமானம் சேர் விற்பனை வரியை முன்மொழிகின்றது. மக்கின்ரி அரசாங்கம் அடுத்து வரும் மூன்று வருடங்களில் மக்களுக்கு 10.6 பில்லியன் டொலர் வரியுதவியைப் பிரேரிக்கின்றது. மாறும் பணக் கொடுப்பனவான 4 பில்லியன் டொலரையும் நடைமுறையிலிருக்கும் நிரந்தர வரியுதவியையும் இது உள்ளடக்கும். வியாபார வரிகளும் மூன்று வருடங்களில் 4.5 பில்லியன் டொலரால் குறைக்கப்படும்.

கூற்று

"இந்த வரவுசெலவுத் திட்டத்தினூடாக மக்கின்ரி அரசாங்கமானது பூகோள பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுகிறது" என்று நிதியமைச்சர் டுவைட் டங்கன் கூறினார். "ஆனால் அதற்கு மேலாகவும் நாங்கள் செய்கின்றோம். எமது விரிவான வரிச் சீர்திருத்தத்தின் ஊடாக ஒன்ராறியோவை வலுவான, மேலும் சிறந்த ஒரு மாகாணமாக நாம் ஆக்குகின்றோம். இதனால் மீண்டும் செல்வம் கொழிக்கின்றபோது எமது குடும்பங்களுக்கும் வியாபாரங்களுக்கும் நாம் உதவுவோம். வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், எதிர்கால வளர்ச்சியை நோக்கி எமது பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும் எம்மால் செய்யக்கூடிய மிக முக்கியமான ஒரேயொரு காரியம் இதுவாகும்.

உடனடி உண்மைகள்

இன்று வேலைவாய்ப்புக்களை பாதுகாப்பதும் உருவாக்குவதும்

- இந்த முதலீடு 2009-10இல் சுமார் 146,000 வேலைவாய்ப்புக்களையும், 2010-11இல் 168,000 வேலைவாய்ப்புக்களையும் உருவாக்குகின்றது. அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் கட்டமைப்புச் செயற் திட்டங்களுக்கென மக்கின்ரி அரசாங்கம் 32.5 பில்லியன் டொலரை ஒதுக்குகின்றது.
- பதிய திறன் பயிற்சி, கல்வி முன்னெடுப்புக்கள், நடைமுறையிலுள்ள செயற் திட்டங்களை மேம்படுத்தல் என்பவற்றிற்கென அடுத்துவரும் இரண்டு வருடங்களில் சுமார் 700 மில்லியன் டொலரை இந்த வரவுசெலவுத் திட்டம் பிரேரிக்கின்றது.
- இளைஞர்களுக்கான கோடைகால வேலை வாய்ப்புக்களுக்கென நிதியளிப்பை அரசாங்கம் ஏறக்குறைய 90 மில்லியன் டொலருக்கு அதி-

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**
For All your Real Estate & Investments Needs!
**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**




## NEW TO CANADA?

The Government of Canada is committed to helping newcomers. Find out about the services that can help you succeed in Canada. Visit **www.cic.gc.ca/new**

## VOUS ÊTES NOUVEAU AU CANADA?

Le Gouvernement du Canada s'engage à aider les nouveaux arrivants. Découvrez les services qui peuvent vous aider à réussir au Canada. Visitez **www.cic.gc.ca/nouveau**





Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

Canada


# கணினியின் வரலாறு கணினியின் தலைமுறைகள்

கணினியை உருவாக்கும் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட பலம் பல முன்னேற்றங்களில், சில மிக முக்கியமானவை. அவை கணினியின் திறன், வேகம், நம்பகத்தன்மை போன்றவற்றை அதிகரித்தன. விலையை கீழே குறைத்தன எனலாம். இந்த முக்கிய தொழில் நுட்பங்களின் அடிபடையில் கணினினியின் தலைமுறைகளை பிரிக்கலாம். ஒவ்வொரு தலைமுறை கணினியும் அதன் தரத்திற்கேற்ப செயல்பாடுகள் அமையபெ-பற்று இருந்தது. அந்தந்த கால கட்டத்தில் அந்த கணினியின் சிறப்பு சிறந்து விளங்கப் பெற்றதாக நாம் காண்கிறோம். அதன் சிறப்புகளை காண்போம்.

**முதல் தலைமுறை 1940 - 1956 வேற்றிடக்குழாய்கள்**




வேற்றிடக்குழாய்கள் (Vaccum Tubes) மின்சுற்றிலும் காந்த உருளையை நினைவாகவும் பயன்படுத்திய கணினிகளை முதல் தலைமுறை என்கிறோம். இவை அளவில் பெரியதாகவும், அதிக வெப்பத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தன.

இவற்றை இயக்க அதிக அளவு மின்சாரம் தேவைப்பட்டது. அதிக அளவு வெப்பம் உருவானதால் கணினியின் பாகங்கள் அடிக்கடி பழுதுபட்டன. இவை கணினி மொழியில் (Machine Language) மட்டுமே செயல்பட்டன. தகவல்கள், துளை அட்டைகள் மற்றும் காகித நாடாக்கள் மூலம் உள்ளீடு (Input) செய்யப்பட்டன. வெளியீடுகள் (Output) அச்சு பொறி வழியாக அச்சிடப்பட்டு வெளிவந்தன. இந்த கணினிகள் ஒரு சமயத்தில் ஒரு கணிப்பை மட்டுமே செய்யும் திறன் பெற்றவை. இந்த ஒரு கணிப்பு (One Calculation) பின்னர் வந்த கணினி மாற்றி அமைக்க பெற்றது.

யூனிவர்சல் ஆட்டோமேடிக் கம்பியூட்டர் (Universal Automatic Computer - UNIVAC) மற்றும் எலக்ரோனிக் நியூமரிக்கல் இன்டக்ரேடர் அண்ட் கால்குலேட்டர் (Electronic Numerical Integrates and Calculator - ENIAC) குறிப்பிடத்தக்க முதல் தலைமுறைகள்.

**இரண்டாம் தலைமுறை - 1956 - 1963 டிரான்சிஸ்டர்**




## - Bala -

வேற்றிட குழாய்களுக்கு பதிலாக டிரான்சிஸ்டர் (Transistor) பயன்படுத்தப்பட்டது. இதனால் அளவும் தேவையான மின்சாரமும் குறைந்தது. டிரான்சிஸ்ரரும் அதிக வெப்பத்தை வெளியிட்டதால், கணினி சில சமயம் தவறாக செயல்பட்டது. ஆனால் முதல் தலைமுறையில் பாரிய முன்னேற்றம் இருந்தது.

இதில் உள்ளீட்டிற்கு (Input) துளை அட்டைகளும், வெளியீட்டிற்கு (Output) அச்சு பொறிகளும் பயன்பட்டன. கணினி மொழியில் இருந்து அசெம்ப்ளி மொழிக்கு (Assembly Language) முன்னேறியது. இதில் கட்டளைகள் சிறு சொற்கள் மூலம் கொடுக்கப்பட்டன.

இந்த காலகட்டத்தில்தான் கோபால் (Cobol) ஃபோர்ட்ரான் (Fortran) போன்ற உயர்நிலை மொழிகள் (High Level Language) தொடக்கப் பதிப்புகள் உருவாக்கப்பட்டன. இந்த தலைமுறையில் நினைவகத்திற்கு காந்த வளையங்கள் (Magnetic core) பயன்படுத்தப்பட்டன. தரவுகளை மட்டுமில்லாமல் கட்டளைகளையும் நினைவகத்தில் வைக்கும் தொழில் நுட்பம் அறிமுகமானது.

**மூன்றாம் தலைமுறை 1964 - 1971 ஒருங்கமை சுற்றுகள்**

பல டிரான்சிஸ்களை குறுக்கி, நரே சில்லில் (Chip) அடக்கி உருவாக்கப்பட்டவை ஒருங்கமை சுற்றுகள் (Integrated Circuits). இவை கணினியின் திறனையும் வேகத்தையும் மிகவும் அதிகப்படுத்தி ஒரு தலைமுறை மாற்றத்தையே ஏற்படுத்தின. மேலும் விசை பலகையும் (Keyboard) திரைச் சாதனமும் (Monitor) உள்ளீட்டு, வெளியீட்டு சாதனங்களாக வந்தன. கணினியின் பல பகுதிகளையும் நிர்வகிக்கும் இயக்க அமைப்புகள் (Operating System) தோன்றின. இதனால் பல கணக்குகளுக்கு ஒரே சமயத்தில் தீர்வு காண முடிந்தது.

**நான்காம் தலைமுறை 1971 இன்றுவரை**

நுண்செயலி பலபல ஒருங்கமை சுற்றுகளை ஒரே சில்லில் உள்ளடக்கி நுண் செயலிகள் (Micro Processor) உருவாக்கப்பட்டன. இன்றளவும் இத்தலைமுறை கணினிகளை தான் நாம் உபயோகத்தில் கொண்டுள்ளோம். இவ்வகை கணினியின் திறன் ஒரு புதிய வகை நிலைக்கு கொண்டு சென்றது என்றால் மிகையாது. மேலும் பல கணினிகள் ஒன்று சேர்ந்து வலைகள் உருவாக்கப்பட்டன. இதனால் கணினியின் கூட்டு செயல்பாடுகள் தொடங்கியது. இந்த கூட்டு செயல்பாட்டின் தொடக்கத்தினால் பல புதிய உத்திகளும் உருவாக பெற்றன. இந்த கூட்டுருவின் அளவற்ற பயனால் இன்றைய இணையம் (Internet) உருவானது.

**ஐந்தாம் தலைமுறை**



இனி வரும்காலம் செயற்கை அறிவு தானாக சிந்தித்து செயல்படுவது போல் தோன்றும் அமைப்பு செயற்கை அறிவு (Artificial Intelligence) கொண்டது எனப்படுகிறது. கணிப்பொறி இப்படி செயல்படவேண்டும் என்ற நோக்கில் ஆராச்சிகள் நடந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக ரோபோர்ட் களை (Robot) கூறலாம். இவை ஆராய்ச்சி கட்டத்திலேயே இருப்பதால் இதில் தொடக்கம், வளர்ச்சி, செயல்பாடு மற்றும் திறன் அமைப்புகளை பின்னர் பார்க்கலாம்.

அடுத்து நாம் படிக்க இருப்பது, தரவு (Data), கட்டளைகள் (Instructions)

தொடரும்....


## APPLEMORE AUTOMOTIVE




உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# உறவுகள் வேண்டுமா உங்களுக்கு!

உங்கள் வாழ்க்கையில் உறவுகளுக்கு நீங்கள் கொடுக்கும் இடத்தைப் பார்த்தால், உங்கள் வாழ்க்கைத் தரத்தை உறவுகள்தான் நிர்ணயிக்கின்றன என்று நினைக்கத் தோன்றுகிறது.

உங்கள் எல்லா உறவுகளுக்கும் இருப்பது ஒரேயோர் அடிப்படை தான். அது என்ன தெரியுமா? உங்களுக்கு ஏதோ ஒரு தேவை இருக்கிறது. அந்தத் தேவையை நிறைவேற்றத் தான் உறவுகளை உருவாக்கிக் கொள்கிறீர்கள். உங்களில் சிலர், "இல்லை. நான் என் உறவுகளுக்குத் தருகிற நிலையில் இருக்கிறேனே தவிர, பெறுகிற நிலையில் இல்லை" என்று சொல்லக்கூடும். பெறுவது என்பது ஒரு தேவையின் அடிப்படையில் எப்படி நிகழ்கிறதோ, அதேபோல நீங்கள் தருவதுகூட ஒரு தேவையின் அடிப்படையில்தான். யாருக்காவது எதையாவது தரவேண்டுமென்பது, உங்களுக்கிருக்கும் தேவைகளில் ஒன்று.

உறவுகளை நேரடியாகவும் நேர்மையாகவும் கையாளுங்கள்

எனவே மனிதர்கள் உறவுகளை உருவாக்கிக் கொள்வதன் பின்னணியில் இருப்பவை, அவர்களுடைய தேவைகள்தான், உடல் தேவைகள் - உள்ளம் சார்ந்த தேவைகள் என்று தேவைகள் பலவிதம். உறவுகளும் பலவிதம். ஒரு தேவை கருதி நீங்கள் உருவாக்கிக் கொள்கிற உறவு, அந்தத் தேவை நிறைவேறாத போது சீர்குலைந்து போகிறது. எனவே உறவுகளைப் பொறுத்தவரை மூடி மறைக்காமல் - சுற்றி வளைக்காமல் நேரடியாகவும் நேர்மையாகவும் கையாள்வது அவசியம்.

மனிதன், தனக்குள் ஒரு முழுமையை உணராத போது அந்தக் குறையை உறவுகள் மூலம் இட்டு நிரப்ப எண்ணுகிறான். தனக்குள் இருக்கும் எதிர்பார்ப்புகள் அந்த உறவின் மூலம் நிறைவேறாத போதுதான் ஏமாந்து போனதாய் ஏங்குகிறான். உண்மையில், உங்கள் வாழ்க்கை தன்னளவிலேயே முழுமையானதுதான். அதனை உணராமல், நீங்கள் உருவாக்கிக் கொள்கிற எதிர்பார்ப்புகள் உங்களை எங்கெங்கோ, எதை எதையோ தேடவிட்டு, ஏமாந்து போனதாய் வாடவும் விடுகிறது.

கடவுளையே கல்யாணம் செய்து கொண்டால்கூட உங்கள் குறை தீராது

மனிதர்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்புகளின் அளவைப் பாருங்கள். அதை நிறைவேற்றுவது இன்னொரு மனிதருக்கு சாத்தியமே இல்லை. அதுவும் ஆண் பெண் உறவுகளில், உங்கள் எதிர்பார்ப்புகளின் விஸ்தீரணம் எல்லை கடந்து போகிறது. எந்த அளவுக்கென்றால், நீங்கள் கடவுளையே கல்யாணம் செய்து கொண்டால்கூட, கொஞ்ச காலத்தில் அவர் உங்களைக் கைவிட்டு விட்டதாகக் குறைபட்டுக் கொள்வீர்கள். அந்த அளவுக்கு, நிறைவேற்றவே முடியாத எதிர்பார்ப்புகள் மனிதர்களுக்கு உண்டு. ஆனால் அந்த எதிர்பார்ப்புகளுக்கு எது மூலமாகத் திகழ்கிறது என்பதைப் புரிந்துகொண்டால், அற்புதமான உறவை உங்களால் உருவாக்க முடியும். ஒரு உறவைத் தொடங்குகிறபோது எதிர்பார்ப்புகள் பொதுவானவையாக இருக்கும். ஆனால் வாழ்வின் வெவ்வேறு படிநிலைகளில் எதிர்பார்ப்புகள் வேறுபடக்கூடும். இந்த எதிர்பார்ப்புகள் மனிதர்களிடம் மாறிக்கொண்டே இருப்பதால், அவை ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பில்லை. இரண்டு பேர்களுக்கிடையே உறவு உருவாகிறதென்றால் ஒரு மனிதர், தன் வாழ்வு முழுக்க ஒரேயொரு எதிர்பார்ப்பை மேற்கொண்டிருக்கக்கூடும். ஆனால் இன்னொருவருக்கோ, வாழ்க்கை குறித்த புரிதலும் அனுபவமும் மாறிக்கொண்டே இருப்பதால், எதிர்பார்ப்புகளும் மாறக்கூடும். இத்தகைய உறவுகள் பெரும் மோதலை ஏற்படுத்தும்.

இந்த உலகில் வேறெங்கும் நடக்கிற மோதல்களை விடவும் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நடக்கிற மோதல்கள் தான் அதிகம். ஒரே விஷயம் என்னவென்றால் வீட்டுக்குள் குண்டுகள் வீசிக்கொள்வதில்லை. எனவே, உங்களுக்கு அது கேட்பதில்லை. ஆனால், மௌனத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது ஏனென்றால், மனிதர்களின் எதிர்பார்ப்புகள் மாறுகின்றனவே தவிர அவை ஒரே சீரான வேகத்தில் மாறுவதில்லை.

இன்னொருவரை உங்கள் மகிழ்ச்சிக்குப் பயன்படுத்துகிறீர்கள்

எனவே, அவற்றை நிர்வகிப்பது, வித்தை காட்டுவது என்றெல்லாம் நீங்கள் தொடங்கினால், அவற்றை நூறு சதம் அனுமானித்து அழகானதோர் உறவை மேற்கொள்வது சாத்தியமேயில்லை. மற்றவர்களின் மனதில் என்ன ஓடுகிறது என்பதை கண்டுபிடித்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவே எப்போதும் முயன்று கொண்டிருந்தால் உங்கள் வாழ்க்கை சிதறிப்போகும். இது முடிவே இல்லாத சர்க்கஸ் காட்சியாக நடக்கும். இதனை ஓர் அளவுக்கு செய்யவேண்டுமே தவிர மிகச்சிறந்த உறவுக்கு இதுவே அடிப்படையல்ல.

அடிப்படையில் நீங்கள் ஏன் உறவை நாடுகிறீர்கள்? மகிழ்ச்சியும் ஆனந்தமும் வேண்டும் என்று தான் உறவுகளைத் தேடுகிறீர்கள். இதையே வேறு விதமாகச் சொல்வதென்றால், இன்னொரு மனிதனை உங்கள் மகிழ்ச்சிக்கு வழியாகப் பயன்படுத்த முயல்கிறீர்கள். இன்னொருவரை உங்கள் மகிழ்ச்சிக்கு வழியாகப் பயன்படுத்துகிறீர்கள். என்றால் என்ன பொருள்? யாராவது உங்கள் மகிழ்ச்சியைத் தொடங்க வேண்டும். மகிழ்ச்சியை உந்தித் தள்ள வேண்டும், தானாகத் தொடங்காது என்று பொருள்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள், தேடாதீர்கள்

மகிழ்ச்சி உங்கள் இயல்பாக இருக்குமானால், உங்களுக்கு உறவுகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தத்தான் தேவைப்படுமே தவிர, மகிழ்ச்சியைத் தேடுவதற்கு அல்ல. உறவுகளை உருவாக்கி இன்னொருவரை கசக்கிப் பிழிந்து நீங்கள் மகிழ்ச்சியைப் பெற முயல்வது சிறிது காலத்திற்கு பிறகு, வலி மிகுந்த உறவாகவே இருக்கும். ஆனால், நீங்களே மகிழ்ச்சிமயமானவராக இருந்து அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக உறவுகளை உருவாக்கினால் யாரும் உங்களைப் பற்றி புகார் சொல்லப்போவதில்லை. ஏனெனில், நீங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறீர்களே தவிர இன்னொருவரிடமிருந்து பெற முயல்வதில்லை.


எனவே, உங்கள் வாழ்க்கையென்பது மகிழ்ச்சியைத் தேடுகிற பயணமாக இல்லாமல், மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்குமானால், உங்கள் உறவுகள் இயல்பாகவே அற்புதமாக இருக்கும். பல லட்சம் உறவுகள் உங்களுக்கு இருந்தாலும், அவை நன்றாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்கும்போது மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை ஈடுசெய்கிற கோமாளித்தனம் இருக்காது. எப்படியும் அவர்கள் உங்களுடன் இருக்க விரும்புவார்கள். நீங்கள் அவர்களை கசக்கிப் பிழிந்து அதன் மூலம் மகிழ்ச்சி பெற விரும்பினால் அவர்கள் உங்களிடமிருந்து விலக முயல்வார்கள். மகிழ்ச்சியின் தேடல் என்ற நிலையிலிருந்து மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்ற நிலைக்கு வாழ்க்கையை மாற்ற வேண்டும்.

ஓர் உறவு தேவைப்படுகிற நிலையில்தான் உங்கள் உடல் அமைப்பு இப்போது உள்ளது. ஓர் உறவு தேவைப்படும் நிலையில்தான் உங்கள் மனதின் தன்மை இப்போது உள்ளது. ஓர் உறவு தேவைப்படும் நிலையில்தான் உங்கள் உணர்வுகள் உள்ளன. சற்று ஆழமாகப் பார்த்தால், ஓர் உறவு தேவைப்படும் நிலையில்தான் உங்கள் சக்தி நிலைகள் உள்ளன. உங்கள் உடல் ஊர் உறவைத் தேடிப் போனால், அது பாலியல் என்று அறியப்படுகிறது. மனம் உறவுகளைத் தேடிப் போனால் அது உறவு நிலை என்று அழைக்கப்படுகிறது. உணர்வுகள் உறவுகளைத் தேடிப் போனால், அது அன்பு என்று அழைக்கப்படுகிறது. உங்கள் சக்திநிலை உறவுகளைத் தேடிப் போனால், அது யோகா என்று அழைக்கப்படுகிறது.

இன்னொருவரோடு எப்படி இரண்டறக் கலப்பது?

இந்த முயற்சிகள் எல்லாமே ஏதோ ஒன்றோடு இரண்டறக் கலந்துவிடுவதற்காகத்தான். ஏனெனில், ஒருவிதத்தில் நீங்கள் இப்போது இருக்கிற உங்கள் தன்மை உங்களுக்குப் போதுமானதாக இல்லை. இன்னொருவரோடு எப்படி இரண்டறக் கலப்பது? உடலளவில் முயன்றிருக்கிறீர்கள். அது நிகழ்வது போல் தோன்றுகிறது. ஆனால் பிரிய நேரிடுகிறது. மனதளவில் முயன்றிருக்கிறீர்கள். பலமுறை சேர்ந்துவிட்டதாகவே நினைத்திருக்கிறீர்கள். ஆனால் இரண்டு மனங்கள் ஒரு போதும் ஒன்றாக முடியாது. உணர்வு நிலையில் இரண்டு பேர் ஒன்றாக சங்கமித்துவிட்டதாகப் பலமுறை நினைத்தீர்கள். ஆனால் பிரிவினைக் கோடுகள் மிக எளிதாகத் தோன்றிவிடுகின்றன.

எனவே, ஏதோ ஒன்றோடு முழுமையாகக் கலக்க வேண்டுமென்கிற விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவது? இப்போதிருக்கிற தன்மையில் போதாமையை உணர்கிற போதுதான் இன்னொன்றோடு கலக்க வேண்டுமென்கிற ஏக்கம் தோன்றும். இன்னொருவருடன் ஒன்று சேர்வதனாலேயே அந்த ஏக்கம் நிறைவேறப்போவதில்லை. ஏனெனில், அந்த ஏக்கம் மேலும் மேலும் வளரும். உடல் அளவிலோ, உள்ள அளவிலோ உணர்வுகளின் அளவிலோ அதை நிறைவேற்ற முடியாது. இவை மூன்றையும் நீங்கள் முயன்றிருக்கிறீர்கள். அது ஒரு நெருக்கமான அனுபவத்தை ஏற்படுத்துகிறதே தவிர ஒன்று கலக்கச் செய்வதில்லை. அந்த ஏக்கம் நீடிக்கிறது. அந்த ஏக்கமே சிலருக்கு இனிக்கிறது. அந்த ஏக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறார்கள். ஆனாலும் அந்த ஏக்கம், ஏதோ ஒரு நாள் நிறைவேற வேண்டும்.



சத்குரு வாசுதேவ்

உங்கள் வாழ்வில் சில நேரம் இதை நீங்கள் உணர்ந்திருக்கக் கூடும். மிக ஆனந்தமாகவோ, அன்பாகவோ, பரவசமாகவோ, நீங்கள் உணர்ந்திருந்து உங்கள் சக்தி நிலை ததும்பிக் கொண்டிருக்கும்போது உங்கள் தன்மை விரி-வடைவதை உணர்வீர்கள். "நீங்கள்" என்று அழைக்கப்படுவது என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

உறவுகள் என்றால் என்ன?

"இது நான். இது நான் இல்லை" என்று நீங்கள் உணர்வதற்கு எது அடிப்படை? உங்கள் உணர்ச்சிதான் அடிப்படை. உங்கள் உணர்ச்சி வளையத்திற்கு உட்பட்டவை அனைத்தையும், நீங்கள் என்று உணர்கிறீர்கள். உங்கள் உணர்ச்சி வளையத்திற்கு வெளியே இருப்பவற்றை வேறொன்று என உணர்கிறீர்கள். உங்களிடமிருந்து அன்னியமாய் வேறொன்று என்பது, எப்போதுமே நரகமாகத்தான் இருக்கும். எனவே, இதுதான் காரணம். நரகத்தை நீங்கள் அனுபவிக்க விரும்பாத காரணத்தால் மனித குலத்தின் ஒரு சிறு பகுதியையேனும், உங்களில் ஒரு பாகமாக உணர விரும்புகிறீர்கள். இன்னொருவரையோ, இன்னொன்றையோ உங்கள் பாகமாக உணர விரும்புகிற ஏக்கத்திற்குத்தான் உறவுகள் என்று பெயர். எனவே, உங்கள் உணர்வு வளையத்திற்குள் இருப்பதையெல்லாம், நீங்கள் என்று கருதுகிறீர்கள். வேறாக நீங்கள் உணர்பவை அனைத்தும் நரகம் என்றால், உங்களில் ஒரு பாகமாக உணர்பவை சொர்க்கமாகத்தான் இருக்கவேண்டும். அந்த சொர்க்கத்தை உங்களுக்குள் உணர்வதற்கு, உறவுகள் இருந்தே தீரவேண்டிய அவசியம் என்ன?

யோகா என்பதே இதுதான். யோகா என்ற சொல்லுக்கு பொருந்துதல் என்று பொருள். ஓர் உறவின் பின்புலத்தில் எந்த விதமான ஏக்கம் இருந்தாலும் சரி. நீங்கள் உடலளவில் முயன்றாலும் மன அளவில் முயன்றாலும் ஏக்கம்தான் மிஞ்சும். ஒன்றுபட்ட உணர்வை நீங்கள் அடையவே முடியாது. ஒருமையின் சில விநாடிகளை உணர்வீர்களே தவிர, அது நிகழாது. உங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் உங்களில் ஒரு பாகமாக உணர்வீர்களேயானால், உங்கள் தன்மையே மிக வித்தியாசமானதாக இருக்கும். இப்போது உறவுகள் எல்லாம் அடுத்தவர்களின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்கான ஒரு வழியாகத் தான் இருக்கும். ஏனெனில் உங்களுக்கென்று தனியாக எந்தத் தேவையும் இராது. உங்களுக்கென்று நிர்ப்பந்தங்கள் இல்லாதபோது நீங்கள் எதையுமே விழிப்புணர்வோடுதான் செய்வீர்கள். ஓர் உறவை உருவாக்கிக் கொள்கிற நிர்ப்பந்தம் உங்களிடம் முடிவடையும் போது விழிப்புணர்வோடுதான் செயல்படுவீர்கள். இப்போது உறவுகள் எல்லாம் உண்மையான ஆசீர்வாதங்களாக விளங்கும். ஏக்கங்கள் இருக்காது. போராட்டங்கள் இருக்காது. உங்கள் உறவுகளை ஆசீர்வாதங்களாய் ஆக்கிக் கொள்வது உங்கள் கைகளில்தான் இருக்கிறது.


## Sadhguru's Inner Engineering Program in Detroit , USA

***Date: 1 - 5 April 2009***

***Location:*** ***Hellenic Cultural Center***
***36375 Joy Rd, Westland, MI 48185 - USA***

***Free Intro talk: Wed 1 Apr - from 7pm - 8pm - all are welcome***

***Session Info & timings: (Attendance on 5 days is mandatory.)***

***Weekdays: 7:00pm - 10:15pm, Saturday & Sunday: 8:00am - 6:00pm***

***for more info call: 1-866-424 ISHA (4742) or 248 790 2486***
***Email: detroit@ishafoundation.org Website: www.ishafoundation.org***

தமிழில் தொடர்புகளுக்கு: ***416.300.3010*** ***www.ishayoga.org***

CANADIAN VISAS GUARANTEED!

VISAS CANADIENS GARANTIS!

If you believed this ad, you are at risk of being cheated by a dishonest immigration consultant. Find out how you can protect yourself at **www.cic.gc.ca/fraud**

Si vous croyez à ce genre d'annonces, vous pourriez être victime de fraude de la part d'un conseiller en immigration malhonnête. Voyez comment vous protéger au **www.cic.gc.ca/fraude**

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

Canada


# ஒன்ராரியோ வரவு...

**02ஆம் பக்கத்தொடர்ச்சி**

கரிக்கின்றது. உயர் தேவைகளைக் கொண்ட சமூகங்களின் இளைஞர்கள் உட்பட, எதிர்வரும் கோடை காலத்தில் 100,000க்கும் அதிகமான இளைஞர்களுக்கு இது பயனளிக்கும்.

சிறுவர்களிலும் குடும்பங்களிலும் முதலீடு செய்தல்

115,000 குடும்பங்களுக்கு, மேலதிக கொடுப்பனவுகளூடாக அடுத்த மூன்று ஆண்டுகளில் 400 மில்லியன் டொலர் குழந்தை உதவிப் பணத்தை அரசாங்கம் வழங்குகிறது. இதன் மூலம் எதிர்வரும் ஜூலை மாதம் குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களின் ஒரு குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு ஒன்ராறியோ சிறுவர் உதவிப் பணமாக 1,100 டொலர் வரை வழங்கும். 50,000 சமூகவுதவி இல்ல அலகுகளை புதுப்பிப்பதற்கும், குறைந்த வருமானமுள்ள முதியோர் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கென 4,500 பதிய இயலுமான வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கும் அரசாங்கம் 1.2 பில்லியன் டொலரை வழங்குகிறது.

வேலைவாய்ப்பை நாளை உருவாக்குதல்

நாளைய தினத்துக்கான பசுமையான வேலைவாய்ப்புக்கள்

- பசுமைச் சக்தி மற்றும் பசுமைப் பொருளாதாரச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் முன்னெடுப்புக்களை உருவாக்குவதற்கு மத்திய அரசின் Green Infrastructure Fundஇன் பங்குக்குப் பொருந்தும் வகையில் சுமார் 390 மில்லியன் டொலரை அரசாங்கம் வழங்குகிறது.

புதியன கண்டுபிடித்தலைத் துரிதப்படுத்தல்

- பசுமைத் தொழில் நுட்பத்திற்கான முதலீடுகளை உள்ளடக்கும் ஒரு பதிய Emerging Technologies குரனெக்கென அடுத்த ஐந்து ஆண்டுகளில் 250 மில்லியன் டொலரை இந்த வரவுசெலவுத் திட்டம் அறிவிக்கின்றது.

விரிவான வரிப் பொதி

- சட்டசபை அங்கீகாரம் கிடைத்தவுடன், ஜூலை 1, 2010 தொடக்கம், ஒன்ராறியோவை மேலும் சிறப்புடையதாக்கி, வேலைவாய்ப்புக்கு வழிகோலும் வகையில், ஒன்ராறியோ ஒரு நவீன தனி பெறுமானம் சேர் விற்பனை வரியை நோக்கி நகரும். சில்லறை விற்பனை வரியைவிட மேலும் சாதுரியம் மிக்க ஒரு பெறுமானம்சேர் வரி அமைப்பை நான்கு கனடிய மாகாணங்களும் 130 நாடுகளும் ஏற்கனவே தமதாக்கிக்கொண்டுள்ளன.
- புத்தகங்கள், சிறுவர்களின் உடைகள், காலணிகள், டயப்பேர்ஸ், கார் ஆசனங்கள், பாலகர்களின் கார் ஆசனங்கள், பெண்பாலாரது சுகாதாரப் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றிற்கு வரியின் எட்டு சதவீத மாகாண பாகத்திலிருந்து விலக்களிக்கப்படும்.
- புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடமைப்புக்கு உதவுமுகமாக, 400,000 டொலருக்குக் குறைந்த வீடுகள், மேலதிக வரிச் சுமைக்கு உள்ளாக்கப்படமாட்டா. 400,000 – 500,000 டொலர் பெறுமதிகளுக்கிடைப்பட்ட புதிய வீடுகளை வாங்குவோர் ஒரு விகிதாசார மீள் கொடுப்பனவைக் கோர முடியும்.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மக்கின்ரி அரசாங்கம் 10.6 பில்லியன் டொலரை தற்காலிக மற்றும் நிரந்தரவரி உதவியாக 10.6 பில்லியன் டொலரை பிரேரிக்கிறன்றது. இது நுகர்வோர், மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க உதவுவதுடன், ஒரு நிரந்தர சொந்த வருமான வரிக் குறைப்பை வழங்குவதற்கும், குறைந்த வருமானத்திலிருந்து நடுத்தர வருமானம் வரையுள்ள மக்களுக்கு, நடைமுறையிலுள்ள விற்பனை வரி மற்றும் சொத்துவரி உதவியை மேம்படுத்தவும் உதவும்.

- புதிய தனி விற்பனை வரிக்கு தம்மை சரிக்கட்டிக் கொள்ளும் வகையில் 160,000 டொலர் அல்லது அதற்குக் குறைவான வருமானமுள்ள தகுதியான குடும்பத்தினர் மூன்று கொடுப்பனவுகள் மூலம் மொத்தம் 1,000 டொலரைப் பெறுவர். 80,000 டொலர் அல்லது அதற்கு குறைவான வருமானமுள்ள தகுதியான தனியாட்கள் மூன்று கொடுப்பனவுகள் மூலம் மொத்தம் 300 டொலரைப் பெறுவர்.
- முதற் கொடுப்பனவு ஜூன் 2010இலும் இரண்டாவது டிசெம்பர் 2010இலும் மூன்றாவது ஜூன் 2011இலும் வந்துசேரும்.

மேலும் அரசாங்கம் பின்வருவனவற்றையும் பிரேரிக்கின்றது:

- கனடாவின் மிகக் கூடுதலான தாராள நிதி மீளளிப்பு விற்பனை வரிக் கொடுப்பனவினூடாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள மக்களுக்கு நிரந்தர வரியுதவி. இந்தப் புதிய வரியளிப்பு ஒவ்வொரு வயதுவந்தோருக்கும் குழந்தைக்கும் வருடாந்தம் 260 டொலர்வரை வழங்கப்படும்

- முதலாவது வரிக் கொடுப்பனவில் கனடாவில் ஒன்ராறியோவே மிகக் குறைந்த மாகாண வரிவீதமாக அமையும் வகையில் 1.1 பில்லியன் டொலர் வரிக் குறைப்பு.

வர்த்தக வளர்ச்சியடைந்த பங்காளிகள் மத்தியில் ஒன்ராறியோவை மிகச் சிறந்ததாக்கும் வகையில் இந்த வரவுசெலவுத் திட்டம் அடுத்த மூன்று வருடங்களுக்கு 4.5 பில்லியன் டொலர் வரிக் குறைப்பைப் பிரேரிக்கின்றது. பூரணமாக நடைமுறைப் படுத்தப்படும்போது, புதிய முதலீடுகளுக்கு கைத்தொழில் உலகிலுள்ள மிகச் சிறந்த அரச அதிகாரங்களில் ஒன்றாக ஒன்ராறியோவை ஆக்கும் வகையில், இந்த விரிவான வரிச் சீர்திருத்தப் பொதியானது புதிய வியாபார முதலீடுகள் மீதான எல்லைநிலை பயன் வரிவீதத்தை பாதியாகக் குறைக்கும். ஜூலை 1, 2010 தொடக்கம் அரசாங்கம் பின்வருவனவற்றை செயற்படுத்தும்:

- பொது Corporate Income Tax (CIT) வீதத்தை 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கும். அத்துடன் 2013 அளவில் அதனை 10 சதவீதத்தால் குறைக்கும்
- சிறு வியாபாரங்களுக்கான CIT வீதத்தை 5.5 சதவீத்திலிருந்து 4.5 சதவீதமாகக் குறைக்கும்
- விவசாயம், மீன்பிடி, சுரங்கக் கைத்தொழில், மரவேலை போன்ற வியாபாரங்கள் உள்ளடங்கலான துறைகளுக்கு உதவும் வகையில் ஒன்ராறியோ உற்பத்தி மற்றும் தொழிற்பாட்டு CIT வீதத்தை 12 சதவீத்திலிருந்து 10 சதவீதமாக்குவதனூடாக 16.7 சதவீதத்தால் குறைக்கும்
- வளர்ந்துவரும் சிறு வியாபாரங்களுக்கான தடைகளுக்கு கனடாவில் முற்றுப்புள்ளி வைக்கும் ஒரேயொரு சட்ட அதிகாரம் ஒன்ராறியோவாக இருக்கும் வகையில், சிறுவியாபார மிகைவரியை (Surtax) நீக்கும்
- Corporate Minimum Tax - CMT இலிருந்து மேலும் சிறிய மற்றும் நடுத்தர பருமன் கொண்ட வியாபாரங்களுக்கு விலக்களிக்கும். அத்துடன் நான்கு சதவீதத்திலிருந்து 2.7 சதவீதமாக CMTI குறைக்கும்.

பொறுப்புள்ள நிதி முகாமைத்துவம்

- பூகோள பொருளாதார நெருக்கடி அரச வருமானங்களைக் கணிசமான அளவு குறைத்துள்ளது, எதிர்வு கூறப்பட்ட நிதிப் பற்றாக்குறைக்கு, வருமானங்களின் கணிசமான வீழ்ச்சியும், பொருளாதாரத்தைத் தூண்டுவதற்கான இந்த குறுங்கால நடவடிக்கைகளும் காரணங்களாகும், இது பிரதான செயல் திடங்களுக்கான செலவினங்களை கணிசமான அளவு அதிகரிப்பதற்கல்ல என்பதுடன் நிதிப் பற்றாக் குறைக்கான காரணமும் அல்ல.

- 2008-09இல் 3.9 பில்லியன் டொரையும் 2009-10இல் 14.1 பில்லியன் டொலரையும் நிதிப்பற்றாக் குறையாக 2009 வரவுசெலவுத் திட்டம் எதிர்வு கூறுகிறது. 2003இல் அரசாங்கம் உருவாக்கியிருந்த 5.5 பில்லியன் டொலர் பற்றாக்குறையை அகற்றுவதற்கு மேற்கொண்ட அதே கவனமான முகாமைத்துவத்துடன், 2015-16 அளவில் வரவுசெலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்த இது திட்டமிடுகின்றது.

திறமைவாய்ந்த அரசாங்கம்

- பிரதான பகிரங்க சேவைகளைப் பாதுகாக்கும் தருணத்தில், செலவினங்களை சமாளிக்கும் முயற்சிகளை அதிகரிப்பதற்கென:

- 2011-12இல் திறமைகளில் 1 பில்லியன் டொலரை இனங்காணும்
- கூட்டு முறையிலான கொள்வனவு போன்ற சில கட்டாய சம்பாதிப்பு நடவடிக்கைகளைப் பிரேரிப்பதன் மூலம் விசாலமான பகிரங்க துறையில் சேமிப்பை உருவாக்கும்.
- சட்டசபை உறுப்பினர்களது சம்பளத்தை 2009-10 நிதி வருட இன்றைய மட்டத்தில் தடுத்து வைக்கப் பிரேரிக்கும்
- அடுத்து வரும் மூன்று வருடங்களில் 5 சதவீத ஒன்ராறியோ பகிரங்க சேவையின் பருமனை தேய்வு மற்றும் ஏனைய வழிகளூடாக குறைக்கும்.

மேலும் அறிந்துகொள்க

2009 வரவுசெலவுத் திட்டத்தின் பின்னணித் தகவல்களை வாசியுங்கள்

- வேலைவாய்ப்புக்களை பாதுகாத்தலும் உருவாக்குதலும்
- வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான முதலீடுகள்
- விரிவான வரிச் சீர்திருத்தப் பொதி
- சிறுவர்களிலும் குடும்பங்களிலும் முதலீடு செய்தல்
- ஒன்ராறியோவின் பொருளாதார வெளித் தோற்றமும் நிதித் திட்டமும்

2009 வரவுசெலவுத் திட்டத்தில் சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய துறைகள் என்பவற்றிற்கான முன்னெடுப்புகள் பற்றி மேலும் அறிந்துகொள்க.

வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை வாசியுங்கள்:

- 2009 வரவுசெலவுத் திட்ட முக்கிய அம்சங்கள்
- ஒன்ராறியோ குடும்பங்களுக்கு உதவுதல்
- குடும்பங்கள் வியாபாரங்களுக்கான வரிச் சேமிப்புக்கள்

விரிவான வரிச் சீர்திருத்த பொதி பற்றி மேலும் தகவல்களை 2009 வரவுசெலவுத் திட்டத்தில் காண்க.

ஊடக விசாரணைகள் ontario.ca/finance-news
Alicia Johnston, அமைச்சரது அலுவலகம், 416 325-3645
Scott Blodgett, நிதியமைச்சு, 416 325-0324
பொது விசாரணைகள். 1-800-337-7222
Tamil

*மாகாண அரசின் இணைய தளத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்து பெறப்பட்டது.* **- சிவ பஞ்சலிங்கம்**

# ‘தன்வினை, தன்னைச் சுடும்’

## விளையாட்டுத் தகவல்கள் 257

இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சி! ஏனெனில் இரண்டாவது ஆண்டாக நடைபெற இருந்த IPL 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் இம்முறை இந்தியாவில் நடைபெறாமல் பாதுகாப்பு காரணம் காட்டி தென்ஆபிரிக்காவில் நடைபெற உள்ளது. முதல் தடவையாக சென்ற வருடம் தொடங்கிய IPL போட்டிகள் மிக திறமையாக கோடான கோடி பணம் திரண்டது. பல இலட்சம் ரசிகர்கள் இந்திய மண்ணில் கண்டு களித்தார்கள். 20 ஓவர் எனப்படுவதால் விறுவிறுப்புக்கும், அதிரடிகளுக்கும் என்றுமே குறைவில்லாமல் ஒரு கிரிக்கெட் திருவிழா போலவே நடந்தேறியது இந்திய மண்ணில்.

அரசியல் சதுரங்கத்தில் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் நடைபெற்ற குண்டு வெடிப்புக்களால் இந்திய ரசிகர்களின் கனவில் இந்த சம்பவங்கள் மண்ணை வாரி போட்டுள்ளன. அத்துடன் மட்டுமல்லாமல் கோடான கோடி பணம் புரளும் இந்த IPL போட்டிகளில் இந்திய மண்ணின் பொருளாதாரமும் வளம்படுத்தப்படும் வாய்ப்பும் கைநழுவி தென்ஆபிரிக்க மண்ணிற்கு இந்த அதிஷ்டம் கிடைத்துள்ளது. ‘சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தான்’ என்பதைப்போல சிறப்பாக நடந்த போட்டிகளின் வருமானம் குண்டுவெடிப்புகளால் கை நழுவி இந்தியாவை விட்டு போய்விட்டது’ ‘தன்வினை, தன்னைச் சுடும்’.

### தென் ஆபிரிக்காவில் ஐ.பி.எல்!

இரண்டாம் ஆண்டு இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) கிரக்கெட் போட்டி தென்ஆபிரிக்காவில் நடைபெற உள்ளது. பொதுத்தேர்தல் சமயத்தில் போதுமான பாதுகாப்பு அளிக்க முடியாது என இந்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்ததால் வெளிநாட்டில் போட்டியை நடத்த பிசிசிஐ முடிவு செய்தது. இதையடுத்து இங்கிலாந்தையும், தென்ஆரிக்காவையும் அதற்குரிய நாடுகளான பரிசீலனை செய்தது ஐபிஎல் நிர்வாகம். மழையின் குறுக்கீடு இருக்கும் என்ற கணிப்பு உள்பட பல்வேறு பிரச்சினை இங்கிலாந்தில் எழுந்ததால் தென்ஆபிரிக்க கிரிக்கெட் வாரியத்தின் முதன்மைச் செயல் அதிகாரி ஜெரால்டு மஜோலாவுடன் ஆலோசனை நடத்துவதற்காக அவசர அவசரமாக திங்கட்கிழமை இரவு ஜோகனஸ்பர்க் சென்றார் ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி. அவருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்பட்டது. ஆனால் ஒருவாரம் தாமதமாக ஏப்ரல் 18ஆம் திகதி முதல் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக மோடி தெரிவித்துள்ளார். ‘போட்டிக்காக 8 மைதானங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. எவை என்று முடிவு செய்யப்படவில்லை. மே 24 ஆம் திகதி போட்டி நிறைவடைகிறது. வீரர்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்க தென்ஆபிரிக்க கிரிக்கெட் வாரியம் உறுதிய தெரிவித்துள்ளது’ என்றார் மோடி. இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டியை நடத்த மேற்கொண்டுள்ள முடிவுக்கு சச்சின் டெண்டுல்கரும், யுவராஜ் சிங்கும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

பொதுத்தேர்தல் சமயத்தில் ஐ.பி.எல் போட்டி நடைபெறுவதால் வீரர்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்க முடியாது என மத்திய அரசு தெரிவித்ததையடுத்து, வெளிநாட்டில் 2வது சீசன் ஐ.பி.எல் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்தது. இதை அறிந்த சச்சின் டெண்டுல்கர், அம்முடிவு ஏமாற்றம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

**அவர் கூறியுள்ளதாவது** - இரண்டாம் ஆண்டு ஐ.பி.எல் போட்டியை இந்தியாவுக்கு வெளியே கொண்டு செல்வது எதிர்பாராதது. தாயக ரசிகர்களின் ஆதரவுடன் விளையாடுவதை ஒவ்வொரு வீரரும் நிச்சயம் இழப்பர். இந்தியாவில் கிடைக்கும் அளவுக்கு ரசிகர்களின் ஆதரவு வெளிநாட்டில் கிடைக்காது. உள்ளூர் மற்றும் வெளியூர் (ஹோம் அன்டு அவே) என்கிற அடிப்படையில் போட்டியை நடத்துவது ஐ.பி.எல் அமைப்பின் நல்ல திட்டம். ஆனால் அந்த சிறப்பை இம்முறை அணிகள் இழக்க நேரிடுகிறது. அதேசமயம் போட்டி எங்கு நடந்தாலும், கடந்த ஆண்டு மாதிரி வீரர்களின் ஆட்டத்தில் குறைவிருக்காது என்றார் சச்சின். இவர் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு அணித்தலைவராக உள்ளார்.

**யுவராஜ் சிங் கூறியது -** இரண்டாவது ஐ.பி.எல் போட்டியை வெளிநாட்டுக்கு கொண்டு செல்வது வருத்தம் அளிக்கிறது. என்றாலும் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் முடிவுக்கு மதிப்பளிக்கிறோம். நீண்டகாலம் நியூசிலாந்தில் விளையாடிவிட்டு, தாயகம் திரும்பியதும் குடும்பத்தினரை அழைத்துச் சென்று அவர்கள் முன்விளையாடலாம் என்ற ஆசையில் இருந்தோம். அது நிராசையாகியுள்ளது என யுவராஜ் சிங் கூறினார். இவர் பஞ்சாப் கிங்ஸ் லெவன் அணிக்கு அணித்தலைவராக உள்ளார்.

**ஐ.பி.எல் புதிய அட்டவணை வெளியீடு** - மும்பை இந்தியன்ஸ் - சென்னை சூப்பர் கிங்ஸ் கேப்டவுனில் தொடக்க நாளில் மோதல். இந்திய பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டியின் தொடக்க நாளில் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்த்து மகேந்திரசிங் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விளையாடுகிறது. இந்திய நேரப்படி இரவு 8மணிக்கு கேப்டவுனில் இப்போட்டி நடைபெறுகிறது. அதற்கு முன்னதாக மாலை 4 மணிக்கு நடைபெறும் லீக் போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியுடன் பெங்களூர் ராயல் சாலஞ்சர்ஸ் அணி விளையாடுகிறது. இந்தியாவில் நடைபெறவிருந்த இப்போட்டி, பொதுத்தேர்தல் முன்னிட்டு தென்ஆபிரிக்காவில் நடத்த முடிவு செய்துள்ளது ஐ.பி.எல் அமைப்பு. அதற்கான புதிய அட்டவணையை ஐ.பி.எல் வெளியிட்டுள்ளது. அதன்படி ஏப்ரல் 18முதல் மே 24ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெற உள்ளன.

**8 நகரம் -** கேப்டவுன், ஜோகன்னஸ்பர்க், டர்பன், பிரிடோரியா, ஈஸ்ட் லண்டன், கிம்பெர்லி, புளோம்பான்டைன், போர்ட் எலிசபெத் ஆகிய 8 நகரங்களில் போட்டிகள் நடைபெற உள்ளன. 8 அணிகள் கலந்து கொண்டுள்ள இப்போட்டி மொத்தம் 59 ஆட்டங்களைக் கொண்டது. டர்பனில் 16 போட்டிகள் - தெற்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள் அதிகம் வசிக்கும் டர்பனில் அதிகமான போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 16 ஆட்டங்கள் அங்குள்ள கிங்ஸ்மீட் மைதானத்தில் நடைபெற உள்ளன.

அதற்கடுத்து அதிகபட்சமாக பிரிடோரியாவில் உள்ள செஞ்சுரியன் பார்க் மைதானத்தில் 12 ஆட்டங்கள் நடைபெற உள்ளன. ஜோகன்னஸ்பர்கில் உள்ள வாண்டரர்ஸ் மைதானத்தில், கேப்டவுனில் உள்ள நியூலாண்ட்ஸ் மைதானத்தில் தலா 8 ஆட்டங்கள் நடைபெற உள்ளன. இந்திய ரசிகர்கள் டிவியில் காண்பதற்கு வசதியாக போட்டிகளைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மாலை 4 மணிக்கும் (உள்ளூர் நேரப்படி பிற்பகல் 12.30) இரவு 8 மணிக்கும் (உள்ளூர் நேரப்படி மாலை 4.30) போட்டிகள் தொடங்கப்பட உள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் தலா 2முறை மோத வேண்டும். அதன்படி ஓர் அணி 14 ஆட்டங்களில் விளையாடும். லீக் போட்டிகளின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களைப் பிடித்துள்ள அணிகள் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறும். முதல் அரையிறுதிப் போட்டி பிரிடோரியாவில் மே 22ஆம் திகதியும், 2வது அரையிறுதிப்போட்டி ஜோகன்னஸ்பர்கில் மே 23ஆம் திகதியும் நடைபெற உள்ளன. இறுதிப்போட்டி ஜோகன்ஸ்பர்கில் உள்ள வாண்டரர்ஸ் மைதானத்தில் மே 24ஆம் திகதி நடைபெற உள்ளது.

### 3வது கிரிக்கெட் ரெஸ்ற் - தென்ஆபிரிக்காவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3வது கிரக்கெட் ரெஸ்ற் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்ஆபிரிக்க அணி வெற்றி பெற்றது.

என்றாலும் முதல் 2ரெஸ்ற் போட்டிகளில் வென்றதன் மூலம் தொடரை 2 - 1 என ஏற்கனவே உறுதி செய்திருந்தது அவுஸ்திரேலியா. கேப்டவுனில் கடந்த 19 ஆம் திகதி முதல் 3வது போட்டி நடைபெற்றுவந்தது. முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி, 209 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸை இழந்தது. அதை தொடர்ந்து ஆடிய தென்ஆபிரிக்க அணி 651 ஓட்டங்களைக் குவித்தது. பிரின்ஸ், காலிஸ் டிவில்லியர்ஸ் ஆகியோர் சதம் அடித்தனர். இதையடுத்து 442 ஓட்டங்கள் பின்னடைவுடன், ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 422 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தது. இதனால் இன்னிங்ஸ் தோல்வி தவிர்க்க முடியாததாகிவிட்டது. 218 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் மெக்டொனால்டு மிட்செல் ஜான்சன் ஜோடி 7வது விக்கெட்டுக்கு 163 ஓட்டங்களைக் குவித்து தென்ஆபிரிக்க வீரர்களைத் திணறடித்தனர்.

86 பந்துகளில் சதத்தை எட்டிய ஜான்சன், 123 ஓட்டங்களைச் சேர்த்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. பால் ஹாரிஸ் 6 விக்கெட்டுகளும், டேல் ஸ்டெய்ன் 3விக்கெட்டுகளும் கைப்பற்றினர். 4 நாட்களில் போட்டி முடிவுக்கு வந்தது. போட்டியின் நாயகனாக ஹாரிஸ் தேர்வு பெற்றார். தொடர் நாயகன் விருதை ஜான்சன் பெற்றார்.

### மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருதின கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து 5 போட்டிகளைக் கொண்ட தொடர் 1 - 1 என சமன் ஆகியுள்ளது. கயானாவில் உள்ள பிராவிடன்ஸ் ஸ்டேடியத்தில் நடந்த முதல் போட்டியின் முடிவு டக் வொர்த்த லீவிஸ் விதிமுறையின்படி தீர்மானிக்கப்பட்டது. அதில் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணிப் பயிற்சியாளர் ஜான் டைசன் கணக்கில் கோட்டை விட்டதால் இங்கிலாந்து அணி அதிஷ்டவசமான வெற்றியைப் பெற்றது.

**2வது போட்டி -** ஜார்ஜ்டவுனில் ஞாயிற்றுக்கிழமை 2வது போட்டி நடந்தது. முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 264 ஓட்டங்களைச் சேர்த்தது. சந்தர்பால் 112ஓட்டங்களைக் குவித்து அணிக்கு வலு சேர்த்தார். அவருக்கு இது 10வது சதமாக அமைந்தது. ராம்நரேஷ் சார்வான் 74 ஓட்டங்களைச் சேர்த்தார். அடுத்து ஆடிய இங்கிலாந்து அணி 48.2 ஓவர்களில் 243 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தது. ஆண்ட்ரு ஸ்டிராஸ் அதிகபட்சமாக 105 ஓட்டங்களைக் குவித்தார் என்றாலும் அணி தோல்வியுற்றதால் அது விழலுக்கு இறைத்த நீராகப் போனது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் பிராவோ, போர்லார்டு ஆகியோர் தலா 2விக்கெட்டுகளைப் கைப்பற்றினர்.

இவ்விரு அணிகளிடையிலான 3வது போட்டி பிரிட்ஜ்டவுனில் வரும் 27ஆம் திகதி நடைபெறுகிறது.

**எஸ். கணேஷ்**




Raphael Maharaja

கனேடியத் தமிழ் வழக்கறிஞர்

Barrister, Solicitor & Notary Public



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



Tel: 416-847-7077 Fax: 416-847-7088

# வீட்டு விற்பனையில் ஒன்றாக்கப்பட்ட வரி வசூலிப்பு

ஒன்ராரியோ மாநிலத்தின் நிதி அமைச்சர் ஏப்ரல் 26, 2009 அன்று தனது 2009/2010ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட அறிக்கையை (Budget) ஒன்ராரியோ அரசின் சார்பில் வெளியிட்டார். உலகமே பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இந்த காலகட்டத்தில் இந்த பட்ஜட் எல்லோராலும் எதிர்பார்த்த ஒன்றாகும்.

இதில் முக்கியமாக பேசப்படுவது GST மற்றும் PST ஆகிய வரிகளை ஒன்றாக்கி நுகர்வோரிடமிருந்து வசூலிக்க இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட வரி முறையே. 2010 ஆம் ஆண்டு யூலை 01ஆம் திகதிக்கு பின்னர் நுகர்வோர்களுக்கு இந்த ஒன்றாக்கிய வரியின் பாதிப்பு இருக்கப்போகின்றது என்பதனை Budget தெரியப்படுத்தியுள்ளது. இன்றைய நிலையில் ஒன்ராரியோவின் பொருட்களை கொள்வனவு செய்யும் போது செலுத்தும் (வாங்குவதற்குரிய) வரி 8% (PST: Provincial Sales Tax) மற்றும் மத்திய அரசின் பொருட்களிற்கும் சேவைகளுக்குமான வரி 5% (GST: Goods and Service Tax) இரண்டும் ஒன்றாகிய கூட்டான வரி (HST: Harmonized Sales Tax) 13% ஆக அறவிடப்பட இருக்கின்றது. இன்றைய காலத்திலிருந்து 15 மாதங்களில் இந்த சேர்ந்த வரி அறவிடப்பட இருக்கின்றது. இந்தக் கால இடைவெளியில் பல திருத்தங்களும், மாற்றங்களும் ஏற்படும் என எதிர்பார்க்கலாம். இந்த புதிய வரியானது முறையற்ற நேரத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கோசமிடுகின்றன.

ஆனால் ஒரு விடயத்தை நிச்சயம் அவதானிக்கலாம். அதாவது இதுவரை செலுத்தாத பல சேவைகளுக்கு புதிய வரியினூடாக வரி செலுத்தவேண்டியுள்ளது. உதாரணமாக எரிபொருளை (Gas) எடுத்துக்கொள்ளலாம். வேறும் பல உதாரணங்களை கொள்ளலாம். சூடாக்கும் மசகு எண்ணை (Heating Fuels), எலெக்றிசிற்றி (Electricity), புகைக்கப்படும் பொருட்கள் (Tobacco), தனிப்பட்ட சேவைகளாகிய சிகை அலங்காரம், களியாட்டங்கள் (club), மற்றும் விளையாட்டுத்துறைக்குரிய அங்கத்துவர் சந்தாப்பணம் (Memberships), புத்தகங்கள், பத்திரிகைகள், வாடகை வாகனசேவை (Taxi) இற்குரிய செலவுகள், சட்ட வல்லுனர், கணக்காளர், கட்டிடக்கலைஞர் (Architects) ஆகியோரின் ஊதியங்கள் முக்கியமாக வீடு, மனை வியாபாரம், நிலம்.... போன்றவற்றிற்குரிய விற்பனைக்குரிய தரகு வரி (Sales Commission).

சில சேவைகளிற்கும் பொருட்களுக்கும் இந்த புதிய கூட்டு வரியில் விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்குரிய ஆடைவகைகள், காலணிகள், சிறுவர்களுக்குரிய வாகன இருக்கைகள் (Car Seats, Car Booster seats), புத்தகங்கள், Diapers, பெண்களுக்குரிய Hygiene பொருட்கள் மற்றும் அத்தியாவசிய மளிகைப்பொருட்கள் (Basic Groceries), வாடகை குடியிருப்பு, கொண்டோவிற்குரிய செலவு (Condo. Fee), Prescription Drugs, Medical Devices. புதிதாக நிர்மாணம் செய்யும் குடியிருக்கும் ஆஸ்தியை தவிர மற்றயவற்றிற்கு விதிவிலக்கு வழங்கப்படும். இருந்தும் ஆஸ்தி மாற்றத்திற்குரிய (Land Transfer Tax) செலவுகளுக்கு இப்புதிய வரி அறவிடப்படும்.



ஆஸ்தி சம்பந்தமான வியாபாரத்தில் ஈடுபடும் Contractors, Developers மற்றும் வீடு நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் இப்புதிய சேர்ந்த வரியை எதிர்த்துள்ளார்கள். இதனால் புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகளுக்கு உதாரணமாக $580,000 விலையுள்ள புதிதாக நிர்மாணம் செய்யும் வீட்டை வாங்க மேலதிகமாக $46,000 செலுத்த வேண்டிவரலாம். முக்கியமாக $400,000 இற்கு குறைவான புதிய வீடுகளுக்கு இந்த வரி தவிர்க்கப்பட்டுள்ளது. $400,000 இற்கு மேலாக உள்ள புதிதாக நிர்மாணம் செய்து வாங்கும் ஆஸ்திகளுக்கே இந்த வரி அறவிடப்படும்.

அத்துடன் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு வரிச்சலுகை கிடைக்கும். அத்துடன் வருடாவருடம் $260 வியாபார வரி மக்களுக்கு சார்பாக மீளளிக்கப்படும். மேலும் வருடத்திற்கு $160,000 இற்கு குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு பணம் வழங்கப்படும். கனடாவில் பல மாகாணங்களில் இந்த சேர்ந்த வரி ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளது. கியூபெக், நோவா ஸ்கோசியா, நியூபவுண்லாண்ட் & லவடோர் மற்றும் நியூ புறுன்ஸ்விக். அல்பேட்டாவைப் பொறுத்தவரை மாகாண வரி அறவிடப்படுவ தில்லை. பொருளாதார மற்றும் ஆஸ்தி சம்பந்தமான ஆய்வாளர்களின் கருத்துப்படி இப்புதிய கூட்டு சேர்ந்த வரியினால் ஆஸ்தி வாங்குபவர்களுக்கு மேலதிகமாக $2,000 வரையான செலவு ஏற்படலாம் எனத் தெரியவருகின்றது. இதனால் வீட்டு வியாபாரத்தில் இறுக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். ஏற்கனவே ரொறொன்ரோவில் வீடு வாங்குபவர்களுக்கு (முதல்தரம் வீடு வாங்குபவர்கள் தவிர) மற்றவர்களுக்கு மேலதிக நிலமாற்று வரி (Toronto Land Transfer Tax) அறவிடப்படுகின்றது. அடுத்தவருடம் யூலை 01 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த வரி அறவிடப்பட இருப்பதால் வாங்க இருப்பவர்கள் இந்த வருடத்தில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் வாங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படலாம். அத்துடன் அடமானக் கடனிற்குரிய வட்டிவீதமும் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது.

ஆஸ்தி வியாபாரத்தில் கீழ்வரும் சேவைகளுக்கு/ வியாபாரங் களுக்கு புதிதாக கொண்டுவரப்படுவதால் அறவிடப்படும் வரி

- Legal Cost (சட்டஒழுங்குச் செலவு)
- Canada Mortgage Insurance Premium (அடமான காப்புறுதி கட்டுப்பணம்)
- Real Estate Commission (ஆதனத் தரகு)
- Home Inspection, Title Insurance மற்றும் Moving Cost

இந்த வரி அமலுக்கு வரமுன்பு பல விதிவிலக்குகள் மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். இன்றைய காலகட்டத்தில் வாடகை செலுத்தி கொண்டு இருப்பவர்கள் சொந்தமாக ஒரு மனையை வாங்குவதனைப் பற்றி சிந்திப்பது சிறந்ததாகலாம். ஏனெனில் குறைந்த அடமான வட்டி வீதத்தில் வாங்குவதால் மாதாந்த கொடுப்பனவில் குறிப்பிட்டளவு இறக்கத்தை காணலாம். அனுபவமிக்க உங்கள் ஆஸ்தி முகவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 295**


ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், **140** இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

# CATERING / RESTAURANT FOR SALE

- Running business
- Location: Markham / Eglinton
- Resonable Rent
- Recently renovated
- Asking price $45,000 only
- Don't miss this chance

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# தொல்காப்பியரின் நாடக வழக்கு

**கடந்த இதழ் தொடர்ச்சி**

மெய்ப்பாடு (காட்டும் உணர்ச்சி) சுவை என்றும் குறிப்பு என்றும் வழங்கப்பெறும். தொல்காப்பியர் வகுத்துள்ள எட்டு மெய்ப்பாடுகளும் அவை தோன்றும் வகையால் 32 வகைப்படும்.

1. நகை: இது எள்ளல், இளமை, பேதைமை, மடமை ஆகிய நான்காலும் வரும். எள்ளல் -- இகழ்தல். இளமை - அநுபவக் குறைவு. பேதைமை - அறியாமை. மடமை - கொண்டது விடாமை.

உதாரணம்: நகை யாகின்றதே தோழி நெருநல்

----------------------------------------------------

------------------ ஊரன் திண்தார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவோடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்டு
எம்மனை புகுதந் தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்று
இம்மனை அன்ற.ஂ. தும்மனை என்ற
என்னும் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின் றதுவே.(9)

தலைவன் பரத்தையிடம் பாணன் ஒருவனைத் தூதாக அனுப்பினான். பாணன் வழிமாறித் தலைவி வீட்டிற்கே வந்துவிடுகிறான். தலைவி யைக் கண்டு அஞ்சித் தொழுது நிற்கின்றான். அவனைக் கண்டு தலைவி நகைக்கின்றாள். பின்னர் அதனைத் தன் தோழிக்குச் சொல்லிச் சிரிக்கின்றாள். இது பாணனின் பேதைமை கண்டு தலைவிக் குற்ற நகையாகப் பாடப்பட்டுள்ளது.

2. அழுகை: இழிவும் இழத்தலும் அசைதலும் வறுமையும் என நான்கு பொருள்பற்றி அழுகை தோன்றும். இழிவு - பிறரால் இகழப்படுதல். இழப்பு - தாய்தந்தை முதலாய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சிகளையும் இழத்தல். அசைவு - பண்டைய நிலைமை கெட்டு கீழ்நிலை எய்தி வருந்துதல்.



உதாரணம்: ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅல் இன்மையில் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ(று) அழூஉந்தன் மகத்து முகம்நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண.(10)

இது வறுமைபற்றி வந்த அவலச்சுவை. முலைப்பால் இன்மையால் குழவி அழுததைத் தான் கண்டு நொந்த துயரம் என்றும் மகன் முகம் நோக்கி மனைவி அழுதாள் என்பதைப் பிற ரிடத்துத் தோன்றிய அவலம் என்றும் கொள்ளுதல் வேண்டும்.

3. இளிவரல் (இழிவரல்): இழிவு அல்லது மானக்குறைவு குறித்த மெய்ப்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்னும் நான்கு பொருள்பற்றிப் பிறக்கும். இங்கு பிணி நோயையும் வருத்தம் பொதுவான இடர்ப்பாடுகளையும் குறிக்கும். மென்மை என்பது ஆற்றல் இன்மை.

உதாரணம்: ஆக வனமுலை அரும்பிய சுணங்கின்
மாசிற் கற்பின் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பற்றி எம்
முதுமை எள்ளல் அ.ஂ.து அமைகுந் தில்லை
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்து
அம்தூம்பு வள்ளை ஆய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேல் மத்தி கழாஅர் அன்ன எம்
இளமை சென்று தவத்தொல் அ.ஂ.தே
இனிமை எவன்செய்வது பொய்ம்மொழி எமக்கே?(11)

இது முதுமையால் இளிவரல் பிறந்த செய்தியைத் தெரிவிக்கின்றது. (நேற்று பரத்தை வீட்டிலே பொழுதைக் கழித்துவிட்டு இன்று இங்கு வந்து) 'மதர்த்த கொங்கைகளையும் மார்பகத்துப் படர்ந்த தேமலினையும் குற்றமற்ற கற்பினையும் உடையவளே! எம் புதல்வனை ஈன்ற தாயே' என்றெல்லாம் மாயப் பொய்மொழி கூறுகின்றாய். எனது முதுமையைச் சுட்டிப் பேசி நீ ஏதும் இகழ்தல் வேண்டாம். அது எனக்கு மிகவும் ஏற்றதேயாகும் என்று தலைவி தனது மூப்புத் தோற்றுவித்த இழிவு குறித்துக் கவலை கொள்கின்றாள்.

4. மருட்கை: புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நான்கு இடங்களிலும் அறிவு நிரம்பப்பெறாத வியப்புத் தோன்றும்.

உதாரணம்:

மலர்த்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி
ஓர்யான் ஆகுவது எவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ் தோளேனே?(12)

இதன் பொருள், 'தோழி! வாழ்வாயாக! புதுமலர் மாலையை அணிந்த மார்பினை உடைய அவனைக் கண்டவர் பலர். அப்படி இருக்க, இரவிலே தலையணையோடு முகஞ்சேரக் கட்டிலிலே கிடந்து அழுது, தோள் மெலிந்து நான் மட்டும் வருத்தமுறுவது என்ன விந்தை?' என்பது. இதில் தலைவி தன்னிடத்தில் தோன்றிய புதிய உணர்வு (ஒருதலைக் காதல்) குறித்து வியந்து தோழிக்குக் கூறுகின்றாள்.

**தொடரும்.....**



**கவிஞர் வி. கந்தவனம்**





# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...


## Elagupplai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**






**Birchmount/Ellesmere**



**$219,900**
Condo Apt, Bed rooms 2, Washrooms 2
Corner Unit, Eait In Kitchen With Windows. Building Has Indoor

**Markham Rd/Lawrence**



**$265,000**
Detached Bungalow Bed rooms 3 , Washrooms 2
Side Entrance To Bsmnt, Great Home For Updating. Walk To Park And Bus.

**Meadowvale &Sheppard**




**$278,000**
Town House 2 Story Bed rooms 3 , Washrooms3
Great For First Time Buyer. Finished Basement. Close To Amenities, Ttc, Shopping

**16th Ave / 9 Th Line**



**$289,000**
Semi DFetached 2 story, Bed rooms3, Washrooms3
Central Vacuum Piped To Basement Location Included! Upgraded Security System

**Brimley Rd/ Denison St**



**$289,900**
Link 2 Story, Bedrooms 3, Washrooms 2 ,
No Sidewalk - 4 Cars Can Be Parked In The Driveway. Newer Windows & Roof

**Steeles/ Mccowan**



**$294,800**
Link 2 Story, Bedrooms 3 Wasroom 3,
Great Neighbourhood. Walking Distance To Ttc, Schools And Shopping. Parquet

**Elson/Steeles/Markham**




**$309, 900**
Semi Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3,
To Public School, No Frills, Canadian Tire, Home Depot, Staples Business Depot,

**Markham / Steeles**



**$329,900**
Link 2 Story, Bed rooms 3+2 Washrooms 3,
V2 Bdrm Bsmt Apt. E-Z T Construct Sep. Entrance. Walk To Steeles,

**Markham/Denison**



**$349,900**
Link 2 Story, Bed rooms 3 Washrooms 3
1600 Sq Ft Plus Prof Fin Bsmt, [Spent Over $30,000 On Upgrades & Renovation-

**Finch/Neilson**




**$364,000**
Detached 2 story , Bed rooms 3 Washrooms 3,
Close To School/Ttc Entrance To Garage From House

**9th Line & 16th Ave**



**$369,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Hardwood
House Is Freshly Painted. Close To School, Transportation And Shopping.

**Middlefield/Denison-**



**$379,900**
Link 2 Storys, Bed rooms 4, Washrooms 3, ApproxiClose To School, Park, Shopping, Mosque, Newly Painted, Fully Fenced Yard

**Sheppard/Meadowvale**




**$379,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3,
Close To The Toronto Zoo. Great Transit In Area, Close To Shopping, Easy Access To

**Middlefield/Denison**



**$399,000**
Link 2 Story, Bedrooms 4+2 Washrooms 4
Close To Public Schoole And High School, Close To All Amenities Like. Entrance To

**Steeles/Staines**



**$429,900**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3
Fully Fenced Yard. Double Garage, 4 Car Driveway Parking,

**9th Line & 14th**



**$439,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Large
Driveway Fits Up To 4 Cars + 2 In Garage. Upgrded Stone Elevation

**Highglen/BrimleyAve**




**$499,800**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, Quiet Family Neighbourhood! Ab 2675Sqft Seperate Side Ent. To Bsmnt

**14th Ave/9th Line**



**$585.800**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3Over 3000 Sqft. Thousand Of Upgrades Close To Hwy 407. Close To Pond & Park. .

**Kennedy/14 Ave.**




**$698,900**
Detached 2 Story Bed rooms4+2,Was rooms 5 1 Bathroom Walk-Out Basement Apartment! 3 Car Garage! Large Lot! Excellent

**Worthington/Springhurst**




**$287,000**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2,
Walk To Parks, Schools, Go-Train And Plaza. Roughed-In Central Vacuum. Central Air,

**Lawrence/Markham Rd**




**Sale Price......**
Wow!Your Search Is Over!Total Reno!Gorgeous!$$$$$ Spent!Large Raised Bungalow W/1Br Bsmt Apt & Separate

**Wilson/Pt Unionl**




**239,900**
Turnkey Operation! Full Gas Station Plus Convenience Store In Higher-End Community In Scarborough West

**Sales of Business**



**$1,650,000**
Sale Of Business WithProperty Gas Stations. New Look Petro Canada Gas Station With Country Style Donuts


RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**


**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# ‘எம்மை நாம் பாதுகாப்பது எப்படி’

## ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்”

## உணவுகள்

நாம் நோயின்றி வாழ்வதற்கு உணவு, உறைவிடம், சுற்றாடல் முக்கியமாகும். எனவே இங்கு எடுத்துக்கொண்ட விடயம் உணவுகள் ஆகும். நோய் எம்மைத் தாக்காதபடி பாதுகாத்துக்கொள்ள இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம் ஆகிய சப்த (7) தாதுக்களினால் ஆன நமது உடம்பின் அகத்தே அமைந்துள்ள முத்தாதுகள் என்கின்ற வாதம், பித்தம், கபம், விகாரமடைந்து நோய் எம்மைத்தாக்குமுன் பாதுகாத்துக் கொள்ள கால அர்த்த, கருமமித்தியா யோகங்களைக் கடைப்பிடித்து தகுந்த அன்ன ஆகாரங்களைக் கைகொள்ள வேண்டும்.

நாம் பாவிக்கும் உணவுப்பொருட்களில் இனிப்பு, புளிப்பு, கைப்பு, உறைப்பு, துவர்ப்பு, கார்ப்பு, என அறுசுவைகள் காணப்பகின்றன. அத்துடன் அவை சீதவீரியம், உஸ்ணவீரியம் கொண்டதாக இருக்கும்.அதாவது எக்குணத்தினால் எக்காரியம் செய்யப்படுகின்றதோ அதுவே வீரியமாகும் என்பதை நன்கு கவனிக்க வேண்டும். எனவே நாம் பாவிக்கும் உணவு வகைகளை அவதானித்துப் பாவித்து வந்தால் நோய் இன்றி சுகத்துடன் வாழமுடியும். இதற்கு நாளாந்த ‘சமசீர்’ உணவுகள் பயனளிக்க வல்லது.

சமசீர் உணவுகள்; அதாவது புரதம் (Protein), மாச்சத்து (Carbohydrate), தாதுப்பொருட்கள் (Minerals), உயிர்ச்சத்துக்கள் (Vitamins), கொழுப்பு (Fat) என்பனவாகும். இதனால் பல சத்துப்பொருட்களும் போகவேண்டியளவு, போகவேண்டிய பாதையினால் போகவேண்டிய நேரம் நமது உள் உறுப்புகளுக்குச் சென்று கொண்டு இருந்தால்தான் அவை திடம்பெற்று எம்மை நோய் இன்றிப்பாதுகாக்கும்.

சமசீர் உணவில் **‘புரதம்’** பற்றிப் பார்ப்போம்.



இச் சத்தானது இரத்தத்தில் உள்ள அணுக்கள் அதாவது செஞ்சீவ அணு (R.B.C) வெண்சீவ (W.B.C) அணுக்களைப் புதுப்பித்தலுடன் திசுக்கள், இழையங்கள் அழியாமல் பாதுகாக்கும் தன்மையுடையது. தசை, சருமம், மயிர், நகம் என்பனவற்றுக்கும் சிறந்ததாகும். இத்தன்மை பொருந்திய புரதம், குறைந்து காணப்பட்டால் இளமையில் முதுமைத் தன்மையைக் காட்டும். சருமம் சுருக்கமடையும், மேனியின் பளபளப்புத்தன்மை மங்கிவிடும். எனவே இந்நிலை ஏற்படாது தகுந்த உணவை எடுக்க வேண்டியது எமது கடமையாகும். உழுந்து, பயறு, துவரை, இறைச்சி, மீன், முட்டை, ஆடை, நீக்கிய பால் என்பனவற்றில் ‘புரதம்’ உண்டு.



## மாச்சத்து

தசை வளர்ச்சியைக் கொடுப்பதுடன், சக்தியையும், வலிமையையும் தரவல்லது. கோதுமை, கைக்குத்தரிசி, கேழ்வரகு, சம்பா போன்ற நார்ச்சத்துப் பொருட்களில் அதிகம் காணப்படுகின்றன. இதனால் இன்சுலின் அதிகரிக்காமல் கட்டுப்படும்.

## தாதுப்பொருட்கள்

இரும்புச்சத்து, அயோடின், மக்னீசியம், சோடியம், பொட்டாசியம், குளோறின், பொஸ்பரஸ், அலுமினியம், தாம்பிரம், துத்தநாகம் போன்றவை நாம் உண்ணும் உணவுகளில் கலந்து காணப்படுகின்றன. இவை நமது உடம்புக்கு முக்கியமானவை. இவை காணப்படும் சில உணவுப் பொருட்களைப் பார்ப்போம்.

**இரும்புச்சத்து:** இறைச்சி, முட்டைமஞ்சள்கரு, ஈரல், தேன், கீரைவகை, வாழைப்பழம், உலர்ந்த பழவகை, வெந்தயம், தக்காளி போன்றவற்றில் செறிந்து காணப்படுகின்றன.

**அயோடின்:** கடல்மீன், உப்பு, மரக்கறி வகைகளிலும் உண்டு. மக்கினீசியம் மரக்கறி வகை வர்க்கங்களிலும் உண்டு. மக்னீசிய சத்தானது, பற்கள், தசை, நரம்புகள் யாவும் உறுதிபெற்று வலுவடையச் செய்யும். கல்சியச் சத்தானது எலும்புகளில் தாக்கம் வராமல், பாதுகாக்கும். இதை பால், பழவர்க்கங்களில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

மற்றும் தாதுப்பொருட்கள் நாம் பாவிக்கும் உணவுகளில் உண்டு.

**உயிர்ச்சத்துகள்:** பெரும்பாலும் பழங்கள், காய்கறி உணவுப் பொருட்களில் காணப்படு கின்றன. வாழைப்பழம், அப்பிள், தோடை, பப்பாளி, அன்னாசி, கீரை போன்றவற்றிலும் A, B, C, D சத்துக்கள் காணப்படுகின்றன.

தொடரும்...

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



**A.V. M. MAX 2000**

**ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்**
சரித்திர முக்கியத்துவம் நிறைந்த இடங்களும்,
Shopping உம் உண்டு April 05 / May 09

**மூன்று நாள் சுற்றுலா May 15 முதல் 18 வரை**
*New York City* சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், *Shopping.*

**July 31 to August 06 Quebec சுற்றுலா**

***Vancouver & West Cost 14 days***

**Ontario & Across the Border**
*June 27* முதல் *August 22* வரை மீண்டும் *Nov. 28* முதல் *Dec.19*

*Apple Picking Starts From September 12, 19 & 26*
*October 10, 13 & 17*

***July Cherry Picking & Buffalo* பயணம்**

***Plan Your Holiday Around These Dates***
**இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?**
விபரங்களுக்கு: **416-609-2542**

விடுமுறை காலங்களில் சுற்றுலா
செல்லத் தயாராகுங்கள்!




***November & December* ஒரு நாள்**
சுற்றுலா *Christmas Village*

*Victoria Day Long Weekend*
**New York City பயணம்**

**August Civic Holiday** *Long Weekend*

# பலசரக்கு கடைக்கு கைகொடுக்கும் காப்புறுதி

**(Commerical Coverage to Grocery Store)**

கனடாவில் பல ஆயிரங்கள் முதலீட்டில் ஏராள-மான வாடிக்கையாளர்களை எதிர்கொள்ளும் 'பலசரக்கு கடை' ***(Grocery Store)*** ஒன்றும் இதே மாதிரியான உருவமைப்பில் அவசர தேவைகளுக்காக பல்கலாச்சார மக்களுக்கும் தேவையான அன்றாட பொருட்களை விற்கும் வாடிக்கையாளர்களின் 'வசதியான கடை' ***(Convenience Store)*** போன்றவை, இயங்கி கொண்டிருக்கும் எந்த நேரத்திலும் அல்லது இயங்காது மூடியிருக்கும் நேரங்களிலும் எதிர்கொள்ளும் ஆபத்துக்களையும் இவற்றுக்கு காப்புறுதி கம்பனிகள் வழங்கும் பாதுகாப்பு களையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**1. தீயினால் ஆபத்துகள் வரலாம் என்ற எதிர்பார்ப்பு *(Fire Risk)***

திடீர் என எந்த வழியிலும் இருந்து ஆபத்து வருகின்றது என்பது தெரியாமல் உருவாகலாம் என எதிர்பார்க்கும் தீ விபத்தின் மூலம் அழிவுகள் ஏற்படும் போது காப்புறுதி கம்பனிகள் பின்வரும் நிலைகளில் ஒரு உதாரணமாக / எடுத்து காட்டாக மேற்கொள்ளும் மதிப்பீடுகளையும் வழங்கும் நட்டஈடுகளையும் குறிப்பிடலாம்.

1. கடை இருக்கும் கட்டிடத்தின் பெறுமதி $500,000 டொலர்.
2. பலசரக்கின் பெறுமதி $100,000 டொலர்.
3. தளபாடங்கள், உபகரணங்களுக்கு பெறுமதி $50,000 டொலர்.
4. தீ விபத்து நேரம் கடை பெட்டகத்தினுள் இருந்து எரிந்திருக்கலாம் என எதிர்பார்க்கும் பண நோட்டுகளின் பெறுமதி $5,000 டொலர்.

**2. நீரினாலும் வெள்ள பெருக்கினாலும் ஏற்படும் ஆபத்துகளும், பாதிப்புகளும். *(Water Escape Damage Risk)***

நீரினாலும், வெள்ள பெருக்கினாலும் ஏற்படும் ஆபத்து என்பது நேரடியாகவும் தங்களுக்கு ஏற்படலாம். தங்களின் வியாபார தளத்தில் ஏற்பட்ட ஒரு ஆபத்தினால் ஏனையோருக்கும் பயங்கரமான பாதிப்புகளை உருவாக்கலாம்.

இத்தகைய ஆபத்துக்கு அண்மையில் கனடாவில் நடந்த ஒரு ஆபத்தினையும், அதனை தொடர்ந்து ஏற்பட்ட பாதிப்பினையும் குறிப்பிட்டு விட்டு இக்கட்டுரை தொடரலாம் என நினைக்கின்றேன்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, பலரின் வெவ்வேறு சிறு சிறு வர்த்தக நிலையங்களை உள்ளடக்கி ரொறொன்ரோவில் இயங்கிக் கொண்டிருக்கும் அழகிய பல் அங்காடி தொடர் கட்டிடத்தில் தனியார் ஒருவருக்கு சொந்தமான உணவகத்தில் உள்ள நீர் குழாய் ஒன்றில் ஏற்பட்ட உடைப்பினால் அதில் இருந்து பெருக்கெடுத்து ஓடிய நீர் பரவி பக்கத்து வியாபார நிலைய உரிமையாளர்கள் பலரின் வியாபார தளங்களை பாதித்து இருந்தது என்பது ஒரு செய்தியாகும். இங்கு பல் அங்காடி தொடர் மாடி வர்த்தக கட்டிடம் என்பது பல உரிமையாளர்களையும் ஒன்றாக, கூட்டாக சேர்ந்த (Co owners of the Commercial Building) ஒரு வர்த்தக கட்டிடம்.

இவை யாவற்றினையும் நிர்வகிக்க என ஒரு கூட்டுஸ்தாபனம் இயங்கி கொண்டு உள்ளது. ஒவ்வொரு வர்த்தக நிறுவனம் அமைந்துள்ள சிறு சிறுபிரிவும் (Each unit) வெவ்வேறு வகையான உரிமையாளரின் பெயரில் சட்டரீதியாக கொள்வனவு செய்யப்பட்டது. அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்டது.

சில வர்த்தகர்கள் வாடகைக்கு இவ் இடத்தில் ஒரு சில பிரிவினை (units) உரிமையாளரிடம் பெற்று தங்கள் வர்த்தகத்தினை நடத்தி வருகின்றனர்.

**இவ்வர்த்தக நிறுவனத்தினை நடத்தி வருபவர்கள் நீரினால் ஏற்பட்ட இப்பாதிப்பு களுக்கு எப்படி இழப்பீடுகளை பெறலாம்?**

தங்களின் வர்த்தக நிறுவனத்திற்கு காப்புறுதி செய்து வைத்திருந்தால் காப்புறுதி கம்பனியின் நட்டஈடு கோரல் பிரிவுக்கு முறைப்பாடு செய்து விட்டால் மட்டும் சரி. இழப்புகளைக் கம்பனி மதிப்பீடு செய்துவிட்டு நட்டஈடு பணம் என்பது பாதிக்கப்பட்டவர்களைத் தேடிக்கொண்டு வந்து கையில் தந்து விடும். காப்புறுதிக்கம்பனியில் இருந்தோ அல்லது அவர்களுக்கு காப்புறுதி இல்லாவிட்டால் பின்னர் பாதிப்புகளை உருவாக்கியவ ரிடம் இருந்து நேரடியாகவோ சட்டரீதியாக தங்கள் தங்களுக்கு நட்டஈடு வழங்கிய காப்புறுதிக் கம்பனி அறவிட்டுக்கொள்ளும்.

பாதிப்பினை உருவாக்கிய வர்த்தக நிறுவனத்தின் காப்புறுதி கம்பனி தமது வாடிக்கையாளரின் தப்புக்கு பொறுப்பு எடுத்து கொள்ளும்.

காப்புறுதி கம்பனிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இருந்தவர்கள் பாதிப்பினை எதிர்கொண்டவராக இருந்தாலும் சரி! பாதிப்புக்கு பொறுப்பாக இருந்தவரானாலும் சரி தப்பித்து கொள்ளலாம்.


சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


ஒப்பந்தம் இல்லாவிட்டால் அதோ கதிதான். ஒரே கூட்டாக பலரும் சேர்ந்து உள்ள கட்டிடத்தினுள் உள்ள உரிமையாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், அல்லது உரிமையாளரின் தவறினால் உருவாகும் பொறுப்புகள் யாவற்றிக்கும் இதனை நிர்வகிக்கும் கூட்டுஸ்தாபனம் அல்லது நிர்வாகம் சாட்சியாக மட்டும் நிற்கலாமே தவிர இப்பாதிப்பில் சட்டம் என்பது இவர்கள் தலையில் பொறுப்பினை சுமத்தமாட்டாது.

பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டதற்குரிய நிவாரணத்தினை தனியாக சட்டரீதியாக அறவிட முயல்வதற்கு பதிலாக இதனை ஏற்கனவே ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இருந்தால் காப்புறுதி கம்பனியின் கைகளில் ஒப்படைத்து விடலாம்.

**கொள்ளைகள், திருட்டுகளினால் பாதிப்புகள் வரலாம் என எதிர்பார்க்கும் ஆபத்துகள் *(BURGLARY & THEFT RISK)***

கடை ஒன்று உடைக்கப்பட்டு கொள்ளை அடிக்கப்பட்டு இருந்தாலும் அல்லது பணி புரிந்த ஊழியர்கள் உட்பட எவரால் எவையும் திருடப்பட்டு அது பாதிப்பினை வர்த்தக உரிமையாளருக்கு உருவாக்குமானால் எவ்வளவு தொகை கொள்ளை அல்லது திருட்டு போனது என்ற பொலிசாருக்கு முறைப்பாடு செய்து சட்டரீதியான அத்தாட்சிகளுடன் காப்புறுதி கம்பனியுடன் ஒப்பந்தம் செய்த வர்த்தக நிறுவனம் அணுகினால் போதும் இழந்த தொகை காப்புறுதி கம்பனியிடமிருந்து நட்ட ஈடாக தேடி வரும்.

**4.வன்முறைகள், கண்ணாடிகள் உடைக்கப்படுதல் *(VANDALISM)***

இரவு நேரங்களில் வர்த்தக நிலையம் மூடியிருக்கும் போது எவரும் கண்ணாடி, கதவுகளை உடைத்து விட்டு போகலாம். நேரடியாகவும் உடைக்கலாம். இங்கும் காப்புறுதி கைகொடுக்கும்.

**5. வர்த்தக உரிமையாளரின் தவறினால் ஏனையோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக் கான பொறுப்புகள் (LIABILITY COVERAGE)**

வர்த்தக உரிமையாளரின் தவறினால் ஏனையோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான பொறுப்புகள் என்பது ஒன்று இரண்டல்ல. பல வகையான பாதிப்புகளுக்கு பல ரூபங்களிலிருந்து சட்டரீதியாக பொறுப்பு ஏற்க வேண்டிவரலாம்

இப்படியான பொறுப்பு ஏற்படும் நிலை வரும்போது சட்டமும் நீதிதுறையும் பின்பக்கமாக நின்று துரத்தும். தப்பிக் கொள்ளவே முடியாது. உதாரணத்துக்கு சிலவற்றினை இங்கு குறிப்பிடலாம்.

1. தங்கள் கடையில் உருவான தீவிபத்து ஏனைய கடைகளையும் எரிக்கலாம் என எதிர்பார்க்கும் ஆபத்து (அது பல மில்லியன்களாகவும் போகலாம்)

2. வர்த்தக நிலைய கட்டிடத்தினுள் நடந்த மாதிரி தங்கள் கடையின் நீர் குழாய் வெடித்து ஏனையோரை பாதிக்கலாம் எனும் பொறுப்பு (இது இலட்சங்களில் ஏற்படலாம்)

3. பனிகட்டிகள் துப்பரவாக்காமல் விட்டு சறுக்கி விழும் வாடிக்கையாளர்கள் அல்லது கடையினுள் இடறி விழும் அப்பாவிக்களுக்கான உடல் பாதிப்புகளுக்கான பொறுப்புகள் (இதுவும் மருந்து செலவுகள் உட்பட மில்லியன் வரை போகலாம்)

4. வாடகைக்கு வியாபார தளத்தினை பெற்று வைத்திருப்பவரின் தவறினால் உரிமையாளருக்கு ஏற்படும் பாதிப்புகள் ***(Tenant's Legal Liability)*** இதுவும் பல மில்லியனுக்கும் ஏற்படலாம்.

**5. தொழில் செய்யும் ஊழியர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான பொறுப்புகள் *(Employee's Legal Liability)***

5. கடையில் வாங்கிய உணவு பொருள் ஒன்றினை உட்கொண்ட ஒருவர் ஏதாவது உடல் ஆரோக்கிய பாதிப்பு, அல்லது உயிர் ஆபத்தினை எதிர் கொள்ளும் நிலைமை ஏற்பட்டு, அதற்கு வர்த்தக உரிமையாளர் பொறுப்பு என சட்டமும், நீதி துறையும் துரத்தும் நிலைமை ஏற்பட்டால், அதற்குரிய பொறுப்பை காப்புறுதி கம்பனியே தன்கையில் எடுத்துக்கொள்ளும்.

மேற்குறிப்பிட்ட பொறுப்பு என்பது ஒன்று இரண்டல்ல. பல ரூபங்களிலும் ஏற்படலாம். காப்புறுதி கம்பனி தங்கள் சார்பில் ஆஜராகி பாதிக்கப்பட்டவருக்கு பதில் சொல்லும்.

**6. வருமான இழப்பீட்டு நிவாரணம் *(Income Replacement Benefit)***

தீ விபத்துகளினால் அல்லது நீரினால் ஏற்படும் பாதிப்புகளினால் கடை ஒன்று தொடர்ந்து நடாத்த முடியாது போனால் விபத்துகளுக்கும், ஆபத்துகளுக்கும் பெருந்தொகையினை காப்புறுதி கம்பனி நட்டஈடாக கொடுத்து தீர்த்தாலும் கொஞ்ச மாதங்களுக்கு கடையினால் ஒரு வருமானத்தினை இழந்த நிலைமைக்கு உரிமையாளர் தள்ளப் படலாம். இந்த நிலையில் இருந்து பாதுகாப்பு கொடுப்பதற்காக சுமார் ஒரு வருடத்திற்கு ஒரு மாத வருமானமாக காப்புறுதி கம்பனியிலிருந்து தொடர்ந்து பெற்று கொண்டேயிருக்கலாம்.

**7. தொழில்நுட்ப கோளாறுகளினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு *(Loss due to Technology Interruption)***

உதாரணமாக மின்சார தடையினால் ஒரு கடையில் குளிர்சாதன பெட்டியினுள் இருந்த பொருட்களுக்கு பாதிப்புகள் ஏற்படலாம். இப்பாதிப்புகளுக்கும் காப்புறுதி கை கொடுக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட நட்டஈடு பிரிவுகள் உட்பட மேலும் சிறுசிறு பாதிப்புகள் யாவற்றுக்கும் ஒட்டுமொத்தமாக சேர்ந்து இவ் ஒப்பந்தம் ஒரு பலசரக்கு கடை ஒன்றினை பல நிலைப்பாடுகளில் இருந்தும் பாதுகாக்கின்றது என்பதே நிஜம். ஆனால் இவ் ஒப்பந்தத்திற்காக மாதா மாதம் செலுத்தும் விலை என்பது வர்த்தகத்தில் வளரும் ஒருவருக்கு ஒரு பெரிய தொகை அல்ல.




aladeen
tailoring services
PHONE: (647) 827-6543 WEB: www.aladeen.ca E-MAIL: info@aladeen.ca
சகலவிதமான தையல் வேலைகளும்
நீங்கள் விரும்பியப்டி தைத்துக்கொடுக்கப்படும்.
திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

FOR SALE
MEDITATION CUSHION
BONE PILLOW
NECK PILLOW
PET BED/QUILT
PALM PROTECTOR FOR THE ELDERLY
CLOTHING PROTECTOR
WALKER BAG

CALL US TO INQUIRE ABOUT OTHER CARE PRODUCTS
Aladeen Tailoring Services, the professionals in tailoring and alteration. Conveniently located in Toronto at Don Mills & Sheppard, Aladeen is a full service tailoring and alteration business serving the Sri Lankan and Indian community in Toronto for over 10 years.
CALL RANI AT (647) 827-6543 OR (416) 321-2712


# தமிழ் வருடப்பிறப்பும் வானசாத்திரமும்

பொதுவாக எல்லா இனங்களும் அவற்றின் மதங்களும் பூமியில் பிறந்த ஒருவருடைய பிறந்த தினத்தையோ (கிறிஸ்து பிறந்த தினத்தை வைத்து ஆங்கிலவருடப்பிறப்பு) அல்லது பூமியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தையோ (இஸ்லாமிய வருடப்பிறப்பு) அடிப்படையாக வைத்தே தங்களது வருடப்பிறப்பை கணிக்கின்றன.

தமிழ் இனம் அதன் பண்பாடு, இந்துமதம் உட்பட்ட பல ஆசிய சமூகங்கள் மட்டும் (சிங்களவர், பங்களாதேஷ், பஞ்சாப், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளா) ஒரு குறிப்பிடத்தக்க இயற்கை நிகழ்வை வானசாத்திரம் மூலம் கணித்து வருடப்பிறப்பை கொண்டாடுகிறார்கள். Burma, Cambodia, Laos மற்றும் Thailand நாடுகளில் உள்ள மக்களும் இத்தினத்தை புத்தாண்டாக கொண்டாடுகிறார்கள். முதலில் இந்த இயற்கை நிகழ்வை பற்றிப்பார்ப்போம். பின்னர் அந்த இயற்கை நிகழ்வை ஏன் வருடப்பிறப்பாக கொண்டாட வேண்டும் என்று பார்ப்போம்.

இரண்டு தளங்கள் (Planes) சந்திக்கும் போது அவை ஒரு நேர் கோட்டில் வெட்டும். (ஒரு அறையின் மூலையை பாருங்கள். இரண்டு சுவர்கள் (தளங்கள்) சந்திக்கும் போது அது ஒரு கோடு (மூலை) ஆகிறது.) இதேபோல் பூமியை பூமத்திய ரேகையினூடாக சரி பாதியாக வெட்டும் தளமும் பூமி சூரியனை சுற்றும் பாதை பூமியை வெட்டும் தளமும் ஒரு கோட்டில் சந்திக்கின்றது. இக்கோட்டை வடபகுதியில் நீட்டினால் அது மேடராசி தொடங்கும் புள்ளியில் தொடும். இப்புள்ளி ஆங்கிலத்தில் 'First point of Aries' எனவும் தமிழில் மேடராசி தொடங்கும் புள்ளியாகவும் கருதப்படும். இப்புள்ளிக்கு சூரியன் வரும்போது சித்திரை மாதம் பிறக்கிறது. ஒவ்வொரு வருடமும் சூரியன் இப்புள்ளிக்கு வரும்போது தமிழ் வருடம் பிறக்கிறது.


இதை இன்னொரு விதத்தில் கூறினால் சூரியன் எப்போது பூமத்திய ரேகையை தாண்டி வடக்கு நோக்கி செல்ல தொடங்குகிறானோ அன்று தான் தமிழ் புதுவருடம் பிறக்கிறது.




தமிழிலும் சரி இந்து சமயத்திலும் சரி நூற்றுக்கும் மேற்பட்ட கற்பனைக் கதைகள் வருடப்பிறப்பிற்கும், சித்திரை முதலாம் நாளிற்கும் விளக்கம் அளிக்க கூறப்பட்டாலும், அந்த சித்திரை முதலாம் நாளை கணிப்பது இந்த ஒரே ஒரு வானசாத்திர நிகழ்வை கொண்டே ஆகும். இதை இக்கற்பனை கதைகளை எள்ளி நகையாடும் பகுத்தறிவுவாதிகளாலும் மறுக்கமுடியாது.

இனி இப்படியான ஒரு புள்ளியை (First point of Aries) சூரியன் கடப்பதை ஏன் வருடப்பிறப்பாக எடுக்க வேண்டும் எனப்பார்ப்போம்.

ஆங்கில அல்லது மற்றைய பண்பாடுகள் தங்களது அறிவை, ஆராய்ச்சியை மிகவும் அண்மைக்காலம் வரை பூமியிலே மட்டுமே நடத்தி வந்தன. அதனால் அவர்கள் தமது வருடப்பிறப்பை பூமியில் பிறந்த ஒருவருடைய பிறந்த தினத்தில் இருந்தோ அல்லது பூமியில் நடந்த ஒரு சம்பவத்தில் இருந்தோ ஆரம்பித்தார்கள். ஆனால் தமிழ் அல்லது இந்துமத பண்பாடு பூமியைவிட பல அண்டங்களுக்கு (Galaxy) அப்பாற்பட்டது. எமது கதைகளில் மூவுலகங்கள் மற்றும் பல அண்டங்கள் வருவது குறிப்பிடத்தக்கது. இப்படி ஒருவர் இவ்வுலகிற்கு அப்பால் நின்று பூமியின் வருடங்களை கணிக்க முற்படுவாரானால் அவர் சூரியனை பூமி சுற்றி வருவதையும், நான் மேலே கூறிய (தளங்கள் வெட்டும்) கோடு பூமியையும் பூமி சுற்றும் பாதையையும் சமச்சீராக பிரிப்பதை அவதானித்து சூரியனும் பூமியும் இக்கோட்டிற்கு வரும்போது அதை ஒரு ஆரம்பநாளாக தமது கணிப்பிற்கு எடுத்திருப்பார். ஆங்கில வானசாத்திரவியலாளர்கள் இப்புள்ளியை அண்டவெளியின் முதலாவது புள்ளி (First point of Aries) என்று கூறுவதிலிருந்தே இப்புள்ளியின் விஞ்ஞான முக்கியத்துவத்தை நாங்கள் அறியலாம். இப்படியான அண்டவெளியின் முதலாவது புள்ளிக்கு சூரியன் வருவதை வருடப்பிறப்பாகக் கணித்தலே மிகவும் பொருத்தமான விடயம் ஆகும்.



பெப்ரவரி 15, 2009 இல் அமெரிக்க விஞ்ஞானியான Dr. Alan Boss என்பவர் இந்த அண்டம் (Galaxy) பூமியைப் போல மனிதர் வாழக்கூடிய கோடிக்கணக்கான பூமிகளைக் கொண்டிருக்கிறது என தனது ஆராய்ச்சி அறிக்கையில் கூறியுள்ளார். Edinburgh University எமது அண்டவெளியில் உள்ள முன்னேற்றம் அடைந்த கலாசாரங்கள் உள்ள சமூகங்களை (Intelligent Civilisations) கணக்கிடும் ஆராய்ச்சியில் தற்போது ஈடுபட்டுள்ளது. அவர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்ட முன்னேற்றம் அடைந்த கலாசாரங்களை உள்ள சமூகங்களைக் கொண்ட கிரகங்கள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள்.

ஐரோப்பிய விஞ்ஞானிகள் குழு ஒன்று பூமியில் இருந்து 20.5 ஒளியாண்டு தூரத்தில் சரியாக பூமியைப்போல காலநிலை மற்றும் நீர் நிலைகள் கொண்ட உயிர்கள் வாழக்கூடிய கிரகத்தை (ஏப்ரல் 26, 2007) கண்டுபிடித்தது உங்கள் பலருக்குத் தெரியும்.

இவ்வாறான மற்ற உலகில் உள்ள கலாசாரங்களுடன் தொடர்பு கொள்ள எமது பூமியின் நாள், வருடங்களை கணிப்பதற்கு "First Point of Aries" இல் இருந்து எண்ணத் தொடங்குவதே மிகவும் பொருத்தமானது.

அதாவது எமது முதாதையர் வருடப்பிறப்பை கணிக்க எடுத்துக்கொண்ட விஞ்ஞான நிகழ்வு பூமியில் உள்ளவர்க்கு மட்டும் அல்ல பூமிக்கு அப்பால் உள்ள மற்றையவர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும் கூட உபயோகிக்க கூடிய கணிதமுறையாகும். அதாவது திரிலோக சஞ்சாரிகளுக்கு இம்முறையே நாட்கள், வருடங்களைக் கணிக்க பாவிக்கக்கூடியது. இவ்வாறு மிகவும் முக்கியம் வாய்ந்த இயற்கை நிகழ்வை வருடப்பிறப்பாக கொண்டாடும் பெருமை உடைய எமது தமிழ் சமுதாயம், இதை எமக்கு தற்போது போல் விஞ்ஞான வளர்ச்சியற்ற அந்தக்காலத்திலேயே கணித்து வைத்த எமது மூதாதையரின் பெருமையை கொண்டாடுவதை விடுத்து, எமது வருடப்பிறப்பை மாற்றி பூமியில் பிறந்த ஒருவருடன் சம்பந்தப்படுத்தி கொண்டாடுமாறு கேட்பது விஞ்ஞான அறிவற்ற பகுத்தறிவு வாதிகளின் செயலாகும்.

தமிழ் வருடக் கணிப்பை பற்றி குறைகூறும் பகுத்தறிவு வாதிகள் என்போர் திரும்பத்திரும்ப கூறும் ஒரு கூற்று இம்முறையில் 60 வருடங்கள் திரும்பத்திரும்ப வருகின்றன என்பதே. இதைப்பற்றி முன்னர் விளம்பரத்தில் (விளம்பரம் இதழ் February 01, 09) எழுதி இருந்தாலும் இங்கு அதை திரும்ப கூறுதல் தகும். தமிழ் வருடத்தில் பெயர்கள் தான் 60, அவை கிழமைகள் அல்லது மாதங்கள் போல் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆனால் கணிக்கும் போது வருடங்கள் தொடர்ந்தே எண்ணப்பட்டு வருகின்றன. உதாரணமாக தற்போதைய வருடம் கலியுகத்தின் 5110 ஆம் ஆண்டு ஆகும். இதன் பெயர் சர்வதாரி வருடம். அதாவது கலியுகத்தின் 5050 ஆண்டும் (60 வருடங்களுக்கு முன்னர் வந்ததும்) சர்வதாரி ஆண்டு. கலியுகத்தின் 5170 ஆம் ஆண்டும் (60 வருடங்களிற்கு பின்னர் வருவதும்) சர்வதாரி ஆண்டு. பகுத்தறிவு வாதிகள் என்போர் கூறுவது போல் தமிழ் வருடங்களை பாவிப்போருக்கு ஒருவருடைய வயதை கணிக்க ஆங்கில வருடத்தை உபயோகிக்கத் தேவையில்லை. ஆங்கில 1995 ஆம் ஆண்டில் பிறந்தவர் கலியுகம் 5097 (யுவ வருடம்) ஆம் ஆண்டில் பிறந்தவர் ஆவர். அவருக்கு ஆங்கில 2008 ஆம் ஆண்டில் அதாவது கலியுகம் 5110 (சர்வதாரி வருடம்) ஆம் ஆண்டில் வயது 13 (5110 - 5097).

இந்த அறுபது வருடங்களினதும் பெயர் தமிழில் இல்லை என்று கூறுபவர்கள் அதற்கு ஏற்ற தமிழ் பெயர்களை வைக்கலாம் அல்லவா. பெயர்கள் தமிழில் இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் ஒரு கருத்து வேறுபாடும் இல்லை. தாராளமாக பெயர்களை தமிழில் மொழி பெயர்ப்பு செய்யுங்கள். அதை தமிழ் சமுதாயம். வரவேற்கும் இராசி என்பதை ஓரை என்று சொல்வதில் ஒரு கருத்து வேறுபாடும் இல்லை.

இராசிகளை (ஓரைகளை): மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், என்று சொல்வதை விடுத்து மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் என்று சொல்ல வேண்டும் என்று கூறுவதிலும் ஒரு கருத்து வேறுபாடு இல்லை. இதேபோல் 60 வருடங்களின் பெயர்களையும் தமிழில் மொழி பெயருங்கள்.

ஒரு மொழியில் ஒரு கருத்துக்கு பல சொற்கள் இருந்தால் அது அம்மொழியின் வளர்ச்சியை காட்டும். உ+ம் யானை, வேழம், கரி, வாரணம் எல்லாம் யானையை குறிப்பது தமிழ் மொழியின் சிறப்பு. இதைவிடுத்து தமிழ்வருடப்பிறப்பு தினத்தையே மாற்ற முயல்வது மடமை. ஒரு விஞ்ஞான பூர்வமாக விளக்கக்கூடிய இயற்கை நிகழ்வை சரித்திர சான்றுகள் அற்ற ஒரு கற்பனை நிகழ்வாக மாற்றினால் எமது வருங்கால விஞ்ஞான அறிவு அதிகம் உள்ள திரிலோகங்களிலும் சஞ்சரிக்கப்போகின்ற சமுதாயம் எம்மை எள்ளிநகையாடும்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.



**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



KENNEDY / SHEPPARD New Condo. 1000 sq.ft. 2 bedroom + Den. Low maintenance.

House with Mechanic shop Scarborough

Church for sale Toronto

Buy low, Sell high - 40 years Low Interest
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost
What's your Risk?

We look after seniors over 70 years peaceful life.

Country Style Coffee shop - Oshawa Good Income

வீடும் வியாபாரமும் Business Zoning
Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666
150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# வாழ்தலின் இரகசியம்

## ஓடும் நீர் உறைவதில்லை 82

வாழ்க்கையின் இரகசியம் என்பதும் வாழ்தலின் இரகசியம் என்பதும் வேறுவேறானவை. மனித வாழ்க்கையின் ஆரம்பம் முதல் முடிவுவரை எத்தனையோ சம்பவங்கள், அனுபவங்கள், அறிவுசார்ந்த, உணர்வுசார்ந்த நடவடிக்கைகள் என எண்ணிலடங்காக விடயங்களை நாம் எதிர்கொள்கிறோம். இவற்றினூடாக நாம் எதை அடைகின்றோம் என்பது பற்றியும் அதனால் என்ன விளைவுகள் அல்லது மாற்றங்கள் எமது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது பற்றியும் நாம் அதிகளவு ஒரு மதிப்பீட்டு முறையைக் கொண்டிருப்பதில்லை.

நாம் வாழ்க்கையை நகர்த்துகின்றோமா அல்லது நகர்த்தப்படுகின்றதா என்பது பற்றியும் அதிகளவு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவ தில்லை என்ற உண்மையையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. உண்மையில் நமது வாழ்க்கையை நாம் நகர்த்துவதில்லை. அது நகர்த்தப்படுகின்றது என்பது மறுக்கப்பட முடியாததாகும். அப்படியாயின் யாரால் நகர்த்தப்படுகின்றது அல்லது எதனால் நகர்த்தப்படுகின்றது என்பது பற்றிய தெளிவு அவசியமாகின்றது.

மனிதனின் மிகப்பெரிய பலவீனம் என்பது தனது முன்னேற்றத்திற்குத் தானும் தனது திறமையும் தான் என்பதும் தனது பின்னடைவுகளுக்குக் காரணம் மற்றவர்கள் எனக் கருதுவதுமாகும். இங்கு மிக முக்கியமானதும் அவசியமானதுமான ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதாவது நமக்கு ஏற்படும் சாதக-மான அல்லது பாதகமான அனைத்துக்கும் நமது மனோபாவங்களே அடிப்படைகளாகின்றன. அதாவது வாழ்க்கையின் எந்தவொரு நிகழ்வும், குறிப்பாக நமது கட்டுப்பாட்டுக்குட்பட்டுள்ள அத்தனை நிகழ்வுகளும் விளைவுகளும் நமது உருவாக்கம் மட்டுமே. இவையனைத்தும் நமது தெரிவுகளாகவும், உருவாக்கமாகவும் இருப்பதால் அதன் விளைவுகளுக்கு நாம் மட்டுமே பொறுப்புடையவர்களாகின்றோம். துரதிஷ்டவசமாக இந்த உண்மையை அல்லது பொறுப்பை நாம் புறக்கணித்து விடுகின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் தற்போது எந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதற்கான காரணம் நமது மனோபாவங்களாக இருப்பினும் அந்த மனோபாவங்களின் உரிமையாளர் நாம் அல்ல என்பது விசித்திரமானதே. நமது மனோபாவங்களின் உருவாக்கதாரர்கள் நாம் அல்ல. சூழலின் உள்ளீடுகளே. இந்த உள்ளீடுகள் நமது விருப்பத்திற்கு சாதக-மானவையா அல்லது பாதகமானவையா என்பது பற்றிய தரப்படுத்தலுக்கு இடமளிப்பதில்லை. எமது ஐம்புலன்களால் அறியப்படும் அனைத்தும் நமது மனோபாவ வளர்ச்சிக்கான விதைகளாக அமைகின்றன. இந்த விதைகளின் தரம் பயன்பாடு என்பன எம்மால் வழிப்படுத்தக் கூடியதாக இருப்பது தான் நமது பிறப்பின் சிறப்பாகும். அதாவது தெரிவு செய்யப்படும் விடயம் ஒன்றை நமது எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு புனரமைக்கக்கூடிய திறன் நம்மிடம் இருப்பது ஒரு விசேட அம்சமாகும்.


அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

நமது வாழ்க்கையானது பல்வேறுபட்ட விடயங்களின் ஒட்டுமொத்தமான நகர்வாக அமைகின்றது. வாழ்வில் ஏற்படும் பல விடயங்களுக்கான காரணங்கள் நமக்குப் புரிவதில்லை. சம்பவங்கள் ஒன்றான பின் ஒன்றாக நிகழ்வதும் அதற்கான அடிப்படை என்ன என்பதும் நமக்குப் புரியாததாக அமைந்து விடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் நாம் எதிர்பார்த்த விதத்திற்கு முற்றிலும் மாறானதாக விளைவுகள் இடம்பெறுகின்றன. ஏன் எதற்காக என்பதற்கான விளக்கத்தை எவராலும் வெளிப்படுத்த முடியாது. இதனால் தான் வாழ்கை ஒரு அந்தரங்கமான பாதை என்கின்றோம். அதாவது நமக்குப் புரியாத வகையில் நமது வாழ்வு நகர்த்தப்படுவது என்பது புரிந்துணர்வுள்ளவர்களால் மட்டும் புரியக் கூடியதாக அமைந்துள்ளது. வாழ்க்கையானது தெளிவற்ற, தெளிவுபடுத்த முடியாத, புரிந்த புரியாத எனப் பலவற்றின் சேர்க்கையாக இருப்பினும் ஒன்று மட்டும் ஒருவரது வாழ்க்கையின் சிறப்பைத் தீர்மானிப்பதாக அமைந்துள்ளது. இந்த ஒன்று என்பது ஒவ்வொருவரது வாழ்தலிலும் ஏதோ ஒரு அளவில் பங்கு கொண்டிருந்தாலும் அதைப் புரிந்தவர்கள் இந்த ஒன்றையே தமது நாளாந்த வாழ்தலின் இரகசியம் என்பதை உணர்ந்து கொள்கிறார்கள்.

உலக சரித்திரத்தில் நம்மால் முன்னோடிகளாக, தலைவர்களாக, மகான்களாகக் கருதப்படுவர் கள் அனைவரும் இந்த இரகசியத்தைப் புரிந்து கொண்டவர்கள் தான். உலக மக்கள் தொகையில் இந்த உண்மையைப் புரிந்தவர்களது எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு மட்டுமே. ஏனெனில் இந்த இரகசியத்தின் அடித்தளம் எல்லோருக்கும் இருந்தாலும் அதை இனங்கண்டு கொள்ளும் பக்குவம் மிகச் சிலரிடம் மட்டுமேயுண்டு. இதனால் தான் சிறப்பும் மகிழ்ச்சியும் உள்ள வாழ்வுக்கு இந்த இரகசியம் பற்றிய தெளிவு அவசியமானதாகும்.

இப்போது இந்த வாழ்தலின் இரகசியம் என்ன என்பதைப் பார்ப்போம். உயிர்வாழ்வதற்கு மூச்சுக்காற்று எவ்வாறு முக்கியம்வாய்ந்ததோ அதே போன்று வாழ்தலின் அடிப்படை இரகசியமாக அமைவதும் இதுதான். நான் எழுவதும் நீங்கள் அதை வாசித்துப் பயன் பெறுவதும் இந்த இரகசியத்தின் வெளிப்பாடு தான். நாம் ஒவ்வொருவரும் தற்போது எந்த நிலையில் உள்ளோம் என்பது எமது தனிப்பட்ட முயற்சியின் பெறுபேறு மட்டும் என்பதாகக் கருதுவது முற்றிலும் தவறானதாகும். ஏனெனில் நமது வாழ்தலின் அளவும் தன்மையும் நாம் அல்லாதவற்றின் கொடுப்பனவால் இடம் பெறுகின்றன என்பது தான் மிகவும் முக்கியமாக அறியப்பட வேண்டியதாகின்றது. நாம் இன்று எந்த நிலையில் உள்ளோம் என்பது நாம் தவிர்ந்த மற்றைய அனைத்தினதும் கொடுப்பனவாகும். இதனால் தான் வாழ்தலின் இரகசியம் என்பது கொடுத்தல் என்பதாகின்றது. (Secret of living is giving) அதாவது கொடுத்தல் வாழ்தலின் இரகசியமாகின்றது. இப்போது இந்தக் கொடுத்தலின் சிறப்புப்பற்றிய விளக்கம் ஒன்றைப்பார்ப்போம்.



KG Master-kgmaster@rogers.com

இயற்கையின் உண்மையான பங்களிப்பின் இரகசியம் கொடுப்பவருக்கு சிறப்பை கொடுப்பதாகும். நாம் ஒவ்வொருவரும் இயற்கையின் பகுதியாக இருப்பதும் அந்த இயற்கையின் பூரணத்துவமான பங்களிப்பானது கொடுப்பவர்களுக்குப் பலமடங்கு சாதக-மானதாக அமைவதாகும். அதாவது கொடுக்க கொடுக்க பெருக வைப்பது இயற்கையின் அடிப்படையாகும். சாதாரணமாக இறைக்கின்ற கிணறு மீண்டும் மீண்டும் ஊறுவது போல் கொடுக்க கொடுக்க இயற்கையானது அதன் முழுமையான பங்களிப்பைத் தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டிருக்கின்றது.

ஒரு மனிதனது உண்மையான மகிழ்ச்சி என்பது அவனிடம் உள்ள பொருளாதார வளங்களை வைத்துத் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக மற்றவர்களது முன்னேற்றத்திகான தனது பங்களிப்பும் அந்தப் பங்களிப்பின் மூலம் மற்றவர்களது வாழ்க்கையில் ஏற்படும் நேர்த்தியான மாற்றங்களின் சிறப்புத்தன்மையுமே ஆகும். ஏனெனில் கொடுத்தல் என்பது ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஒரு சிறப்பான உணர்வுக்கு வழிவகுப்பதாக உள்ளது.

இப்போது Living is giving என்ற விடயத்துக்கு வருவோம். கொடுத்தலே வாழ்தலின் அடிப்படையாகின்றது என்பதை நமது பிறப்பில் இருந்து ஆரம்பிப்போம். நமது தாயினது கொடுப்பனவு இடை நிறுத்தப்படாமையே இன்று வரை நாம் உயிர்வாழ்தலுக்கான காரணமாக அமைந்துள்ளது. இங்கே கொடுத்தல் என்பது உயிர்வாழ்தல் என்ற அளவுக்கு அடிப்படையானது என்பதை நாம் இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும். இந்தக் கொடுத்தல் என்பது இரண்டுவகையான தன்மைகளைக் கொண்டது. ஒன்று நாம் ஒரு கொடுப்பனவைச் செய்யும் போது அதற்குப் பிரதிபலனாக ஒன்றை எதிர்பார்த்து கொடுத்தல். மற்றைய பிரதிபலன் பாராது கொடுப்பனவு ஆகும். பிரதிபலன் எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு வியாபாரத் தன்மையின் அடிப்படையிலானது. இங்கே ஏதோ ஒருவகையான இலாபத்தன்மை அடிப்படையாக எதிர்பார்க்கப்படுவதால் இந்தக் கொடுப்பனவானது உள்ளம் சார்ந்ததாக அமைவதில்லை.

உண்மையில் வாழ்தலின் இரகசியமாக அமைவது பிரதிபலன் பாராத கொடுப்பனவாகும். பிறப்பு முதல் இறப்புவரை நமது ஒவ்வொரு கணப்பொழுதும் இயற்கையின் பிரதிபலன்பாராத கொடையின் முற்றுமுழுதான பங்களிப்பு என்பதே உண்மையாகும். நமது மூச்சுக்காற்று முதல் இயற்கையின் அத்தனை பங்களிப்பும் பிரதிபலன் பாராத கொடுப்பனவே. இதனால் தான் இந்த இரகசியத்தின் சிறப்பை நாம் புரிந்து கொள்வோமாயின் ஒரு சிறப்பு மிகுந்த வாழ்க்கைக்குப் பிரதிபலன் பாராது கொடுக்கும் உள்ளம் அத்திவாரமாகின்றது என்பது புலப்படும்.

உண்மையில் இந்த உலகில் வாழ்ந்தவர்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர் களிலும் மிகவும் சிறப்பாகவும் மகிழ்வாகவும் வாழ்ந்தவர்கள் அல்லது வாழ்பவர்கள் இந்தப் பிரதிபலன் பாராத கொடுத்தலைத் தமது உயிர் மூச்சுக்கு இணையாக முதன்மைப்படுத்தியவர் களாவர் ஒரு தாயின் குழந்தை மீதான கொடுப்பனவுக்கு நிகராக எந்தக் கொடுப்பனவும் கிடையாது. முற்றுமுழுதாகத் தன்னை அர்ப்பணிக்கும் அந்தக் கொடுப்பனவின் பெறுபேறுகள் குழந்தையின் சிறப்பான வாழ்க்கை என்பது மட்டுமே. அதாவது தாயின் இந்தப் புனிதமான கொடுப்பனவு என்பது எள்ளவு கூடச் சுயநலன் சார்ந்ததாக இருப்பதில்லை. இந்தவகையான கொடுப்பனவே இறைவனும் மெச்சும் கொடுப்பனவாகும். ஏனெனில் இந்தக் கொடுத்தலில் உள்ள சிறப்புக்கு எந்தவிதமான அளவீடுகளும் பொருத்தமற்றதாகும். இங்கே கொடுத்தலின் சிறப்பைப் புரிந்து கொள்வதற்கு ஒரு தாயின் பிரதிபலன்பாராத கொடுப்பனவைக் குறிப்பிடுகின்றோம். இதே போன்றுதான் ஒவ்வொரு மனிதனும் சிறப்பான வாழ்க்கையை, தன்னிறைவான வாழ்க்கையை வாழ்தலின் அத்திவாரமாக அமைக்கப்படல் வேண்டும்.

**ஆம் வாசகர்களே!**

நமது உயிர்வாழ்தல் என்பது நாம் அல்லாத பலவற்றின் கொடுப்பனவால் நகர்த்தப்படுகின்றது. இவ்வாறான கொடுப்பனவுகளின் எதிர்பார்ப்புக்கள் எமது நலன் சார்ந்ததாக மட்டுமே அமைகின்றன. ஒருதாயின் தன்னலமற்ற கொடுப்பனவின் ஒட்டுமொத்தமான எதிர்பார்ப்பானது குழந்தையின் நலன் சார்ந்ததாக மட்டுமே அமைவதால் தான் ஒரு தாயின் ஒவ்வொரு கணப்பொழுது வாழ்க்கையும் அன்புமயமானதாயும், இன்பமய-மானதாயும் அமைகின்றது. அதேபோலத்தான் நாம் ஒவ்வொருவரும் எம்மால் இயன்றவற்றைப் பிறர் நலன் மட்டுமே கருதிக் கொடுப்போமாயின் நமது வாழ்வும் அன்பும் இன்பமும் பெருகும் வாழ்வாக அமையும். அதுமட்டுமன்றி அதுவே வாழ்தலின் இரகசியம் என்ற உண்மையையும் உணர்ந்தவர்களாகி விடுவோம். அதுமட்டுமல்ல இந்த இரகசியத்தைப் புரிந்தவர்கள் மட்டுமே வாழ்ந்தவர்கள். புரியாதவர்கள் இந்த உலகிற்கு வந்து போனவர்கள் மட்டுமே.


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

GSF
# Golden Store Fixtures
*Friend for your Business*
sales@goldenstorefixtures.com




Free Estimate & Free Delivery (Over $100 purchase)

355 Admiral Blvd. Unit# 5
Mississauga, ON, L5T 2N1
**Tel.: 905-565-6555**

*We have two locations to serve you better*

**Web:www.goldenstorefixtures.com**




# நினைவுகள்: நாகேஷ் - சிரிப்பு சக்கரவர்த்தி

மற்றவர்களைப் புண்படுத்தாத நகைச்சுவையில், தமிழ் நகைச்சுவை நடிகர்களில் கலைவாணருக்கு அடுத்து நினைவில் வருகிறவர் நாகேஷ். துடுக்குத்தனமான வெள்ளந்தி மனிதராக மூன்று தலைமுறை தமிழர்களை அவர் சிரிக்க வைத்துள்ளார். 1000 திரைப்படங்களுக்கும் மேல் நடித்த பெருமையுடன், நம்மை எல்லாம் சிரிக்க வைத்த அந்த நாகேஷ் இப்பொழுது நம்மிடையே இல்லை. மரணம் அவரை அழைத்துச் சென்றுவிட்டது. நாகேஷின் வாழ்வில் இருந்து சில துளிகள் இங்கே.




1. நாகேஸ்வரன் என்ற இயற்பெயர் கொண்ட நாகேஷ், தமிழ்நாட்டில் தாராபுரம் பகுதியில் கன்னட மாத்வர்கள் வாழும் கொழிஞ்சிவாடி என்ற ஊரில் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். நாகேஷின் தந்தை பெயர் கிருஷ்ணாராவ், தாயார் பெயர் ருக்மணி அம்மாள். தந்தை கிருஷ்ணாராவ் கர்நாடகாவில் அரிசிக்கரே என்ற ஊரில் நிலைய அதிபராகத் தொழில் பார்த்தவர். சிறு வயதிலேயே நாகேஷ் மிகவும் ஒல்லியான தேகம் உடையவராக இருந்தார். அதைக் கிண்டல் செய்வது போல அவரை வீட்டில் குண்டப்பா என்றுதான் 'பட்டப்பெயர்' வைத்து அழைப்பார்கள். நண்பர்கள் குண்டுராவ் என்று அழைத்திருக்கிறார்கள். தாராபுரத்தில் தனது எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துவிட்டு, கோயமுத்தூர் பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில் சேர்ந்து படித்தார், நாகேஷ். கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு அம்மை நோய் வந்தது. அந்த தழும்புகள்தான் மாறா தழும்புகளாக கடைசி-வரைக்கும் அவரது முகத்தில் இருந்தன.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும், இளம் வயதில் இருந்தே எதையாவது சாதிக்க வேண்டும் என்று துடிப்புடன் இருந்த நாகேஷ், ஒரு நாள் தன் பெற்றோரிடம், "நான் திரும்பி வந்தால் ஒரு நல்ல வேலையில் சேர்ந்து, பெரிய ஆளாகத்தான் வருவேன்" என்று சொல்லி வீட்டைவிட்டுக் கிளம்பி சென்னைக்குச் சென்றுவிட்டார். சென்னை வந்த நாகேஷுக்கு ரெயில்வேயில் வேலை கிடைத்தது. சென்னையில் மேற்கு மாம்பலத்தில் ஒரு அறையில் தங்கியிருந்தார் நாகேஷ். அப்பொழுது அவரது அறை நண்பர்களாக அறிமுகமானவர்கள் கவிஞர் வாலியும் நடிகர் ஸ்ரீகாந்தும். ரயில்வே வேலை இருந்தாலும், அக்காலங்களில் பல்வேறு பொருளாதார சிரமங்களுடன்தான் நாகேஷின் நாட்கள் நகர்ந்தன. எனவே, அவருக்கு ரயில்வே வேலையில் அவ்வளவாக திருப்தி இல்லாமல் இருந்தது. எனவே, அதிலிருந்து வெளியேற ஒரு நல்ல வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருந்தார். அப்போதுதான் அவரது வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்திய அந்த கம்ப ராமாயணம் நாடகத்தை அவர் பார்க்க நேர்ந்தது.

நாகேஷுடன் வேலை பார்த்த சக ரயில்வே ஊழியர்கள் நடத்திய அந்த நாடகத்தை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார் அவர். நாடகத்தில் தன்னையும் இணைத்துக்கொள்ள அவரது மனம் விழைந்தது. தனக்கும் ஒரு வாய்ப்பளித்தால் தன்னாலும் நன்றாக நடிக்க இயலும் என்று அவர்களிடம் அவர் சொன்னார்.



- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

அவரது ஆர்வத்தைப் பார்த்து, மிகவும் ஒல்லியான உருவமுள்ள அவருக்கு, உருவப் பொருத்தத்திற்கேற்ப வயிற்று வலிக்காரன் வேஷத்தை கொடுத்தார்கள். முதல் வேஷம், மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டார் நாகேஷ். அந்த நாடகத்தைப் பார்க்க வந்த சிறப்பு விருந்தினரான எம்.ஜி.ஆர். இடைவேளையின் போதே மேடையேறி, "அந்த வயிற்று வலிக்காரன் மிகவும் நன்றாக நடித்தான்" என்று பாராட்டி பேச, நாகேஷை எல்லோரும் கவனிக்கத் தொடங்கினார்கள். அதனைத் தொடர்ந்து பல்வேறு நாடகக் குழுக்களில் இருந்து சின்னச் சின்ன வேடங்கள் நடிக்க அவருக்கு அழைப்பு வந்தது. ஒரு நாடக அரங்கேற்றத்தில் நாகேஷின் நடிப்பைப் பார்த்த

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

# தொலைக்காட்சி நெடுந்தொடர்களின் வெற்றி ரகசியம்?

## நேர்காணல் - 'கோலங்கள்' வசனகர்த்தா பாஸ்கர் சக்தி



இன்று தமிழ் திரையுலகின் 'பிஸியான' வசனகர்த்தாக்களில் ஒருவர், எழுத்தாளர் பாஸ்கர் சக்தி. தொலைக்காட்சி, திரைப்படம் இரண்டிலும் வெற்றிகரமான வசனக்கர்த்தாக இருப்பவர், இதனாலேயே ராசியானவர் என்றும் பெயர் எடுத்திருக்கிறார். எளிமையும் சகஜமுமான நடை, நுண்ணிய நகைச்சுவை உணர்வு கொண்ட பாஸ்கர் சக்தியின் கதைகளைப் போலவே, அவரது திரை வசனங்களும் கூர்மையானவை. 'காவிரி', 'லட்சுமி', 'மெட்டி ஒலி', 'கோலங்கள்' என பல தொலைக்காட்சித் தொடர்களுக்கும், 'எம்-மகன்', 'முனியாண்டி விலங்கியல் இரண்டாம் ஆண்டு', 'வெண்ணிலா கபடிக் குழு' ஆகிய திரைப்படங்களுக்கும் வசனமும் எழுதியுள்ளார். சென்னை, கே.கே.நகரில் இருக்கும் பாஸ்கர் சக்தியின் இல்லத்தில் 'விளம்பரம்' இதழுக்காக அவரைச் சந்தித்தோம்.



**- சந்திப்பு சிவதானு -**

கேள்வி: ஒரு திரைப்பட வசனகர்த்தா என்ற இன்றைய இடத்தை நோக்கிய உங்கள் பயணத்தையும் நீங்கள் கடந்து வந்த பாதையையும் சொல்லுங்கள்?

பாஸ்கர் சக்தி: எங்கள் ஊர் தேனீ மாவட்டத்தில் போடிநாயக்கனூர் பக்கத்தில் உள்ள சின்னமனூர் என்ற சிறிய கிராமம். போடி கல்லூரியில்தான் நான் ஆங்கிலம் இளங்கலை படித்தேன். பிறகு, சட்டம் பயிலும் நோக்கத்தில் சென்னை வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்தேன். சட்டக் கல்லூரி காலம் முடிந்ததும் திரும்பி ஊருக்கேச் சென்றுவிட்டேன். ஆனாலும், இக்காலகட்டத்தில் கதைகள் எழுதத் தொடங்கியிருந்தேன். இதனால் பத்திரிகைகளுடன் எனக்கு ஒரு தொடர்பு ஏற்பட்டு, அது என்னை சென்னையை நோக்கி நகர்த்தும்படியாக அமைந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் 'இந்தியா டுடே' தமிழ் பதிப்பு நடத்திய அறிமுக எழுத்தாளர்கள் சிறுகதைப் போட்டியில் எனக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. அதுதான் பரவலாக எனக்குக் கிடைத்த முதல் அறிமுகம். நான் ஒரு எழுத்தாளராக ஆனேன். தொடர்ந்து 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் என் கதைகள் பிரசுரமானது. 'ஆனந்த விகடன்' அலுவலகத்துடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு, அங்கேயே பணிபுரியும் வாய்ப்பு வந்தது. 'ஆனந்த விகட'னில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஞாநி 'வின்நாயகன்' பத்திரிகையின் ஆசிரியராக பொறுப் பேற்றார். அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டு 'வின்நாயகன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக சேர்ந்தேன். அடுத்த மூன்றே மாதத்தில் அந்தப் பத்திரிகை நிறுத்தப்பட நான் வேலையில்லாமல் ஆனேன். அப்பொழுது மீண்டும் இன்னொரு பத்திரிகையில் சேர்ந்து வேலை பார்ப்பதைவிட முழுநேர எழுத்தாளராக இருப்போம் என முடிவு செய்தேன். இதுதான் நான் திரைத்துறையை நோக்கி வர முதல்படியாக அமைந்தது.

'ஆனந்த விகட'னில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது, இயக்குநர் கே.பாலசந்தரின் 'மின்பிம்பங்கள்' நிறுவனத்தினர் 'ஏழு நாள் சூரியன் ஏழு நாள் சந்திரன்' என்ற என் குறுநாவலை சிறிய தொலைகாட்சித் தொடராக தயாரித்தார்கள். பாலசந்தரின் மகனும் ஆவணப்பட இயக்குநருமான கைலாஷ்தான் அதை தயாரித்தார். 'மெட்டி ஒலி' திருமுருகன் அதை இயக்கினார். அப்பொழுது திருமுருகனுடன் ஏற்பட்ட நட்பு என் வாழ்க்கையின் முக்கிய திருப்பு முனையானது. திருமுருகன் தனியாக தொலைகாட்சித் தொடர்கள் இயக்க ஆரம்பித்த போது, அவை எல்லாவற்றுக்கும் என்னையே வசனம் எழுதக் கூப்பிட்டார். அதில் நான் 'மெட்டி ஒலி' தொலைகாட்சி தொடருக்கு எழுதிய வசனம், யார் இந்த பாஸ்கர் சக்தி என்று என்னை நோக்கி எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. இதேகாலகட்டத்தில், திருமுருகனிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய திருச்செல்வம் தனியாக 'கோலங்கள்' தொலைகாட்சித் தொடரை இயக்க ஆரம்பித்தபோது, அதற்கு என்னை எழுதக் கூப்பிட்டார்.

திருமுருகன் திரைப்படத்துறைக்கு வந்த போது என்னையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். 'எம்-மகன்' திரைப்படத்தை அவர் இயக்கிய போது, அதற்கு நான் வசனம் எழுதி திரைப் படத்துறைக்கு அறிமுகமானேன். தொடர்ந்து அவரது 'முனியாண்டி விலங்கியல் மூன்றாமாண்டு'க்கும் நானே வசனம் எழுதினேன். அப்புறம், 'வெண்ணிலா கபடிக் குழு' வாய்ப்பு வந்தது.

கேள்வி: இப்பொழுது என்னென்ன படங்கள், தொலைக்காட்சி தொடர்களுக்கு எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?

பாஸ்கர் சக்தி: 'மா' திரைப்படத்துக்கு வசனம் எழுதுகிறேன். 'கோலங்கள்' தொலைக்காட்சித் தொடர் ஏற்கெனவே வந்து கொண்டிருக்கிறது.

கேள்வி: 'கோலங்கள்' கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக வந்து கொண்டிருக்கிறது. 'மெட்டி ஒலி'யும் இதுபோல்தான் நீண்ட நாட்களாக வந்துதான் நின்றது. இந்த நீண்டத் தொடர்கள் சலிப்பு ஏற்படுத்தவில்லையா?

பாஸ்கர் சக்தி: பொதுவாகவே எந்தவொரு வேலையையும் இவ்வளவு நாட்கள் தொடர்ந்து செய்துகொண்டிருந்தால், யாருக்கானாலும் சலிப்பு வரத்தான் செய்யும். எனக்கும் வந்திருக்கிறது. தொடர்ந்து வசனங்களாக எழுதி, எழுதி அலுத்துப்போய்விட்டேன்தான். ஆனால், மக்கள் அதைக் கொண்டாடுகிறார்கள். இத்தனை வருடமாக இழுத்துக்கொண்டே வருகிறதே என நீங்களும் நானும்தான் நினைக்கிறோம். மக்கள் அவர்கள் குடும்பத்துக்குள் நடக்கும் ஒரு விடயம் போலவே அதைப் பார்த்துக்கொண்டு வருகிறார்கள்.

கேள்வி: தொலைக்காட்சி தொடர்கள் வசனத்துக்கும் திரைப்பட வசனத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. முன்னதில் பக்கம் பக்கமாக வசனம் பேசலாம், பின்னதில் முடியாது. நுட்பமாகவும் சுருக்கமாகவும் விடயத்தை சொல்லிவிட வேண்டும். நீங்கள் எப்படி இரண்டிலும் ஒரே நேரத்தில் பயணம் செய்கிறீர்கள்?

பாஸ்கர் சக்தி: உண்மைதான். தொலைக்காட்சி தொடர்களைப் பொறுத்தவரைக்கும் முதலில் அவர்கள் ஒரு காட்சியை கொடுப்பார்கள். அதை நான் பக்கம் பக்கமாக நாவல் மாதிரி சம்பங்களும் உரையாடல்களும் சேர்ந்து வளர்த்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு நாள் முடியும் போதும் அடுத்த நாள் என்ன என்கிற எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிற மாதிரி முடிக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் வசனம் இருக்க வேண்டும். ஆனால், திரைப்படத்தில் இது நேர் எதிர். முடிந்தவரைக்கும் நேரத்தைக் குறைக்கவேண்டும்.

தொடர்ந்து தொலைக்காட்சி தொடர்களுக்கு எழுதிப் பழக்கப்பட்ட நான், முதலில் 'எம்-மகன்' திரைப்படத்துக்காக எழுதும் போது சிரமப்பட்டேன். நீங்களே பார்த்தீர்கள் என்றால் தெரியும். அதில் தொலைக்காட்சி தொடர்கள் மாதிரி வசனங்கள் நீளமாக இருக்கும். அந்தப் பிரச்சினை 'முனியாண்டி விலங்கியல் மூன்றாமாண்டு' திரைப்படத்தில் கொஞ்சம் இருந்தது. இப்பொழுது 'வெண்ணிலா கபடி குழு'வில் சுத்தமாக இருக்காது. 'மா'வில் வாய்ப்பே இல்லை என்று நான் உங்களுக்கு உறுதி தருகிறேன்.

கேள்வி: சமீப காலமாக பத்திரிகைகளில் உங்கள் கதைகளை அதிகம் பார்க்க முடிவதில்லையே?

பாஸ்கர் சக்தி: ஆமாம். தொலைக்காட்சித் தொடர்கள், திரைப்படம் என இரண்டு தளங்களில் வாரம் ஏழு நாட்களும் ஓயாமல் இயங்கிக் கொண்டிருப்பதால், கதைகள் எழுதுவதற்கான அவகாசம் மிகவும் குறைந்துவிட்டது. நான் ஒவ்வொரு நாளும் காலையில் எழும்பும் போதே, நான் செய்யவேண்டிய வேலைகள் கழுத்து வரைக்கும் இருக்கும். முதல் நாள் இரவு எட்டு மணிக்கு நாளை மறுநாள் நாள் எடுக்கவேண்டிய காட்சியைச் சொல்லிவிட்டு சென்றுவிடுவார்கள். நான் அதை என் மனதில் போட்டு உருட்டிக்கொண்டே இருப்பேன். காலையில் எழும்பும் போது ஒருமாதிரி அது ஒரு வடிவத்துக்கு வந்திருக்கும். அப்படியே எழுதத் தொடங்கினால் மதியம் உணவு வரைக்கும் அது

தொடர்ச்சி 17ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

mhc

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# பலவகை நோய்களையும் பறந்தோடவைக்கும் யோகாசன சிகிச்சை

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## HEALING YOGA Therapy

மனோதத்துவ அடிப்படையில் ஏற்படும் வியாதிகள் தான் மிகவும் சிக்கலானவை என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. நமது உடம்பு சரிவரச் செயல்படுவதற்கும் அதன் சக்தியை நாம் முழுமையாகப் பெறுவதற்கும் மனம் உடலுடன் ஒத்துழைக்க வேண்டும்.

மனத்தை அமைதிப்படுத்தச் செய்வது, புத்திக்கூர்மையை அதிகரிக்கச் செய்வது, சிந்தனையைத் தெளிவாக்குவது என்பனவற்றிற்கு இன்றைய மருத்துவ முன்னேற்றத்திலும் கூடத் தெளிவான வழிமுறைகள் இல்லை. ஆனால் யோக வழியில் எந்த மருந்தும் நமது முன்னோர்கள் மிக எளிதாக அடைந்துள்ளனர்.

மனமும், உடலும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை என்பதை இன்றைய மருத்துவம் மிக தெளிவாக்குகின்றது. மனநிலை தெளிவாகவோ அமைதியாகவோ இல்லாதவர்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு, ஆஸ்துமா போன்ற நோய்கள் வந்து சேருகின்றன. இன்றைய வாழ்வில் நாம் பலவித நாகரிகமான வசதிகளைத் தேடிக் கொண்டுவிட்டோம் அதனால் நமது வாழ்வை உடல் சிரமமின்றி நடத்தமுடிகிறது. ஆனால் இந்த நாகரிக வாழ்வினால் உருவாகியிருக்கும் அவசரம், பதட்டம், வேகம், தடுமாற்றம் ஆகியவை சுகத்தைத் தேடி நமது உடலை உலுக்கி எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்றைய வாழ்வில் நாள் முழுவதுமே பதட்டம் அதிகமாக உள்ள ஒரு உடல் நிலையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.



அப்போது நமது நரம்புகள் அனைத்தும் முறுக்கேறுகின்றன. இரத்த ஓட்டமும் அழுத்தமும் எல்லையை மீறும் அளவுக்கு சென்று கொண்டிருக்கிறது. இருதயத்துடிப்பும் அதிகரிக்கின்றன. இன்றைய உலகில் எண்பது வீதத்தினர் ஏதோ ஒரு வகையில் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றனர் என்று மனோதத்துவ நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். நாம் அன்றாடம் வாழ்வில் சந்திக்கும் எல்லா சிக்கல்களையும் யாரிடமும் மனம் விட்டுச் சொல்வதில்லை. அவற்றை மனதினுள்ளே எண்ணிப்பார்த்து விபரீதமான கற்பனையை உருவாக்குகின்றோம். இப்படியே மனதிற்குள்ளே அடிக்கடி ஏற்படும் அனுபவம் உடல் நிலையில் மிகவும் சிக்கலான கோளாறுகளை ஏற்படுத்தி விடுகிறது. வயிற்றில் அமிலம் கூடி குடற்புண் (Ulcer) ஏற்படுதல், தலைவலி, மூட்டில் வலிகள், நீரிழிவு போன்றவை நாளடைவில் நமது உடலை வந்து பற்றிக் கொள்கின்றன.

இவ்வாறு துன்பப்படுபவர்களை இன்றைய மருத்துவ நிபுணர்கள் எவ்வாறு வைத்தியம் செய்து விடுவிக்க முயல்கின்றனர்? இதன் அடிப்படையை அவர்கள் ஆராய்வதில்லை. வெளிப்படையான அடையாளங்களை மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். அல்லது சோதனைகள் மூலம் புரிந்து கொள்கின்றனர். அவர்கள் செய்யும் வைத்தியமும் அந்த வெளிப்படையான அடையாளங்களை குணப்படுத்தும் முயற்சியுடன் நின்று விடுகின்றது. இதனால் அந்த நோயாளிகள் அடிப்படையான சிக்கலிலிருந்து விடுபடுவதில்லை.

உதாரணமாக இரத்த அழுத்தம் கூடுவதை எடுத்துக் கொள்வோம். இது தொடர்ந்து ஒருவருக்கு இருந்து வரும் மனக்கலக்கம், கவலை ஆகியவற்றின் அடிப்படையில் தான் ஏற்படுகிறது. அதனால் அவரது உடல் நிலையும் நரம்பு மண்டலங்களும் பாதிக்கப்படுகின்றன. ஆனால் இதற்கு வைத்தியம் செய்பவர் என்ன செய்கிறார்? மருந்துகளை கொடுத்து இரத்த அழுத்தம் கூடாமல் பார்த்துக் கொள்கிறார். அதாவது உடலின் இயக்கம் மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் அடிப்படை யான சிக்கலை தவிர்க்கவோ, உடல் நிலையைப் பலப்படுத்தவோ அது உதவுவதில்லை. இங்கு தான் நம்முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற யோகாசன பிராணாயாம முறைகள் கைகொடுகின்றன.

இன்று உலக நாடுகள் பலவற்றிலும் மாற்று மருத்துவமான யோகாப்பியாச முறைகள் புகழ்பெற்ற மருத்துவர்களாலேயே உபயோகிக்கப் படுகின்றன. புகழ்பெற்ற மருத்துவ மனைகளிலும் யோகா தெரபி (Yoga Thirphy) முறைகள் கையாளப்படுகின்றன.

தினமும் யோகாசன பயிற்சி செய்பவர்கள் கோபம், வெறுப்பு, பொறாமை என்பவற்றில் ஈடுபடுவதில்லை. ஒரு தனி மனிதனை உயர்த்துவதோடு மட்டுமன்றி ஒரு சமூகத்தையே கட்டுபடுத்தி வாழ்வை வளம்பெற செய்வதற்கு இந்த பயிற்சி உதவுகிறது.

இந்த பயிற்சி முறைகளை ஒரு நோயாளி ஒருமாதம் அல்லது இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்பு, தானே பயிற்சி செய்து வாழ் நாள் முழுவதும் பயன்பெற முடியும் இப்பயிற்சி 'யோகா சிகிச்சை' எனப்படும். இதற்கு முதலில் ஒரு யோகாசன நிபுணர்கள் உதவி தேவை.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


# தொலைக்காட்சி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

போகும். சாப்பாட்டுக்குப் பிறகு மீண்டும் உட்கார்ந்து எழுதிவிட்டு தூங்கச் செல்வேன். சாயங்காலம் எழுந்து ஒரு சிறிய நடை சென்றுவிட்டு திரும்பும்போது, அடுத்தநாளுக்கு அடுத்த நாள் எடுக்க வேண்டிய காட்சிகளுடன் உதவி இயக்குநர் எனக்காகக் காத்திருப்பார்.

என் சிந்தனையோட்டமும் வசனங்களுக்கு பழகி விட்டது. எனவே, கதைகள் எழுத உட்கார்ந்தா லும் அது வசனங்களாகத்தான் வருகிறது.

கேள்வி: உங்கள் வசனங்கள் வெற்றிக்கு காரணம் என்ன?

பாஸ்கர் சக்தி: அடிப்படையில் நான் பெரிய சோம்பேறி. ஆனால், நல்ல வாசகன், நிறைய படிப்பேன். மறைந்த எழுத்தாளர்கள் ஆதவன், சுந்தர ராமசாமி மற்றும் இந்திரா பார்த்தசாரதி ஆகியோர் என் ஆதர்ஷ எழுத்தாளர்கள். இவர்கள் மட்டுமல்லாமல் அக்காலங்களில் நிறைய தேடித்தேடி படித்திருக்கிறேன். முப்பது வயசு வரைக்கும் ஒரு வெறியோடு தொடர்ந்து படித்தேன். அதன்பிறகுதான் எழுத ஆரம்பித்தேன். அதுதான் என் பலம்.


கேள்வி: உங்கள் வசனங்களால் கவரப்பட்ட ரசிகர்களில் உங்களைக் கவர்ந்தவர்கள்?



பாஸ்கர் சக்தி: நிறைய பேர் இருக்கிறார்கள். ஒருவரை மட்டும் சொல்லுகிறேன். 'மெட்டி ஒலி' தொடரில் தற்கொலை செய்யும் நோக்கத்துடன் கிணற்றுப் பக்கம் செல்லும் தகப்பன், மழை பெய்தவுடன் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு திரும்பிவிடுவார். அந்தக் காட்சிக்காக நான் எழுதின வசனத்துக்கு நல்ல வரவேற்பு. சில நாட்கள் சென்று பெரியகுளம் என்னும் ஊரில் இருந்து பிரகாஷ் என்பவர், என் தொலைபேசி எண்ணை எங்கேயோ கண்டுபிடித்து, என்னைத் தொடர்புகொண்டார். அவருக்கு அதிகமான குடிப்பழக்கம் இருந்திருக்கிறது. அதை அவரால் கைவிட முடியவில்லை. அதனால் ஏற்பட்ட மன உளைச்சலில் தற்கொலை செய்துகொள்ளலாம் என முடிவு செய்தவர், அன்றுதான் இந்தக் காட்சியைப் பார்த்திருக்கிறார். உடனே தன் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார். அத்துடன் நிற்கவில்லை. குடிப்பழக்கத்தைக் கைவிடுபவர்களுக்கான மறுவாழ்வு மையம் ஒன்றைத் தொடங்கி நடத்தி வருகிறார். இதுதான் தொலைக்காட்சித் தொடர்களின் வெற்றி ரகசியம்.

கேள்வி: எதிர்கால கனவு?

பாஸ்கர் சக்தி: ஒரு திரைப்படம் எடுக்கனும்னு ஆசை இருக்கு. அது என் கனவுப் படமாக, தமிழில் நல்லதொரு 'மிடில்' சினிமாவாக இருக்கும்.




## S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்

மக்கள் சேவை சதாசிவ சேவை

**மூத்தோருக்கான சேவைகள்**

- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

**மற்றைய சேவைகள்**

> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

முற்றிலும் இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

*BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774*

## Answers - 240 March 15, 2009

1) If my dog ran twice as fast as my cat, my cat ran only 50 m when my dog ran 100 m and the cat was 80 – 50 = 30 m from home.
2) Mark is 12 and his sister is 6. Their mother is twice the sum of their age, so their mother's age is 2(12 + 6) = 36
3) 3 10 10 – 10 10 10 10. The first digit can be any one of the 3, 5, or 6, three choices. For each of these, the second digit can be any one of the 10 digits. Similarly, the remaining digits can be any one of the 10. Hence from the product rule there will be 3 x $10^6$ seven digit telephone numbers starting with 3, 5, or 6.
4) 2 4 3 2 1 1. The first person on the left can be either of the two tabled people, 2 choices, and the position of the extreme left then is filled with the other of the two tallest people. The second can be filled with any of the four remaining peoples, the third 3, fourth with 2, and fifth 1. Hence there are 2. 4. 3.2.1. 1. = 48 possible arrangements.
5) Line $\frac{x^2+bx-3}{x-1}$, $x^2+bx-3=(x-1)(x+3)=x^2+2x-3$

$$b=2 \quad \frac{Line}{x\to 1}\ \frac{x^2+2x-3}{x-1}=\frac{Line}{x-1}(x+3)+4$$

Exists for b = 2

## Questions – 241 –April 1st, 2009

1) In 30 years, Sue will be 1½ times, as old as she is now. How old is she now? [For grade 7 & 8]

2) Of 50 people, 38 have brown hair, 29 have brown eyes, 23 have both brown hair and brown eyes. How many have neither brown haie nor brown eyes? [For grade 8]

3) There are 10 questions on a true/false test. Students attempt all questions.
a) Show how an answer sheet can be represented by a sequence of length 10
(b) How many different answer sheets are possible? [For grade 11 & 12]

4) Six letters A, B, C, D, E, & F are arranged into a sequence of length 6. How many such sequences start with A or end with F? [ For grade with 11 & 12]

5) Suppose the revenue (in thousands of dollars) for sale of x hundred units of and electronic item is given by the function $R(x)=40x^2e^{-0..4x}+30$ where the maximum capacity of the plant is eight hundred units. Determine the number of units to produce so the revenue is a maximum?[For grade 12]


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 3 to University 1st year. Special classes in Functions, vector, Calculus & Data Management.

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier Classes available at Scarborough & Stouffville

**CONTACT: 416 - 431- 6774** (Scarborough)
**647.831.0070** (Stouffville)

**BAR & RESTAURANT FOR SALE**

MIDDLEFIELD & STEELES
With liquor license. At Tim Horton Plaza. Convenient location.
தொடர்புகட்கு: 416.414.5562

**ஓடருக்கு சிற்றுண்டி வகைகள்**

அப்பம், தோசை, கறிறொட்டி, மற்றும் சிற்றுண்டி வகைகள ஓடருக்கு செய்து தரப்படும். Apartment இல் பாவிக்கக்கூடிய New washer & Dryer for sale. Both $600.
416.731.2833/416.615.0509

**BUSINESS SPACE FOR LEASE OR SALE - 2 Months Free**

**MARKHAM & STEELES**

**Business Unit - 600 Sq. ft.** New Plaza. Occupation immediately. SUITABLE FOR BUSINESS OR OFFICE

**Call 416-910-1287 for details**

***ENGLISH TUITION CLASS FOR LADIES***

அடிப்படையிலிருந்து பேச்சு & இலக்கண (Spoken & Grammar) ஆங்கிலம் அனுபவமுள்ள ஆசிரியையால் இளம், முதிய பெண்களுக்கு கற்றுத்தரப்படும்
தொடர்புகட்கு: 416.319.1260

**TUTION CLASSES**

English, Maths, Science and other subjects. By graduate teacher PLACE:
LAWRENCE & MIDLAND,
LAWRENCE & PHARMACY
New washer & dryer for sale.
Both $600 (For Apt. Use)
416.731.2833 / 416.615.0509




***OFFICE OR OPEN SPACE FOR RENT***

**MARKHAM & FINCH**

Mixed use - Office/ Warehouse. Finch view. Approx. 2500sq. ft. Can be rented out as partial unit. Good for office or business
Call for best offer: 416.457.1979




மேலும் பக்கங்கம் 20 & 21



***YOGA - MEDITATION CLASSLESS***

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகுகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***
***Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687***


# ஏப்ரல் 1...


**19ஆம் பக்கத்தொடர்ச்சி**


ஊடாக வான்பரப்பில் நகர்ந்து கொண்டுவரும் இன்னொரு கோளான வெள்ளியினைப் பார்த்து, அதன் தோற்றங்களையும் (வெவ்வேறு நாட்களில்) இடங்களையும் குறித்துக் கொண்டார். அதன்படி,



வெள்ளியானது வான்பரப்பில் அதன் நகர்வின்போது, நமது சந்திரன் போன்றே ஒரு ஆவர்த்தனத்தில் தேய்ந்து, மறைந்து, தோன்றி, வளர்ந்து கொண்டு போவதைக் கண்டார். இப்படியாக கோள் வெள்ளியானது ஒரு ஆவர்த்தனத்தில் தேய்வதும், வளர்வதுமாக இருக்க வேண்டுமெனில், அது கதிரவனை வலம் வந்தால் மாத்திரமே முடியும் என்பதைத் தெளிவுபடுத்தினார். நமது பூமியை வெள்ளி சுற்றிவருமேயாயின், பூமியில் உள்ளவர்களுக்கு வெள்ளியானது எப்பொழுதும் பிறைவடிவிலேயே தோன்ற வேண்டும் என்பதனையும் தெளிவு படுத்த, விண்வெளி உலகம் பரபரப்படைந்தது. மதவாதிகளோ அதிலும் சிறப்பாக கத்தோலிக்கத் திருச்சபையினரே இனம் தெரியாத சங்கடத்துக்குள்ளாகினர்.

உண்மைகளைக் கண்டறிவதற்காக, வான்பரப்பில் கலிலியோவின் தேடல் இன்னமும் தொடர்ந்து. கலிலியோவின் தொலை காட்டியானது பூமிக்கும் மிகவும் அண்மையில் இருக்கும் வான்பொருளான சந்திரனையும் விட்டு வைக்கவில்லை. சந்திரனின் மேற்பரப்பானது குன்றுகளும், குழிகளும் கொண்ட ஒழுங்கற்ற மேற்பரப்பு என்பதனை தொலைக்காட்டியானது தெளிவாகக் காட்டியது. இக்கண்டு பிடிப்பின் மூலமாக அரிஸ்ரோற்றலின் இன்னொரு கருதுகோளான, வான்பொருட்கள் எல்லாமுமே நிறைவானவை, ஒழுங்கானவை என்பதற்கு பெரும் அடியினைக் கொடுத்தது.

அடுத்த இதழிலும் கலிலியோவின் கண்டுபிடிப்புக்கள் வரும்...

# ஏப்ரல் 1 முட்டாள் தினம்!




## பேரண்டக் கதை

கனடாவில் இத்தினமானது அதிக அளவில் பெரியதாகக் கொண்டாடப்படுவதில்லை. தாயகத்தில் அதிகாலையிலேயே இத்தினமானது மிகப்படுவதில்லை. தாயகத்தில் அதிகாலை யிலேயே இத்தினமானது மிகப் பரபரப்பாகக் கொண்டாடப்படத் தொடங்கிவிடும். அந்நாட்களில் நீங்கள் ஏமாந்ததை, ஏமாற்றியதை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். சிரிப்பு வருகின்றதா? சிரித்து விடுங்கள். கலிலியோ! மிகச் சிறந்த விஞ்ஞானி, நல்லதொரு அறிவாளி. பல முட்டாள்கள் சேர்ந்து(?) வாழ்க்கையிலே கலிலியோவினை முட்டாள் ஆக்குவதற்கு முயற்சித்ததை இப்பகுதியில் பார்க்கப் போகின்றோம்.

தனது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் கலிலியோ, விண்வெளி பற்றி அதிக கவனம் எடுத்ததாகத் தெரியவில்லை. எதற்குமே நிறுவல்களைக் கேட்டுக் கொண்ட கலிலியோ விற்கு, விண்வெளி ஆய்வுகளையோ அல்லது எதிர்வு கூறல்களையோ நிரூபித்துக் காட்டக் கூடியதாக இருந்திருக்கவில்லைப் போலும். ஆனாலும் அக்காலத்திலே விஞ்ஞானிகளிடையே அரசல் புரசலாக ஆனால் பரப்பாகப் பேசப்பட்டுக் கொண்ட கொப்ப நிக்கசின் கதிரவ மையப் பேரண்ட வடிவக் கொள்கையானது கலிலியோவை கவர்ந்திருந்தது. கணித விற்பன்னரான கலிலியோவிற்கு கொப்பநிக்கசின் அமைப்பில் உள்ள வான்பொருட்களின் நிலைகள் அர்த்தமுள்ளவை போல் தெரிந்தது. அரிஸ்ரோற்றலின் அமைப்பில் இருந்த பல குளறுபடிகள் கொப்பநிக்கசின் அமைப்பில் இல்லாது இருந்ததைக் கண்ட கலிலியோ, 1597 ஆம் ஆண்டில் கெப்பினருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் கொப்பநிக்கசின் பேரண்ட வடிவ மாதிரியில்தான் தானும் இப்பேரண்டத்தினைக் காண்பதாகப் பொருள் படும்படியாக எழுதியிருந்தார்.

1608 ஆம் ஆண்டில் கான்ஸ் லிப்பேர்ச்ரி (Hans Lippershey) என்பவர் முதல் முதலில் தொலைகாட்டியைக் கண்டு பிடித்திருந்தார். இதற்கு முன்னதாக ஆயிரத்து ஐநூறுகளின் பிற்பகுதியில் ஆங்கிலேயர் ஒருவரும் தொலைகாட்டியினைக் கண்டு பிடித்தாகவும் கூறுவர். ஆனாலும் லிப்பேர்ச்சியின் கண்டு பிடிப்பே பிரல்யமாகியது. அதற்கு ஒரு காரணியாக கலிலியோவும் இருந்தார் என்பதில் பிழையில்லை. உண்மையில் டச்சுக்காரராகிய லிப்பேர்சியின் தொலைகாட்டியானது பொருட்களை உருப்பெருக்கிக் காட்டும் கருவிபோலவே இருந்தது. லிப்பேர்சியின் தொலைக்காட்டியின் அமைப்பினைச் சரியாகக்

## பிரபஞ்சம் - 37

கவனித்து, அதன் அடிப்படையில் கலிலியோ புதியதாய் ஒரு தொலைகாட்டியினைச் செய்து கொண்டார். கலிலியோவின் தொலை காட்டியானது லிப்பேர்ச்சியின் தொலைகாட்டியை யும் விடக் கூடிய உருப்பெருக்க வலுவை உடையதாக இருந்தது. கலிலியோவின் தொலைக்காட்டியின் உருப்பெருக்க வலு 20 என்கின்றார்கள். கலிலியோவின் தொலைகாட்டி யின் ஊடாக வான்பொருட்களைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. பார்க்கவும் தொடங்கினார். இதன் பின்னரே கலிலியோ தனது பார்வையை விண்வெளி நோக்கி அதிக அக்கறையுடன் திருப்பினார் எனலாம்.

1609 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தனது முதலாவது தொலைக்காட்டியை கலிலியோ நிர்மானித்து முடித்திருந்தார். எதற்கும் நிறுவல்கள், நிரூபணங்கள் தேவை என்பதில் கரிசனை கொண்டிருந்த கலிலியோவிற்கு வான்பொருட்கள் பற்றியும் விண்வெளிபற்றியும் தனது கருத்துக்களை உறுதியாகக் கூறுவதற்கு அவரின் தொலைகாட்டிகள் மிக வாய்ப்பாக இருந்தன. ஆம், காலத்திற்குக் காலம் தனது தொலைக் காட்டியின் உருப்பெருக்கும் வலுவை அதிகரிக்கும் வண்ணமாக, தொலைக்காட்டிகளை மெருகுபடுத்திக் கொண்டும் இருந்தார் கலிலியோ. அக்காலத்தின் புதிய கண்டுபிடிப்பான தொலைக்காட்டியின் ஊடாக வான்பரப்பினைத் துருவித்துருவி ஆராயத்தொடங்கினார். விளைவு? பலபுதிய விடயங்களை வெளிக்கொண்டு வந்ததால் தவறான பல பழைய கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். ஆனாலும் இவை எல்லாம் கலிலியோவிற்கு பெருமையை தேடித்தந்ததை விட ஆபத்தையே பெரிய அளவில் கொண்டுவந்தன. புதுப் புது அறிவியல் எதிரிகளைத் தந்ததுடன், சில நண்பர்களுடன் கூட கருத்து முரண்படவேண்டி வந்தது. இவரினால் அதிகம் பாவிக்கப்பட்ட தொலைக் காட்டிகள் 'சாத்தானின் கருவிகள்' எனவும் சில மதத்தலைவர்களினால் கூறப்பட்டு தொலைக் காட்டியின் ஊடாக அவர்கள் எதனையுமே பார்க்கவும் மறுத்து விட்டார்கள்.

1610 ஆம் ஆண்டில் தனது தொலைக்காட்டியின் ஊடாக வியாழன் கோளினைப் பார்த்த கலிலியோ, வியாழனைச் சுற்றி நாலு அதன் சந்திரன்கள் வலம் வருவதைக் கண்டார். வியாழன் கோளினைச் சுற்றி நாலு உபகோள்கள் வலம் வருகின்றன என்ற கண்டுபிடிப்பானது விண்வெளி விஞ்ஞானிகளிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இதனால் அரிஸ்ரோற்றலின் கூற்றுப் பொய்ப்பிக்கப்பட்டது. அத்துடன் ஒரு வான்வெளியில் அசைந்து வரமுடியும் என்பதனையும் கலிலியோ தனது தொலைக் காட்டியின் உதவியுடன் உலகிற்குக் காட்டினார். இன்று வியாழனைப் பல சந்திரன்கள் வலம் வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தெரிந்ததே.

அதே வருடம் செப்ரெம்பர் மாதத்தில், கொப்ப நிக்கசின் கதிரவ மையப் பேரண்டக் கொள்கைக்கு வலுச் சேர்க்கும் விண்காட்சியினைத் தமது தொலைக்காட்டின் ஊடாக, உலகிற்குக் காட்டினார். தனது தொலைக்காட்டியின்



**- கனி -**

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

$135,000

Lawrence/Morningside
Well Maintained Condo
2 +1 Bedroom Condominium
2 Washrooms, Beautiful Lay Out
Parking Space , Good Location,
All appliances

$379,900

Leslie/Major Mackenzie
In A Great Neighborhood
Immaculate Freehold Townwood
Townhouse In High Demand Area,
Spacious And Bright, 9 Ft Ceiling,
Marble Fireplace.

$309,900

Mccowan/Finch
Very Good Neighborhood
3 +1 Bedrooms Detached Home
3 Washrooms, Beautiful Lay Out
Parking Spaces , Upgraded House

$249,900

Morningside & Gardentree
Great Location. Shows Beautiful
Upper Guildwood Area Home,
Hardwood Flooring, This Beauty
With Lovely Private Garden ,
Roof 3 Yrs Old Close To Go Train & Ttc.

For Sale or Rent


Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parkings

HERE IS YOUR CHANCE TO WIN




Jayanthi Sritharan
Real Estate Broker
416.918.5872
Email:sritharanj@rogers.com
web:www.jrealhomes.com
This is not intend to solicit properties currently listed for sale
** some conditions may apply






HomeLife GTA Realty Inc., Brokerage*
Tel: 416.321.6969 Fax: 416.321.6963 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3 *Each office independently owned and operated

## BASEMENT RENT

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, mall, stores. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.471.2877

**WESTNEY / ROSELAND**
1 Bed room basement apartment (Partially furnished) available in Ajax any time. Sep. Entrance. For detail call (647) 333 0029.

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt.apt. for rent. Parking cable & laundry. Near school, TTC, plaza, doctors. Family preferred. Avail. immediately.
416.520.7891 /905.948.1457

**MARKHAM & STEELES**
3 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. 2 bathroom & laundry. Close to nofrills, Wal-mart, school, TTC & plaza. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.828.2709

**VICTORIA PARK & ELLESMERE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to mall, school, TTC, Tamil stores etc. Available immediately.
தொடர்புகளுக்கு: 416.444.3402

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking available. Close to bus & school. Available immediately.
தொடர்புகட்கு: 905.910.9972.

**WARDEN & SHEPPARD**
Newly renovated 1 or 2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to TTC, school & Agincourt Mall. Avail. immediately. தொடர்புகட்கு: 647.885.6319

**McCOWAN & ELSON**
New1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking. Close to all amenities. Avail. immediately.
905.554.5123/416.476.8022

**NEILSON & McLEVIN**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to Malvern Mall, school, doctors & bus. Available immediately.
தொடர்புகட்கு: 416.358.4220

**NEILSON & MORNINGSIDE**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to bus, school, mall. Avail. immediately. Single or couple preferred.
தொடர்புகட்கு: 647.991.8362

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to bus, school, bank & mall. Avail. immediately.
416.438.3339/647.283.9301

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC (2 min. Walk), 5 min. walk to Finch. All amenities close-by. Avail. April 5th, 2009. Couple or 2 single.
தொடர்புகட்கு: 416.492.9816

***LAWRENCE & Scarboro. Golf Club Rd***
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. parking, laundry. Avilable immediately. Close to Bank, TTC, shoping, school, etc. தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.219.4936 / 416.454.9986

**MCCOWAN & 16TH AVE**
இரண்டு அறைகள் கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**McCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance. Parking cable, washer & dryer. Close to Scarborough Town Centre. 24 hours bus. Avail. immediately.
416.431.5172 (Call after 7 pm)

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & cable. Close to Parkway Mall, school, TTC 24 hrs., Plaza. Available immediately.
தொடர்புகட்கு:416.294.4631

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry.Close to bus (24 hrs), Sobey's, Wal-mart. Avail. immediately.
416.724.9125/647.895.4336

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to Wal-mart, tamil stores, bus & school. Avail.immediately.
தொடர்புகட்கு: 416.282.3542

**McCOWAN & FINCH**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking. Close to Woodside Mall, 24 hrs. bus, school. Avail. immediately.
416.412.0406/416.271.9676

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance. Parking & cable. Close to 401, school, bus (2 min), tamil stores & restaurant. Avail. immediately.
416.686.8345/416.388.6603

**NEILSON & McLEVIN**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Laundry facilities. Close to mall, bus, High & Junior school. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.724.8084

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, nofrills & Wal-mart. Avail. May 1st, 2009.
தொடர்புகட்கு: 905.201.9014

**MIDLAND &STEELES**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, Doctor, Priyas store, bakery. Available immediately.
தொடர்புகட்கு; 905.470.2859

**BRIMLEY & SHEPPARD**
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Cable, laundry. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Close to bus, stores & Scarborough Center. Avail. immediately.
416.999.4842 / 416.299.9853

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, cable, parking, laundry & electricity. Close to school, shopping & bus. Available immediately.
416.731.7170/905.709.7082

**BELLAMY & ELLESMERE**
1 bedroom BSMT Apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer. Avail. immediately. Close to School,ttc, subway, scarborough centre, stores....
தொடர்புகளுக்கு: 416.289.6076

**McCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school & mall. Avail. immediately.
416.439.4561/416.616.2524

**KENNEDY & EGLINTON**
1 Room available for rent. Sep. entrance. Cooking facilities. Ideal for working ladies. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.930.1171

**McCOWAN & STEELES**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Close to TTC & YRT, school etc. All facilities. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.205.8502

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to TTC, school, Wal-Mart, Sobey's, bank. Avail.immediately.
தொடர்புகட்கு: 416.834.5219

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry . All facilities close by. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.875.7146

**McCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, washer & dryer. Close to 24 hrs. bus, school etc. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.206.8145

**MARKHAM & ELLESMERE**
2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, cable, laundry. Close to ttc, school, plaza, etc. தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.289.6977 /416.300.6977

**McCOWAN & 14th AVE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & internet. All facilities close by. Ladies or couple preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.727.7550

**MORNINGSIDE & SHEPPARD**
Spacious 2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Utilities included. Close to school, plaza. TTC at door-step. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.283.7876

**MORNINGSIDE & SHEPPARD**
New 2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to TTC, tamil stores, school & mall. Avail. April 01, 09.
தொடர்புகட்கு: 416.828.7822

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Wal-Mart in front. Close to doctors, plaza, school & TTC. Avail. May1st 2009
416.427.2521/416.616.7427

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking & laundry. Close to TTC, bakery, school & tamil stores. Available immediately.
தொடர்புகட்கு: 647.400.3559

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to Wal-Mart, No Frills, TTC & school. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.294.8319

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking & laundry. Close to TTC, Cedarbrae mall. Avail. immediately. தொடர்புகட்கு: 647.929.3192

**MORNINGSIDE & SEWELLS**
1Bedroom bsmt. apt for rent. Parking, cable & laundry. Close to TTC, school & tamil stores. Available immediately.
416.282.2495/647.504.8215

**BELLAMY & EGLINTON**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to mall, TTC, school & GO train. Available immediately.
தொடர்புகட்கு: 647.834.8206

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to Wal-Mart, No Frill, school & bus. Avail. immediately.
905.294.1856 / 905.554.1232

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking & laundry. Close to Malvern Mall, school & TTC. Avail. April 1st, 2009
தொடர்புகட்கு: 416.951.7645

**MCCOWAN & ELSON**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry, cable. Avail. immediately. Close to ttc, school, stores, etc.
தொடர்புகளுக்கு: 905.471.9016

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry, cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.737.3891

**McCOWAN & EGLINTON**
1 Bedroom + den bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Go Station, stores & school. Avail. immediately.
416.300.6797/416.286.8257

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to school, mall & bus. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.587.2704

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to Wal-Mart, TTC, school, plaza. Available immediately.
416.678.9876/905.294.4786

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, shopping. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.201.0046


## ONTARIO FLORISTS


திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, கோவில் மாலை, Funeral services, ஆகியவற்றிக்கு வேண்டிய அனைத்து பூத்தேவைகளும் பூர்த்தி செய்து தரப்படும். கோவில்களுக்கு ஒரு வருடம் மாலை பெற்றால் 3 மாதம் இலவசம். அழைக்கவும்: ***647.201.3111***
***2625 Eglinton Ave. E, #6***

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்:
416.274.5495


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


மேலும் பக்கங்கம் 18 & 21

# ROOM RENT

**SCARB. GOLF CLUB & BRIMORTON**
2 Rooms avail. for rent in main floor & bsmt. Sep. entrance. Close to TTC, Cedarbrae Mall. All facilities close by. Avail. immediately.
Prabha: 416.414.0178

**MARKHAM & EGLINTON**
1 Room in an apt, for rent. Parking, cable & phone. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.349.2597

**BIRCHMOUNT & HUNTINGWOOD**
3 அறைகள் கொண்ட bsmt apartment இல் ஒரு அறை தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, internet, laundry. Avail. anytime. ஆண்கள் விரும்பத்தக்கது. Close to school, TTC & stores.
தொடர்புகளுக்கு: 416.292.4442

**KENNEDY & EGLINTON**
Room available For $450 in an Apartment. Central AC. Close to Subway, Shopping, School, Bus 24 Hrs. Available Immediately.
நாதன்: 416.454.4466
674 Kennedy Road

**NEILSON & FINCH**
1 Room for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to Malvern Mall, school, TTC. Meals optional. Avail. immediately.
ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகட்கு: 416.298.9913

**WARDEN & FINCH**
Room For Rent. Close to all amenities.
தொடர்புகட்கு: 416.495.9775

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**FINCH & BRIDDLETOWNE CIRCLE**
Room avail. for rent with parking, laudry & other facilities. Close to bus, shopping & doctors. Males only. Avail. immediately.
416.502.3033/647.502.0151

**MIDDLEFIELD & ELSON**
Spacious rooms for rent. Sep. entrance. All amenities close by. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.300.4530

**WARDEN & FINCH**
1 Room in 3 Bedroom condo. for rent. Parking, cable, laundry. Close to hospital, bank, mall, tamil stores & restaurant. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.499.6437
416.844.6437 (For Messages)

**LAWRENCE & BELLAMY**
Rooms available for rent. Sep. entrance, parking, cable, laundry all included. TTC at door step. Available immediately. Call after 6 pm on week days & weekends any time.
தொடர்புகட்கு: 647.408.3459

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு.
தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
Attached washroom, Double garage.
Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

**NEILSON & FINCH**
1 room for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Only for woman. Avail. immediately.
416.297.4100/647.239.4100

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent. Parking, cable & laundry. Quiet location. Close to TTC & Tamil stores. Avail. immediately.
416.286.6109/647.628.6109

**NEILSON & McLEVIN**
1 Bedroom with attached bathroom in condo. for rent. All recreation facilities . Available immediately.
416.286.0043 / 416.453.3418

**MARKHAM & STEELES**
1 bedroom for rent. laundry. Avail. immediately. தனி நபர் விரும்பத்தக்கது. ஒரு நேரச் சாப்பாட்டுடன். Rent $350. Close to bus, shopping, etc. தொடர்புகளுக்கு: 416.951.0034

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275
416.439.4076/416.728.0807

**DANFORTH & EGLINTON**
One Room in main floor for rent. Laundry, parking. Close to bus, stores, 5 minutes to Kennedy subway. Ladies preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.201.3111

**NEILSON & TAPSCOTT**
3 Bedroom house for rent. Near Malvern mall. Parking & laundry facilities. Close to school & TTC. Avail. immediately. Also 2 Bedroom bsmt apt. avail. for rent.தொடர்புகட்கு: 416.754.8195

**KENNEDY & DANFORTH**
Room for rent - main floor. No smoking, no pets. Close to all amenities.
தொடர்புகட்கு: 416.717.8979

# CHILD CARE WANTED

**பிள்ளை பராமரிப்பாளர் தேவை**
1 வயது பையனை வீட்டிலிருந்து அல்லது வெளியிலிருந்து வந்து பாராமரிக்க ஆள் தேவை.
தொடர்புகட்கு: 416.458.0537

# DAYCARE AVAILABLE

**MARKHAM & DENISON**
Well experienced, First Aid trained lady. Limited space. School drop-off & pick-up available. தொடர்புகட்கு: 905.209.7012

# BABY SITTING

**NEILSON & FINCH**
உங்களின் பிள்ளைகள் பாரமரிக்கப்படுவதோடு அவர்களுக்கு kinder-garden க்கான ஆயத்தங்களும் செய்து தரப்படும்.
அழைக்கவும்: 416.754.2416

# CAR FOR SALE

Toyota Corolla 2001 CE Plus - 4 doors. Green color, automatic, 4 cylinders, Emission tested, 150K, 1.8 litres, new tires & timing belt. Very clean car. Price $5850 – Negotiable.
தொடர்புகட்கு: 647.896.2304

Toyota camry 2000,140k – $7500
Honda CRV 4x4 2003 – $13500
Contact: 647.284.2346

98 Honda Civic - 4d $3200
94 Honda Accord-Burgandy-$2700
2002 Honda Accord- 2 door, 114k, $7500.
2002 Honda odyssey, 90k, $8000
2004 Lexus Es 330 $13900
Contact: 416.575.5055

மேலும் பக்கங்கம் 18 & 20

# CONDO. FOR RENT

**JANE & FINCH**
3 Bedroom condo. for rent. Parking, internet & laundry. Close to TTC, York University, mall. All amenities near by. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.856.5504

**REXDALE & HWY 427**
Luxury 2 Bedroom condo for rent. 2 Full washrooms, walk-in closet, parking & ensuite laundry. Avail. April 1st, 2009
416.888.3524/416.332.0478

**NEILSON & SHEPPARD**
2 + Den condo. for rent. 2 Four pieces washroom, A/C & parking.Close to Malvern Town Centre. Avail. May 1st, 2009.
தொடர்புகட்கு: 416.335.8055

**NEAR SCARB. TOWN CENTER**
1Bedroom + Den condo. for rent. Prime location. Steps to RT, mall, cinema, bus, underground parking, insuite laundry. Mins to HWY 401. Unobstructed view, Avail. immediately.
தொடர்புகட்கு: 416.806.4567

**KENNEDY & EGLINTON**
2 Bedroom condo for rent or sale. With all facilities. Very good location. Close to TTC, school & mall. Available immediately.
தொடர்புகட்கு: 647.801.9720

# JOB JOB JOB

ஸ்காபரோவில் அமைந்திருக்கும் Ink & Toner & computer assesaries வியாபார அலுவலகம் ஒன்றுக்கு அங்கிலமும் தமிழும் நன்கு தெரிந்தவர் வேலைக்குத் தேவை.
Email: a1inkrainbow@hotmail.com
Fax: 416.286.0334

**NANNY WANTED**
Need a live-in nanny to give care to 5 years old child. Sri Lankan nationality preferred.
தொடர்புகட்கு: 416.464.8523
( Call week ends 9 am - 3pm)

**ESTHETICIAN & COOK WANTED**
***MORNINGSIDE & SHEPPARD***
Experienced Esthetician, Hair- Cutters & Sri Lankan Cook wanted
416.302.8306

**CARE GIVER WANTED**
***MIDLAND & LAWRENCE***
Live-in care giver to look after children. Teach them tamil and able to cook preferred.
பிள்ளைகளை பராமரிக்கக்கூடிய சமைக்க தெரிந்த தமிழ் பெண் தேவை.
தொடர்புகட்கு: 416.454.2810

# INSURANCE

**CAR + HOME = BIG SAVING**
See me for Car & Home insurance and save. **LI Chen**
State Farm Insurance Agent
1200 Markham Rd. ( Markham & Ellesmere) Scarborough, ON
416.431.6800 / 416.571.7219

# மணமகன் தேவை

25 வயதுடைய 5'.6" உயரமான, கொழும்பில் ஆசிரியையாக பணிபுரியும் பெண்ணுக்கு, கனடாவில் வசிக்கும், படித்த, நற்குணமுள்ள வரன் தேவை.
தொடர்புகட்கு: 416.319.1260

# HOUSE FOR RENT

**FINCH & MORNINGSIDE**
3 Bedroom house for rent. Large living & dinning rooms, sun room, 2 washrooms & parking. Close to TTC, School mall. Quit Area. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.892.4875

**BRIMLEY & FINCH**
4 Bedroom house for rent. 3 washroom. 6 parking, Close to TTC- 24 hrs, high school, mall & A/C. Avail. immediately.
416.832.3977/905.294.3312

**MARKHAM & STEELES**
3 Bedroom house for rent. 3 washer; 5 parking; finished bsmt with sep. entrance. Close to Wal-Mart, No- Frills & banks. Avail. immediately.
905.209.9500/416.618.5028

**SEWELLS & MORNINGSIDE**
3 Bedroom semi-detached house for rent. 2 parking. School behind. Close to TTC, Malvern Mall, Library, bank & doctors. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.532.4805 / 416.579.8058

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom house for rent - Main floor. Parking. Close to everything. Available immediately.
தொடர்புகட்கு: 416.823.1858

**McCOWAN & LAWRENCE**
3 Bedroom house for rent. All appliances including washer & dryer. Close to 24 hrs. bus, Scarb. General Hospital. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.206.8145

**BIRCHMOUNT &STEELES**
3 Bedroom house for rent or sale. Rent $ 1300. Sale price $395k
**MARKHAM & SHEPPARD**
3 Bedroom house for rent or sale. Rent $1300.
தொடர்புகட்கு: 416.575.5055

**KENNEDY & DANFORTH**
3 Bedroom house for rent. 2 parking. All facilities. Close to TTC, school. Avail. immediately. 416.717.8979

**MORNINGSIDE & SHEPPARD**
21/2 yrs. New 4 Bedroom house Sale. 2 Garage parking, 21/2 washrooms. Full hardwood floor. Lots of upgrades. Close to all amenities. தொடர்புகட்கு: 905.509.7493

**MORNINGSIDE & MCLEVIN**
3 bedroom house for rent main floor. Parking. Small family preferred. Close to everything.
416.724.1837 / 416.297.8767

# HOUSE FOR SALE OR RENT

**STEELES & 9th LINE**
New modern 4 Bedroom house for sale or rent. 4 washroom, 4 parking. Close to all shopping centers & school.
Avail. immediately.
தொடர்புகட்கு: 416.931.3444

# WAREHOUSE SPACE FOR LEASE

**McCOWAN & NUGGET AVE.**
3000-3500 Sq.ft warehouse space with truch level dock & office for lease. Steel racks (Shelving) available for sale.
Call Selva: 647.435.4839

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# சூனியக்காரன்

**அ. முத்துலிங்கம்**

கொழும்பில் அதிக நாள் நான் வேலைசெய்யவில்லை. ஒருநாள் அதிகாலை ஆப்பிரிக்காவிலிருந்து நீண்ட தந்தி வாசகம் ஒன்று வந்தது. அதுதான் என்னுடைய நியமனப்பத்திரம். உடனேயே பயணம் செய்து வேலையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றார்கள். "அவசரம், அவசரம்" என்று இரண்டு இடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நாட்டின் பெயர் சியாரா லியோன். மேற்கு ஆப்பிரிக்காவில் எங்கேயோ இருந்தது. அந்தப் பெயரைக் கேட்பது அதுவே முதல் தடவை. உலக வரைபடத்தை விரித்துவைத்து அது எங்கே இருக்கிறது என்று தேடினேன். இருக்கிறது. அவர்களுடைய பணம் என்ன? தெரியவில்லை? பொருளாதாரம் என்ன? தெரியவில்லை. அங்கே என்ன அரசு நடக்கிறது? தெரியவில்லை. கூகிள் இல்லாத அந்தக் காலத்தில் பெரும் ஆராய்ச்சிகள் செய்து பல விவரங்களைத் திரட்டினேன். தந்தி கிடைத்த 12வது நாள் சியாரா லியோனுக்கு போய் இறங்கி வேலையை ஒப்புக்கொண்டேன்.

ஆப்பிரிக்கா என்றால் கறுப்பு என்ற எண்ணம் எனக்கு எப்படியோ ஏற்பட்டிருந்தது. கறுப்புக் கண்டம் என்று அழைத்ததால் இருக்கலாம் அல்லது கறுப்பின மக்கள் அங்கே வாழ்ந்ததால் ஏற்பட்டதோ தெரியாது. நான் முதன் முறையாக விமானத்திலிருந்து இறங்கி ஆப்பிரிக்க மண்ணில் காலடி வைத்தபோது என்னுடைய கண்களை தாக்கிய நிறம் பச்சை. பச்சை மரங்கள் பச்சைப்பசேல் என்ற புற்கள் அன்று வானம் கூட பச்சை நிறத்திலேயே இருந்தது.

தொட்டால் வெட்டிவிடக்கூடிய கூரான மடிப்புக்கொண்ட வெள்ளை நிற சீருடைகளை அணிந்துகொண்டு குடிவரவு அதிகாரிகள் முகமன் கூறி வரவேற்றது மற்ற நாடுகளில் காணக்கிடைக்காத ஓர் அதிசயமாகவே எனக்கு பட்டது. எனக்கு முன்னால் வந்துசேர்ந்த என் பயணப்பெட்டி எனக்காக காத்திருந்தது. நான் அதை நோக்கி நடந்தபோது சண்டை ஆரம்பித்தது. எங்கள் ஊர்களில் சாமான் காவிகள் பின்னாலே வந்து தொந்திரவு செய்வார்கள் அல்லது கேள்வி கேட்காமல் தாங்களாகவே பொதியை தூக்கி தலைக்குமேல் வைத்துக்கொண்டு நடப்பார்கள். இங்கே அப்படியெல்லாம் இல்லை. சூட்கேசை அபகரிப்பதற்காக இரண்டு மல்யுத்த வீரர்கள் தங்கள் பலத்தையெல்லாம் பிரயோகித்து சண்டை போட்டார்கள்.அவர்களுடைய போருக்கு காரணமான என்னுடைய சூட்கேஸ் நடுவிலே கிடந்தது.

மெலிந்துபோன பணக்காரர்களைப் பார்க்கமுடியாது. அதுபோல கொழுத்த ஏழைகளையும் காணமுடியாது என்று சொல்வார்கள். ஆனால் நான் வந்து இறங்கிய ஆப்பிரிக்க நாடான சியாரா லியோனில் சாமான் தூக்கிகள் எல்லோரும் நல்ல வாட்டசாட்டமாகவே இருந்தார்கள். பயில்வான்கள் மோதுவதற்கு தயாராக கிருதியை வளர்ப்பதுபோல இவர்களும் தங்கள் உடம்புகளை இந்தச் சிறிய சூட்கேசுகளை சுமப்பதற்காக வளர்த்திருந்தார்கள். உண்மையில் யோசித்துப் பார்த்தபோது சூட்கேசுகளைக் காவுவதற்காக அவர்கள் அப்படிச் செய்யவில்லை,அதைக் கைப்பற்றுவதற்காகத்தான் உடம்பை வளர்த்து வைத்திருந்தார்கள் என்பது புரியும். இவர்களிடமிருந்து என் சூட்கேசை மீட்பது பெரும் பாடாகிவிட்டது. நல்ல காலமாக என்னை அழைத்துப்போக நிர்வாகத்தினர் ஒரு சாரதியை அனுப்பியிருந்தார்கள். அவன் வந்து என்னையும், சூட்கேசையும் மீட்டு அழைத்துப்போனான்.

காரிலே நாற்பது நிமிட நேரம் பயணம் செய்தால் அட்லாண்டிக் சமுத்திரம் வரும். அதை ஒரு மணிநேரம் மிதவையில் கடந்துதான் தலைநகரத்தை அடையவேண்டும். மேலும் இருபது நிமிட பிரயாண தூரத்தில் நான் தங்கப்போகும் ஹொட்டல் இருந்தது. இந்த விபரங்களை சாரதி கூறியபோது மனம் திக்கென்றது. இனி என்ன செய்வது? திரும்பியா போக முடியும்? அடுத்த இரண்டு மணி நேரத்தை ஆப்பிரிக்க மண்ணிலும், தண்ணீரிலும் செலவழிக்கத் தயாரானேன். என் வாழ்க்கையில் மறக்கமுடியாத இரண்டு மணிநேரமாக அது அமையும் என்பது எனக்கு அப்போது தெரியாது.

மிதவை பிரம்மாண்டமானதாக இருந்தது. ஐம்பது, அறுபது கார்கள் ஏற்கனவே அதில் ஏறிவிட்டன. ஒரு பக்கத்தில் பஸ்களும், லொறிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. மிதவையின் மேல் தட்டிலும், கீழ் தட்டிலும் பயணிகள் நிறைந்திருந்தனர். மீன்காரர்களும், கூடைக்காரிகளும் தரையில் இருந்தனர். சில்லறை வியாபாரிகள் நின்றனர். நாலு இராக்கடை பெண்டிர் மேசையில் அமர்ந்து பியர் குடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சதுர அடியைக்கூட வீணாக்கக்கூடாது என்பதுபோல கார்களை ஒன்றோடொன்று ஒட்டியபடி நிறுத்தியிருந்தனர். சாரதி காரிலேயே இருந்தான். நான் இறங்கி ஓரமாக இருந்த ஒரு மர சனத்தில் அமர்ந்துகொண்டேன்.

சிறிது நேரத்தில் மிதவை ஒரு ஆட்டம் போட்டு புறப்படுவதற்கு யத்தமானது. ஐந்தாறு யானைகள் சேர்ந்து பிளிறியதுபோல அதன் ஒலிப்பான் சத்தமிட்டது. கடல் காற்று இதமாக வீசியது. மிதவை நகரத் தொடங்கிய பிறகு ஒருத்தன் தூரத்தில் தோளிலே சால்வைபோல ஓர் உருவத்தை போட்டுக்கொண்டு "நில் நில்" என்று கத்தியபடி ஓடிவந்து கொண்டிருந்தான். அவன் தோளிலே கிடந்த உருவம் முன் பக்கம் காலும் பின் பக்கம் தலையுமாக தொங்கியது. சனங்கள் எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் வேகம் குறையாமல் ஓடிவந்து தண்ணீரில் இறங்கினான். முழங்கால் தண்ணீர் வரைக்கும் ஓடிப் பாய்ந்து மிதவையில் ஏறினான். அவன் விழுந்து போகாமல் மற்றவர்கள் பிடித்துக்கொண்டதால் அன்று உயிர் தப்பினான்.

அப்பொழுதுதான் பார்த்தேன், அவன் தோளில் கிடந்தது குழந்தையல்ல, ஒரு கிழவி. அவனுடைய தாயாராக இருக்கலாம். நான் இருந்த இருக்கைக்கு பக்கத்தில் தரையில் ஓர் இடத்தைப் பிடித்து அதைச் சுத்தமாக்கிவிட்டு தன் தாயாரை அதில் கிடத்தினான். அவரின் தலைப்பா துணியை விரித்து அவள் முகத்து வியர்வையை துடைத்தான். பின்னர் அதே துணியினால் தாயாரை விசிறத் துடங்கினான். அவள் மூக்கினால் மூச்சு விடுவதை நிறுத்திவிட்டு வாயினால் மூச்சுவிட்டபடியால் அது சத்தமாக வந்தது. அவளுடைய முக பாவத்தில் இருந்து அவள் வேதனையில் இருப்பது தெரிந்தது.

அவனுக்கு வயது 25 இருக்கும். தசைநார்கள் முறுகி திரண்ட உடம்பு. நெற்றியிலும், இரண்டு கன்னங்களிலும், கண்களுக்கு கீழேயும் நேர்க்கோடாக கீறி உண்டாக்கிய தழும்புகள் விழுந்திருந்தன. நாலு வருடங்கள் கழித்து குறிப்பிட்ட தழும்புகளை வைத்து இந்த ஆள் மென்டே இனத்தவன், இவன் ரிம்னி இனத்தவன், இவன் லும்பா இனத்தவன் என்று சொல்லும் திறமையை நான் பெற்றுவிடுவேன். ஆனால் ஆரம்பத்தில், அதுவும் முதலாவது நாள், நான் அவை ஏதோ வெட்டுக் காயங்கள் என்றே நினைத்தேன். ஆந்தை படம்போட்ட ஒரு மங்கிய ரீசேர்ட்டை அவன் அணிந்திருந்தான். அந்தப் படத்துக்கு கீழே ENDANGERED என்று எழுதியிருந்தது. காலிலே அணிந்திருந்த ரப்பர் செருப்புக்கும், அவன் போட்டிருந்த நீண்ட கால்சட்டைக்கும் இடையில் நிறைய இடைவெளி இருந்தது.

அவனுடைய தாயாருடைய முகத்தில் சுருக்கங்களும் தழும்புகளும் கலந்துபோய் கிடந்தன. அவை வயதினால் ஏற்பட்ட சுருக்கங்கள் அல்ல வறுமையினால் ஏற்பட்டவை. நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் கண்கள் மூடின. வேதனை தாங்க இயலாமல் போகும்போது கண்களை திறந்து பார்த்தாள். ஒரு நத்தை சுருண்டிருப்பதுபோல அவள் சுருண்டிருந்தாள்.

அந்த இளைஞனின் கண்கள் என் கண்களைச் சந்தித்தபோது நான் "யார், அம்மாவா?" என்று கேட்டேன். அவனுக்கு சிறிது ஆங்கிலம் தெரிந்திருந்தது. பதில் சொல்லும்போது அழுது விடுவான்போல பட்டது. "எனக்கு ஒரேயொரு அம்மாதான் இருக்கிறாள். ஒரேயொரு அம்மாதான் மிச்சம். அவளும் போய்விடுவாள் போல இருக்கிறது" என்றான். நான் பேசாமல் இருந்தேன்.

"என் அப்பாவின் முதல் பெண்டாட்டி அவருக்கு நாலு பிள்ளைகளைக் கொடுத்தாள். என் அப்பாவின் இரண்டாவது பெண்டாட்டி அவருக்கு இரண்டு பிள்ளைகளைக் கொடுத்தாள். என் அப்பாவின் மூன்றாவது பெண்டாட்டிதான் என் அம்மா. அவளுக்கு நான் ஒருவன்தான். அவள் போனால் நான் அனாதையாகிவிடுவேன்" என்று விம்மினான்.

"அப்பா இல்லையா?"

"அவரும் போய்விட்டார். அவருக்கு மறதி வியாதி. இரண்டு வருடகாலம் பெரும் அவஸ்தைப்பட்டார். அம்மாதான் தினம் தினம் அவருக்கு காரம் ஊட்டிவிடுவாள். அவருக்கு அம்மாவை ஞாபகம் இல்லை. என்னையும் ஞாபகம் இல்லை. ஒருவருமே அவருக்கு நினைவில் இல்லை. ஒருநாள் நான் அம்மாவிடம் சொன்னேன், "உன்னைத்தான் அப்பாவுக்கு தெரியவில்லையே. நான் அவருக்கு சாப்பாடு ஊட்டிவிடுகிறேன்" என்று. அவள் சொன்னாள் "அவருக்கு என்னை ஞாபகம் இல்லை, ஆனால் எனக்கு அவரை ஞாபகம் இருக்கிறது." ஒரு நாள் கூட அந்த கடமையை வேறு எவரும் செய்ய அவள் அனுமதித்ததில்லை."

"அம்மாவுக்கு உடம்புக்கு என்ன?"

"நான் மலேரியா என்று நினைத்துத்தான் பீவர் பட்டையை அவித்துக் கொடுத்தேன். ஆனால் அது நிற்கவில்லை. இப்பொழுது தலைநகரத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகிறேன். எங்கள் கிராமத்து சூனியக்காரன் வெளியூருக்கு போய்விட்டான். அல்லாவிட்டால் அவனுடைய ஒரு மருந்து குணப்படுத்தியிருக்கும்."

"அவ்வளவு கெட்டிக்காரனா?"

"பின்ன. நூறு மைல் தூரத்தில் இருந்தெல்லாம் ஆட்கள் வந்து அவனை அழைத்துப் போவார்கள். மழையை கட்டுவதற்கு அவனைவிட திறமான ஆள் இந்த நாட்டிலேயே கிடையாது."

"மழையை கட்டுவதா?"

"ஒரு கல்யாண வீடோ, கொண்டாட்டமோ, விருந்தோ நடைபெறும்போது மழை பெய்யாமல் இருக்க அவனால் மந்திரம் செய்யமுடியும். அவனுடைய மந்திரத்தை மீறி ஒருபோதும் மழை பெய்ததில்லை."

"அம்மாவின் நோய்க்கு என்ன கொடுப்பான்? இலையா, பட்டையா, வேரா?"

"ஒன்றுமே இல்லை. ஒரு கோழி கொண்டுவரச் சொல்லுவான். என்ன மந்திரம் செய்வானோ கோழி முட்டையிடும். அவன் உள்ளங் கையிலேயே முட்டை போடும். அந்த முட்டையை சாப்பிட்டால் நோய் பறந்துவிடும். அவனுக்கு ஊதியமாக அந்தக் கோழியை கொடுத்துவிடவேண்டும்."

மிதவை கிட்டத்தட்ட நடுத்தூரத்தை கடந்துவிட்டது. சூரியன் கடலில் இறங்கிக் கொண்டிருந்தபடியால் காயம் சிவப்பாக மாறியது. மிதவையும் சிவப்பு நிறம் பூசியது. கடலும் சிவப்பானது. செங்கடலை அப்பொழுதுதான் முதன்முதல் பார்த்தேன். அடுத்த கரை தெரிவதாகச் சொல்லி சிலர் கைகாட்டினார்கள். தூரத்திலே மின்மினிப் பூச்சிபோல விளக்குகள் மின்னின.

கிழவி மறுபடியும் முனகத் தொடங்கினாள். மூச்சுத் திணறல் அதிகமாகி மூச்சை எடுக்கும்போது பெரும் சத்தத்துடன் எடுத்தாள். அவளுடைய வேதனையை பார்ப்பதற்கே சங்கடமாக இருந்தது.

"ஏனப்பா, இந்த மிதவையிலே யாராவது வைத்தியம் தெரிந்தவர் இருக்கலாம் போய் பார்த்துவா" என்றேன்.

அவன் தாயாரை என்னிடம் ஒப்படைத்து விட்டு சனக்கூட்டத்துக்குள் மறைந்தான். இரண்டு மணித்தியாலத்துக்கு முன்னர் யாராவது ஓர் ஆப்பிரிக்க மூதாட்டி எப்படி இருப்பார் என்று என்னை கேட்டிருந்தால் அதற்கு பதில் சொல்லமுடியாமல் தடுமாறியிருப்பேன். இப்பொழுது என் பொறுப்பில் இந்த முதியவளை விட்டுவிட்டு மகன் எங்கேயோ மறைந்துவிட்டான். கிழவியின் நெற்றி துடைக்க துடைக்க வியர்த்துக்கொண்டே வந்தது. இவள் ஒரு காலத்தில் யௌவனமாக, இளம் ஆடவரை மயக்கக்கூடிய வனப்போடு இருந்திருப்பாள் என்பதை யோசித்தபோது நம்பக் கூடியதாக இல்லை.

கிழவி மெல்ல பொக்கை வாயை திறந்து சிரித்தாள். அது மிக அழகான சிரிப்பு. இரண்டு வார்த்தைகள் அவர்கள் மொழியில் என்னைப் பார்த்து சொன்னாள். நானும் சிரித்துக்கொண்டே "எல்லாம் சரியாகிவிடும், கவலைப்படாதே" என்று ஆங்கிலத்தில் சொன்னேன். அவள் மறுபடியும் அதே வார்த்தைகளை என்னிடம் கூறினாள். எனக்கு அது விளங்காதது மட்டுமல்லாமல் என்ன மொழியில் பேசினாள் என்பதுகூட தெரியவில்லை. சிகரெட் பிடிப்பவர்கள் புகைவட்டம் விடுவதற்கு வாயைக் குவிப்பதுபோல அவள் வாயை குவித்தாள். அடிவயிற்றில் இருந்து சீறிக்கொண்டு ஒரு மூச்சு வெளியே வந்தது. அதுவே அவள் விட்ட கடைசி மூச்சு.

கிழவி இவ்வளவு சீக்கிரம் இறந்துவிடுவாள் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. மிதவை அதே வேகத்துடன் போனது. அதிலே பயணித்தவர்கள் முன்பு போலவே சத்தம் எழுப்பிக்கொண்டிருந்தார்கள். டிக்கட் எடுத்து பயணித்த ஒரு ஜீவன் முழு டிக்கட்டின் பெறுமதியை பயன்படுத்த முடியாமல் பயணத்தை பாதியிலேயே முடித்தது மற்ற பயணிகள் யாருக்கும் தெரியவில்லை.

இளைஞன் வந்தான். அவன் சூனியக்காரன் ஒருவனும் அகப்படவில்லை என்றான். நான் ஒன்றும் சொல்லாமலே நிலத்தை பார்த்ததும் அவனுக்கு தாய் இறந்துபோனது தெரிந்தது. தாயைக் கட்டிக்கொண்டு அழத்தொடங்கினான். ஏதோவெல்லாம் அவர்கள் மொழியில் சொல்லி அரற்றினான். "ஒரு சூனியக்காரன் கிடைத்திருந்தால் என் அம்மாவை காப்பாற்றியிருப்பேனே. ஒரேயொரு சூனியக்காரன் கிடைத்தாலும் போதுமே" என்று புலம்பினான். கண்ணிலே இருந்து நீர் பொலபொலவென்று கொட்டி அவன் ரீசேர்ட்டில் வரைந்திருந்த புள்ளிபோட்ட ஆந்தையை நனைத்தது. கிழவி இறக்க முன் இரண்டு வார்த்தைகள் அவர்கள் மொழியில் என்னிடம் பேசினாள் என்பதை நான் இளைஞனுக்கு சொல்லவில்லை. அவள் என்ன சொன்னாள் என்பதை நான் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அவள் சொன்னது எனக்கு சொந்தமானதால் அதை ரகஸ்யமாக காப்பாற்ற வேண்டும் என்று எனக்கு பட்டது.

மிதவை அடுத்த கரையை அணுகியதும் திடீரென்று பயணிகள் உயிர் பெற்றனர். பஸ்கள், லொறிகள், கார்கள் இவற்றின் சாரதிகள் தங்கள் வாகனங்களை முன்கூட்டியே இயக்கி அவற்றை "உர் உர்" என்று உறுமிக்கொண்டு எந்தநேரமும் புறப்பட்டு பாய்ந்துபோகும் தயார் நிலைக்கு கொண்டுவந்தனர். கரையை மிதவை தொட்டதும் கூடைக்காரிகளும், மீன்காரர்களும், சில்லறை வியாபாரிகளும், பயணிகளும் இடித்துப்பிடித்து தங்கள் பொதிகளை தூக்கிக்கொண்டு அடுத்த கணம் மிதவை தண்ணீரில் மூழ்கிவிடக்கூடும் என்பதுபோல ஒரே சமயத்தில் ஓட்டம் எடுத்தார்கள்.

முதலில் லொரிகளும், பஸ்களும் அதற்கு பிறகு கார்களும் ஒவ்வொன்றாக சீறிக்கொண்டு கிளம்பின. பெயர் தெரியாத அந்த இளைஞனின் தோளை தொட்டு அவனிடம் விடை பெற்றுக்கொண்டேன். அவனுக்கு என்ன ஆறுதல் வார்த்தை கூறமுடியும் என்பது எனக்கு தெரியவில்லை. கொஞ்சம் இடைவெளி கிடைத்ததும் காரின் கதவை திறந்துகொண்டு உள்ளே ஏறினேன். கார் மெதுவாக ஊர்ந்து கரையில் இறங்கியது. சற்று முன்னர் சந்தடி நிறைந்ததாக இருந்த மிதவை இப்பொழுது வெறுமையாகிவிட்டது. அந்த இளைஞன் தாயாரை ஒரு குழந்தையைப் போல நெஞ்சோடு அணைத்து தூக்கிக்கொண்டு தரையில் இறங்கி நடந்தான். சூரியன் முழுவதும் கடலுக்குள் மூழ்கிவிட்டான். ஆப்பிரிக்கா இருண்ட கண்டமாக மாறியது. அதே மிதவையில் அடுத்த கரைக்கு போகவேண்டிய பயணிகள் நீண்ட வரிசையில் டிக்கட்டுக்காக நின்றார்கள். நான் கடைசியாக திரும்பிப் பார்த்தபோது அந்த இளைஞன் பிணத்தை காவியபடி டிக்கட் வரிசையின் கடைசியில் போய் நின்றான்.

# மத நல்லிணக்கத்தின் அடையாளம் - நாகூர் தர்கா


## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 56

இந்தியாவில் உள்ள முஸ்லீம்களின் முக்கியமான புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று, நாகூர். தமிழகத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ள இந்த ஊர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊர் மட்டுமல்ல, வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் ஊருமாகும். இந்தியாவில் மதத்தின் பெயரால் அப்பாவி மனித உயிர்கள் பலி வாங்கப்படும் அவலம் சுதந்தரப் போராட்ட காலத்திலும், இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போதும் பெரிய அளவில் இருந்தது. அதன்பிறகு நீண்ட காலமாக இல்லாமல் இருந்த இந்த அவலம், சமீப காலமாக மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது அனைவருக்கும் கவலை தரும் விடயம். ஆனால், சமீபகால இந்த மாற்றங்களிலும் சரி சுதந்திரத்துக்கு முன்னும் பின்னுமான அவலங்களிலும் சரி தமிழகத்தில் இதன் பாதிப்புகள் குறைவு. இந்து - முஸ்லீம் - கிறிஸ்தவர்கள் என அனைத்து மதத்தினருமே தமிழகத்தில் மத நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருவது கண்கூடான காட்சி. இதற்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டு, நாகூர். இந்த ஊர் முஸ்லீம்களின் புனித ஸ்தலம் என்றாலும், அங்கு அலை மோதுகின்ற கூட்டத்தில் தெரியும் பத்து தலைகளில் ஒன்பது தலைகள் மாற்று மதத்தவருடையவை. சந்தனம் பூசப்பட்ட மொட்டைத் தலைகளில் இருந்து மதம் கடந்த பக்தியும் பரிபூரண நம்பிக்கையும் பளபளத்துக் கொண்டிருப்பதை தினமும் பார்க்கலாம்.

நாகூரின் சிறப்புக்கும் மக்கள் அங்கே வெள்ளமென குவிவதற்கும் முக்கியக் காரணம், நாகூர் ஆண்டவர் என்றழைக்கப்படும் இறைநேசச் செல்வர் ஹஜ்ரத் செய்யிது காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிபு அவர்களின் தர்காதான். இவர் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி 1532-1600 என அறிஞர்கள் கருதுகின்றனர். நபிகள் நாயகத்தின் வழித் தோன்றலான செய்யது ஹசன் குத்தூஸ் என்ற பெரு வியாபாரிக்கும் செய்யது ஃபாத்திமாவுக்கும் மகனாக, வட இந்தியாவில் அயோத்திக்கு அருகிலுள்ள மாணிக்காபூர் என்னும் இடத்தில் பிறந்தவர் இவர். தனது 18ஆம் வயதில் தனது குருவைத் தேடித் தனியாக யாத்திரை புறப்பட்ட இவர், பல நூறு மைல்கள் நடந்து, குவாலியரில் தனது குருவை அடையாளம் கண்டு, பல ஆண்டுகள் சிட்சை பெற்ற பின், உலகம் முழுவதும் இறை அருள் பரப்பக் கிளம்பினார். திருமணமே செய்து கொள்ளாமல் பல இடங்களுக்கும் பயணம் செய்த இவர், இறுதியாக நாகூர் வந்து சேர்ந்தார். 68 ஆண்டுகள் வாழ்ந்த ஹஜ்ரத் செய்யிது காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிபு நாகூரில் சமாதியானார் என்பது வரலாறு. இவர் நாகூரில் இருந்த காலத்தில், நாகூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் இவர் புகழ் பரவியது. மத வேறுபாடு பாராமலும், சாதி வித்தியாசம் இல்லாமலும் அனைவரையும் சமமாகப் பாவித்து ஆசிகள் வழங்கினார் என்பதால் இந்து, கிறிஸ்துவர்கள் மத்தியிலும் அவர் புகழ் பரவியது. எல்லா மதத்தினரும் நாகூரை நோக்கி புனித யாத்திரை புறப்பட்டனர்.

நாகூர் பகுதியில் அமைதி வழியில் எண்ணற்ற மக்களை இஸ்லாத்தின் பக்கம் கொண்டுவந்த பெருமை இவரைச் சாரும். இவரது அருட்கொடையைத் தொடர்ந்து பெரும் அளவில் முஸ்லிம் மக்கள் தமிழகத்தின் பிற பகுதியிலிருந்தும் இங்கு வந்து குடியமர்ந்தனர். இஸ்லாமியர் பெருகி, இப்பகுதியில் இஸ்லாம் செழித்தோங்கியது.

ஹஜ்ரத் செய்யிது காதிர் ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிபு காலகட்டத்துக்கு முன்னாலேயே, தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாற்றிலும் இஸ்லாம் வளர்த்த இன்பத்தமிழ் இலக்கிய வரலாற்றிலும் நாகூர் சிறப்பான ஒரு இடம் வகித்திருக்கிறது. அரேபிய நாட்டிலிருந்து செய்யிது முபாரக் வலியுல்லா என்பவரும் முகமது சித்திக் இப்னு மசூத் என்பவரும் நாகூரில் தங்கி இஸ்லாமிய மார்க்கப் பணியில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். இவர்களது கல்லறைகளும் நாகூரில் உள்ளன. இங்கு வாழ்ந்த முஸ்லிம் வணிகர்கள் கப்பல் உரிமையாளர்களாகவும் கப்பல் செலுத்தும் தொழிலில் ஈடுபட்டவர்களாகவும் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.



சுமத்தரா, ஜாவா, மலாக்கா, மலேயா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுடன் நாகூருக்கு வணிகத் தொடர்பு இருந்திருக்கிறது. 1796ஆம் ஆண்டு பதிவேடு ஒன்று நாகூரில் சுமார் 70 முஸ்லீம்கள் கப்பல் வணிகர்களாகத் திகழ்ந்தனர் எனத் தெரிவிக்கிறது. இவர்கள் தங்களுக்குத் தேவையான கப்பல்களை நாகூரிலேயே கட்டிக் கொண்டனர். இவ்வாண்டில் ஏழு கப்பல்கள் மட்டும் நாகூர் மற்றும் நாகப்பட்டினத் துறைமுகங்களில் முஸ்லிம் வணிகர்களுக்குச் சொந்தமானவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிபு தன் காலத்தில் நிகழ்த்திய அற்புதங்கள், அற்புத ஒளியாக இன்றும் நாகூரில் வலம்வருவதாக நம்பப்படுகிறது. எனவேதான் நாகூர் தர்காவுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. பல ஏக்கர் நிலப்பரப்பில், நான்கு நுழைவு வாயில்களைக் கொண்ட தர்கா பிரமாண்டமாக அமைந்துள்ளது. தர்கா கட்டட அமைப்பியலில் சிறந்து விளங்கும் இதன் சந்நிதிக்குள் எந்த மதத்தினரும் செல்லலாம். மேற்கு நுழைவு வாயிலில் அமைந்துள்ள 131 அடி உயரம் கொண்ட பெரிய மினரா (கோபுரம்) தர்காவின் சிறப்பம்சம். நாகூர் தர்காவின் இந்த பெரிய மினராவை தஞ்சாவூரை ஆண்ட இந்து மன்னரான பிரதாப் சிங்கால் 1760ஆம் ஆண்டு கட்டியிருக்கிறார். கி.பி. 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரைக்கும் சிறிய கட்டிடங்களுடனேயே இருந்து வந்த நாகூர் தர்காவை, பிரதாப்சிங்தான் (1739-1763) விரிவுபடுத்திக் கட்டியிருக்கிறார். பிரதாப்சிங், தர்காவின் பராமரிப்புக்கு பதினைந்து கிராமங்களை மானியமாக அளித்ததாக கல்வெட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது. பிரதாப் சிங்கிற்குப் பிறகு வந்த மராட்டிய மன்னர்களும் தர்காவிற்கு பல கொடைகள் வழங்கியுள்ளனர். ஆண்டுதோறும் கந்தூரி உற்சவத்தின்போது மராட்டிய மன்னர்களிடமிருந்து அலங்கார ஆடைகள் வருவது வழக்கமாக இருந்திருக்கிறது. நாகூர் பகுதி ஆங்கிலேயருடைய ஆட்சிக்குட்பட்ட பின்னும் மராட்டிய மன்னர்கள் தர்காவின் நிர்வாக செயல்பாடுகள் குறித்து பெரிதும் அக்கறைகாட்டி வந்திருக்கின்றனர்.

தர்காவினுள் நுழைந்தவுடன் தங்கம் மற்றும் வெள்ளியினால் அலங்கரிக்கப்பட்ட மூன்று சமாதிகள் உள்ளன. அவை மீரான் சாகிப், அவரது மகன் சையது முகமது ஆசிப், மீரான் சாகிப்பின் மருமகள் சைய்தா சுல்தானா பீவி ஆகியோரது சமாதிகளாகும். மீரான் சாகிப்பின் சமாதி அருகே ஒரு தங்கப் பெட்டி உள்ளது. அதனுள் மீரான் சாகிப் பயன்படுத்திய, குமிழ்கள் இல்லாத காலணிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒருமுறை மர வேலை செய்யும் ஆசாரி ஒருவர் மிகவும் நோய்வாய்ப்பட்டு மீரான் சாகிப்பிடம் வந்தார். அப்போது மீரான் சாகிப் அல்லாவிடம் பிரார்த்தனை செய்து அவரது நோயைக் குணப்படுத்தினார். இதனால் மனம் மகிழ்வுற்ற




ஆசாரி, மீரான் சாகிப்பிற்கு மிக அழகான ஒரு கட்டை செருப்பை செய்து பரிசளித்தார். அந்த செருப்பே தங்கப்பெட்டியினுள் வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அதேபோல பிரம்மச்சாரியான நாகூர் ஆண்டவர் தனது இடுப்பில் வாழ்நாள் முழுதும் அணிந்திருந்த இரும்புச் சங்கிலி புனிதப் பொருளாக இந்த தர்காவில் தொங்க விடப்பட்டுள்ளது. நாகூர் ஆண்டவர் எப்போதும் அணிந்திருந்த மோதிரத்தின் பச்சைக் கல், சமாதி நில உச்சியை அலங்கரிக்கிறது. நாகூர் ஆண்டவர் சமாதியின் மேல் கட்டப்பட்டுள்ள மண்டபத்தின் உச்சியில் அமைந்துள்ள கலசம் தங்கத்தால் செய்யப்பட்டது. தர்கா முழுவதும் சந்தனம், தேக்கு, தங்கம், வெள்ளி என புனிதப் பொருள்களாலும், பளிங்குக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

கடைசி மூன்று வாசல்களைக் கடக்க மட்டும் இஸ்லாமிய மத சட்டப்படி பெண்களுக்கு அனுமதி இல்லை. ஆனால், எந்த மதத்தைச் சேர்ந்த ஆண்களும் ஆண்டவரின் சமாதியை தரிசித்து வரலாம். இந்த சந்நிதி ஏழு நிலைகளைக் கொண்டுள்ளது. காமம், குரோதம், கோபம், பொய், பொறாமை, பிணி, மூப்பு போன்ற ஏழு தடைகளைக் கடக்கும் வகையில் இந்த ஏழு நிலைகள் அமைந்துள்ளன என்கிறார்கள்.

தர்காவிற்கு அருகிலேயே பாலநாயகம் முகமது யூசுப், அவரது மனைவி சையது சுல்தான் பீவி என்பவர்களது சமாதிகளும் அமைந்துள்ளன. நாகூரைச் சேர்ந்த இறைநேசச் செல்வர்களான புனித அடியார்களில் இவர்கள் இருவரும் அடங்குவர். புனித அடியார்களைப் பற்றிய வரலாறுகளும் இவர்களது அற்புத ஆற்றல்களை சிறப்பித்து கூறும் செய்திகளும் ஏராளம் உண்டு. ஒருநாள் கடலில் வந்த கப்பலில் உடைப்பு ஏற்பட்டு தத்தளித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த பாலநாயகம் முகமது யூசுப், தமது கண்ணாடியை கடல் நோக்கி எறிந்ததாகவும் அக்கண்ணாடி கப்பலில் ஏற்பட்ட உடைப்பை அடைத்ததாக வும் ஒரு கதை சொல்லப்படுகிறது. அந்தக் கண்ணாடி சட்டம் இன்றும் முகமது யூசுப் சமாதி முகப்பை அலங்கரிக்கிறது. இவரால் அதிசயம் நிகழ்த்தப்பட்ட கொம்புத்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்

**New Home Warranty Inspections**

**Pre-purchase Home Inspections**

***Nalliah Thayabharan BSSO CMI CEI RHI***

Building Science Specialist of Ontario®

Certified Master Inspector®

Registered Home Inspector®

***Building Experts Canada Ltd***

***416 332 1743 / www.buildingexperts.ca***

***Commercial Building Inspections***

**Environmental Assessments** Phase I, II & III

Specializing in Commercial Malls, Motels & Gas Stations

***Building Experts Canada Ltd***

***Tel.416 332 1743 / Fax 416 754 7032***

***www.buildingexperts.ca***

# நாம் தமிழரா?

தமிழன் தமிழனாக வாழ விரும்பாததன் விளைவுதான் இன்று பல்வேறு சிக்கலுக்குள் சிக்குண்டு துடித்துக் கொண்டிருக்கிறான். மொழிக்கு ஒரு வரையறை இல்லை. சமயத்திற்கு ஒரு கட்டுப்பாடு கிடையாது.

தமிழ்மொழியை எடுத்துக் கொண்டால் தமிழை கண்டபடி பேசலாம். கண்டபடி எழுதலாம். பலமொழிகளைக் கலந்தும் தமிழைப் பேசுவதில் தவறில்லை என்பது கனடாவில் உள்ள தமிழ் ஆசிரியர் பாவலர் போன்றோரின் இறுக்கமான எண்ணம். காரணம் தமிழைக் கலந்தெண்டாலும் பேசினால் தான் தமிழ் அழியாது என்பது கனடாவில் தமிழையும் சைவத்தையும் வளர்க்கின்ற இந்துக்களின் அறியாமையில் விளைந்த கருத்தாகும். இந்த தமிழர்களின் நினைப்பு தங்களை விட தங்கள் பிள்ளைகள் அறிவில் குறைந்தவர் என்று நினைப்பது தவறு. எங்கள் அறியாமையின் செயற்பாட்டினால் தான் பல பிள்ளைகள் மொழியைப் பேச பின்வாங்குகிறார்கள்.

இலங்கையில் உயர்கல்வியில் தமிழைப் படித்த மாணவரையும் கனடாவில் உயர்கல்வியில் தமிழைப் படித்த மாணவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கனடாவில் படித்த உயர்தர மாணவர்களுக்கு தமிழில் உள்ள மொழிக்கலப்பின் வேறுபாடு நன்கு தெரியும். தமிழ் ஆசிரியர் மொழிக் கலப்பை முன்னிலைப்படுத்துகிறார்.ஏனென்றால் தன்னுடைய தமிழ் அறிவை வளர்ப்பதில் நேரத்தை செலவிட விரும்பவில்லை. கனடாவில் உயர்கல்வியில் தமிழ் படிக்கும் மாணவர் களுக்கு தெரிந்த மொழியறிவு கூட பள்ளியில் படிப்பிக்கின்ற தமிழ் ஆசிரியர் பாவலர் போன்றோருக்கு தெரியாது.

பெற்றோர் ஆசிரியர் அறிஞர் முனைவர் பாவலர் என்போர் அந்த இனத்தின் வழிகாட்டிகள். தவறுகளை திருத்தவேண்டியவர்கள். இவர்கள் தவறு விடுபவர்களுடன் சேர்ந்து பிழையான வழிகாட்டலை முன்னெடுக்கிறார்கள். உலகத்தில் சிதறுண்டு வாழும் தமிழருக்கு சரியான கட்டமைப்பை உருவாக்குவதில் தமிழர்களே தமிழருக்கு தடையாக இருக்கிறார்கள். நாங்கள் தமிழைப் பேசாமல் எப்படி எங்கள் பிள்ளைகள் தமிழ் பேசவில்லை என துன்பப் படமுடியும். நாங்கள் தமிழைப் பேசும் பொழுதுதான் எங்களை இளையவர்கள் பின்பற்றுவார்கள்.

சமயத்தை எடுத்துக் கொண்டால் தமிழர்கள் சைவர்களாக மட்டுமே இருந்திருக்கிறார்கள் என்பது வரலாறு சொல்லுகிறது. காலப்போக்கில் எம்மூதாதையர் சமயத்தை கட்டுக்கோப்போடு வழி நடத்தத் தவறியதாலும் வேற்றுமொழி மோகத்தாலும் அறியாமை தாழ்வு மனப்பான்மையாலும் இன்று தமிழர்கள் பல சமயங்களைப் பின்பற்றுகிறார்கள். இனத்தின் வளர்சிக்கும் அறிவியல் எண்ணத்திற்கும் சமயம் எந்தக் காலத்திலும் கைகொடுக்காது. இதற்கு மேற்குலக நாடுகள் எடுத்துக்காட்டு. மேற்குலக தேவன் கோயில்கள் அந்த மக்களின் இறப்பு நிகழ்வுக்கு மட்டுமே திறக்கப்படுகிறது. தமிழன் குருதி சிந்தி உழைத்து அதை தேவையற்ற மூடநம்பிக்கைக்கு செலவு செய்து இழிவான இனமாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். மொழியால் மட்டுமே தமிழன் தன்னை ஒன்றிணைத்து உயர்த்திக் கொள்ளமுடியும். சமயங்களை எடுத்துக் கொண்டால் தெளிவான மாந்தரின் வாழ்விற்கு வழியிடும் செயல்பாடுகளை சமயங்கள் முன்னெடுக்க வேண்டும். சைவசமயத்தை எடுத்துக் கொண்டால் 'அன்பே சிவம்' இரண்டு சொல்லில் உலக வாழ்க்கையை மகிழ்வாக வாழ சொல்லப் பட்டிருக்கிறது. தமிழரின் பொருளாதாரத்தை சமயத்தின் பேரால் கட்டிக் காக்கப்படவில்லை. ஏன்? அறியாமைக்கும் தாழ்வு மனப்பான்மைக்கும் முன்னுரிமை வழங்கியவர்கள்.

இன்று சைவத்தின் நிலை என்ன?

சைவர்கள் இந்துக்களாக கனடாவில் மாற்றப்பட்டுவிட்டார்கள். எப்படி? வெள்ளைக்காரன் சொன்னானா மாற்றச் சொல்லி இல்லையே. கனடாவில் என்ன நடக்கிறது. சைவனுடைய காசில் காணிவாங்கி சைவனால் கோயில் கட்டப்படுகிறது. சிற்பங்களை சைவன் செதுக்குகிறான். குடமுழுக்கு நடைபெறுகிறது. அன்றிலிருந்து சைவன் இறைவனின் கருவறைக்குள் செல்ல தடை போடப்படுகிறது. ஏன்? சைவர்கள் சைவனுக்குத் தடை போடுகிறார்கள். எந்தக் கடவுள் சொன்னார் கோயில் கட்டி குடமுழுக்கு முடிந்தபின் எந்தச் சைவனும் கருவறையிற்கு செல்லக்கூடாது என்று? பன்னிரு திருமுறைகள் இருக்கின்றன. ஒருநாளைக்கு எத்தனை தடவை திருமுறைகள் ஓதப்படுகின்றன. கோயில் திறந்த நேரத்தில் இருந்து மூடும் நேரம் வரைக்கும் 99 விழுக்காடும் வடமொழி மந்திரம் தான் பாடப்படுகிறது. வடமொழி மந்திரம் சைவனுக்கு விளங்காத மொழி. எப்படி பல ஆண்டுகளாக ஏன் எதற்கு என்ற கேள்வி கேளாமல் அல்லது மறுப்பு தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்கிறோம். சைவப்பெரியார்கள் யாராவது வடமொழி மந்திரத்திற்கு மணி கட்டி தமிழில் பூசை செய்யச் சொல்லி சொன்னார்களா? தமிழன் பிறந்தால் துடக்கு, தமிழன் இறந்தால் துடக்கு. 31 நாள் துடக்கு கழித்தல், ஆண்டுத்திவசம், ஆடி அமாவாசை, சித்திரைப்பௌணமி சைவ சமயத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? விளங்காத மொழியில் நடக்கும் பூசைக்கு ஆயிரக்கணக்கில் அள்ளி வீசும் செம்மறிக் கூட்டம் நாங்கள். ஈழத்திலே தமிழனுக்கு உணவு இல்லை. கனடாவில் கோயில்களில் பல ஆயிரம் கனடா வெள்ளி கொடுத்து ஓமம் வளர்க்கிறான் தமிழன். ஏன் ஒட்டுமொத்தமாக கனடாவில் வாழும் தமிழர் தெளிவிழந்து வாழுகிறோமா?. வேற்றினத்தவனுக்கு தன்மானம் இழந்து தாளம் போடும் தமிழன் தன்னுடைய இனத்தவனின் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக செயல்படுகிறான். ஏன்? கனடாத்தமிழன் முதுகெலும்பு இல்லாமல் இன்று வாழ்கிறான். இவ்வளவு இன்னல்களும் சிக்கல்களையும் சந்தித்த ஈழத்தமிழன் இனி எப்போது தன்னுடைய தவறான பாதையை உணர்ந்து தமிழ் இனம் - தமிழ்மொழி - தமிழ்ப்பண்பாடு என்ற ஒரு கட்டுக்குள்ளே நிற்கப்போகிறான். பிறந்த மண்ணில் உரிமைகள் மறுக்கப்பட்டு எமது இனத்தின் வரலாற்றை எங்களுடைய மண்ணிலே தெரிய விடாமல் மட்டும் அல்ல தமிழனை வளர விடாமல் சிங்களவன் பல ஆண்டுகளாக விழிப்போடு செயல்படுகிறான்.

நான் கனடாவில் கண்ட மிக இழிவான செயல் என்னவென்றால் கணவன் இறந்தால் இறப்பு நிகழ்வின் போது கணவன் கட்டிய தாலியை கழற்றும்படி சொல்வதற்கு சம்பளத்திற்கு வந்து

தொடர்ச்சி 27ஆம் பக்கம்

# நினைவுகள்

15ஆம் பக்கத்தொடர்ச்சி

தயாரிப்பாளர் பாலாஜி, அவருக்கு தான் தயாரித்த திரைப்படத்தில் வாய்ப்பளிக்க முன்வந்தார். கொஞ்ச காலமே ரயில்வே ஊழியராகவும், அமெச்சூர் நாடக நடிகராகவும் அரை வயிறு, கால் வயிறு கழுவி வந்த குண்டுராவ் திரைப்பட நடிகர் நாகேஷானார்.

2. 1959ஆம் ஆண்டில் வெளிவந்த 'தாமரைக்குளம்' என்ற திரைப்படம்தான் நாகேஷ் நடித்த முதல் படம். அதன்பின்னர் தொடர்ந்து சிறு சிறு வேடங்களில் படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' திரைப்படத்தில் அவர் ஏற்று நடித்த நகைச்சுவைப் பாத்திரம் அவரது திரை வாழ்க்கைக்கு புது அத்தியாயம் எழுதியது. அந்தப் படமும் வெற்றிப் படமாக அமைந்தது. தமிழ்த் திரைவானில் இணையில்லா சந்திரர்களாக சிவாஜிகணேசனும் எம்.ஜி.ஆரும் ஜொலித்துக் கொண்டிருந்த காலகட்டம் அது. இந்த இரு இமயங்களை நெருங்கக்கூட இயலாத நிலையில்தான் பிற நடிகர்களின் நிலைமை இருந்தது. ஆனால், இந்த இருவரின் எந்த சிறப்பியல்புகளும் கவர்ச்சியும் இல்லாத, சராசரித் தோற்றமும் அம்மைத் தழும்பேறிய முகமும் கொண்ட நாகேஷ், நகைச்சுவை நடிகராக இந்த இரு ஜாம்பவான்களுக்கும் ஈடுகொடுத்தார். எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகிய இருவருடனும் ஒரு சேர நடித்த நகைச்சுவை நடிகருள் நாகேஷ் மட்டுமே முதலிடத்தில் இருந்தார்.

எம்.ஜி.ஆரின் அன்புக்குப் பாத்திரமான நாகேஷ், அவரது பெரும்பாலான படங்களில் நடித்தார். 'வேட்டைக்காரன்', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'அன்பே வா', 'ஆயிரத்தில் ஒருவன்' என எம்.ஜி.ஆருடன் நாகேஷ் நடித்த படங்களின் பட்டியல் மிகப் பெரியது. இடையில் சில காலம் இருவருக்கும் இடையே ஒரு பிரிவு வந்தது. என்றாலும், மீண்டும் நாகேஷை அரவணைத்துக் கொண்டார் எம்.ஜி.ஆர். இக்காலகட்டத்தில் குடிப்பழக்கத்துக்கு அடிமையான நாகேஷ், அதனால் மிகவும் உடல் பாதிப்புக்கு உள்ளானார். நாகேஷின் நிலை பற்றி கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர்., அதிலிருந்து மீண்டு வர நாகேஷுக்கு உதவினார். 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் நாகேஷுக்காகவே ஒரு பாத்திரத்தை உருவாக்கி, அதில் நாகேஷை நடிக்க வைத்தார். இதுபற்றி நாகேஷ் ஒரு பேட்டியில் சொல்லியுள்ளார்: "அடுத்த ஏழு ஜென்மத்துக்கும் சேர்த்து இப்பவே குடிச்சேன். அதனால நான் பிழைப்பேனான்னே தெரியாத நிலை. ஆனால், மருத்துவர்களும் அண்ணன் எம்.ஜி.ஆரும் எனக்கு புதுப்பிறவி கொடுத்துட்டாங்க."



எம்.ஜி.ஆருடன் நெருக்கமாக இருந்தாலும் சிவாஜிகணேசனுடனும் தொடர்ந்து நடித்தார், நாகேஷ். சிவாஜியுடன் நாகேஷ் நடித்தவற்றில் 'திருவிளையாடல்' தருமி, 'தில்லானா மோகனாம்பாள்' வைத்தி ஆகிய நாகேஷ் பாத்திரங்கள் இன்னும் பல காலம் நம் மனதில் நிற்கக்கூடியது. எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருடனும் ஒரே நேரத்தில் பல படங்களில் ஒரு நடிகர் நடித்திருக்கிறார் என்பது அன்று அதிசயம். இருவேறு திசைகளில் பயணித்த அவர்களின் படங்களில் நாகேஷ் தொடர்ந்து இடம்பெற்றதற்கு அவரது திறமையும் மக்களை வசீகரிக்கும் தன்மையுமே காரணம்.

3. நாகேஷ், நகைச்சுவையில் மட்டுமல்லாமல் குணச்சித்திர நடிகராகவும் பல சாதனைகள் படைத்தவர். இந்தவகையில் நாகேஷை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டவர் இயக்குநர் கே. பாலசந்தர்தான். நடிகர்களின் ஆதிக்கம் திரையுலகில் கோலோச்சியிருந்த நேரத்தில், அதனை மறுத்து, பிரபல நடிகர்கள் இல்லாமலே திரைப்படங்களை உருவாக்கியவர் பாலசந்தர். அவரது இந்த உறுதியான நிலைப்பாட்டுக்கு கைகொடுத்தார் நாகேஷ். பாலசந்தரும் பதிலுக்கு நாகேஷின் குணச்சித்திர நடிப்பை வெளிக்கொண்டு வந்து, நடிப்பில் அவரை இன்னொரு தளத்துக்கு நகர்த்தினார். அவரது 'சர்வர் சுந்தரம்' திரைப்படத்தில் மிகச் சிறப்பாக நடித்து முதன்முதலில் குணச்சித்திர நடிப்பில் நாகேஷ் முத்திரை பதித்தார். அதன்பிறகு, 'நீர்க்குமிழி' படத்தில் நாகேஷை கதாநாயகனாக நடிக்க வைத்தார் பாலச்சந்தர். அந்தப்படமும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றதுடன் சிறந்த நடிப்புத் திறமை கொண்டவர் நாகேஷ் என்பதை ரசிகர்களுக்கு உணர்த்தியது. தொடர்ந்து 'தேன்கிண்ணம்', 'நவக்கிரகம்', 'எதிர்நீச்சல்', 'யாருக்காக அழுதான்', 'அனுபவி ராஜா அனுபவி' என கதாநாயகன் வாய்ப்புகளை நாகேஷுக்கு வழங்கி, அழகு பார்த்தார் பாலசந்தர்.

இந்த வெற்றி ஜோடி மீது யார் கண் பட்டதோ, இருவருக்கும் இடையே விரைவில் விரிசல் ஏற்பட்டது. அதுபற்றி கே.பாலசந்தர் ஒரு பேட்டியில் இப்படி குறிப்பிட்டார்: "தமிழில் மட்டுமல்லாமல் பிறமொழிக் கலைஞர்களுக்கும் ஆதர்ச ஆசானாக விளங்கியவர் நாகேஷ். 'அனுபவி ராஜா அனுபவி' படத்தை இந்தியில் எடுத்தபோது, நாகேஷின் பாத்திரத்தில் நடித்த மகமூத், நாகேஷ் காலில் விழுந்து வணங்கினார். கலைவாணருக்கு அடுத்த சிறந்த கலைஞன் சந்தேகமே இல்லாமல் நாகேஷ்தான்! அவருக்காகவே நான் எழுதிய நாடகம்தான் 'சர்வர் சுந்தரம்'. அதற்குள் அவர் மூன்று படங்களில் காமெடியனாக நடித்துப் பிரபலமாகி இருந்தார். 'சர்வர் சுந்தரம்' முழுக்க மெல்லிய சோகம் இழையோடும் கதாபாத்திரம். காமெடியனாகப் பிரபலமாகிவிட்ட நாகேஷ் இப்படியொரு சென்டிமென்ட் கதாபாத்திரத்தில் நடித்தால், மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்கிற தயக்கம் எங்கள் இருவருக்கும் இருந்தது. ஆனால், எங்களுக்கு நாங்களே நம்பிக்கை வார்த்தைகள் சொல்லிக்கொள்வோம். நாடகம் பெருவெற்றி பெற்றது. 'நீர்க்குமிழி' படத்தில் தொடர்ச்சியாக சிகரெட் குடிப்பதால் கேன்சரால் பாதிக்கப்படும் கதாபாத்திரம் அவருக்கு. அப்போது நானே செயின் ஸ்மோக்கர். ஆனாலும், புகைப்பழக்கத்துக்கு எதிராகப் பேச வேண்டும் என்று தோன்றியதால் அந்தப் படத்தை இயக்கினேன். நாகேஷுக்கும் எனக்கும் 'வெள்ளிவிழா' படத்தின் போது பிரிவு ஏற்பட்டது. அவரால் அந்தப் படத்துக்கு கால்ஷீட் கொடுக்க முடியவில்லை. கோபத்தில் நான் 'தேங்காய்' சீனிவாசனை வைத்து அந்தப் படத்தை இயக்கினேன். பாதி படத்தின் போதே எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதய அறுவை சிகிச்சை முடிந்து மூன்று மாதம் மருத்துவமனையில் இருந்தேன். மனத்தாங்கல் இருந்தபோதும் என்னை மருத்துவமனையில் நாகேஷ் வந்து பார்த்து, என் மனைவிக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார். அப்போதுதான் நான் சிகரெட் குடிப்பதை நிறுத்தினேன். சிகரெட்டையும் நாகேஷையும் பிரிந்திருந்த காலகட்டம் அது!'

4. திரையில் எல்லோரையும் சிரிக்க வைத்த நாகேஷின் தனிப்பட்ட வாழ்க்கை சோகங்கள் நிரம்பியதாகவே அமைந்து போனது ஒரு முரண்பாடு. ஒரு கிறிஸ்தவப் பெண்ணைக் காதலித்து மணந்து கொண்ட நாகேஷை, சனாதனப் பின்னணி கொண்ட அவரது குடும்பத்தினர் விலக்கி வைத்துவிட்டார்கள். திரைப்படத்துறையில் பணமும் பிரபலமும் சம்பாதித்த பிறகு, ஆசையுடன் வெளிநாட்டுக் கார் ஒன்றை புதிதாக வாங்கிக்கொண்டு, தன் தாயை சந்திக்க சென்றார். ஆனால், அவரால் தாயை சந்திக்க முடியவில்லை. அவர் சென்ற போது அவரது தாயின் இறுதிச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன்பின்னர், இல்லற வாழ்வும் அவருக்கு நீண்ட நாள் இனிக்கவில்லை. நிலைக்கவில்லை. எனவே, விரக்தி அவரை குடிகாரனாக்கியது. அதிலிருந்து எம்.ஜி.ஆர். அவரை மீட்டுக்கொண்டு வந்தார் என்றாலும், திரையுலகில் தாம் சம்பாதித்த செல்வத்தை ரியல் எஸ்டேட் துறையில் முதலீடு செய்த நாகேஷ் அதில் பெரும் நஷ்டத்தை சந்திக்க நேர்ந்து, மீண்டும் சிக்கலுக்குள்ளானார். தி.நகர் பாண்டிபசாரில் இருந்த அவரது நாகேஷ் தியேட்டர் பிரச்னையில் சிக்கிய போது, மீண்டும் அப்பொழுது முதல்வராக இருந்த எம்ஜிஆர். உதவி செய்து மீட்டார். ஆனாலும், அதன்பிறகு பெரிய சினிமா வாய்ப்புகள் இல்லாமல் விரக்திக்கு உள்ளானார் நாகேஷ். ஆனந்தபாபு உள்பட அவரது குழந்தைகள் வேறு அவருக்கு நிம்மதியான வாழ்க்கையை அளிக்கவில்லை. ஒரு சில முறைகள் மரணத்தின் விளிம்பைத் தொட்டுத் தொட்டுத் திரும்பினார். இந்நிலையில் நாகேஷ் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்த கமல்ஹாசன் அவருக்கு மறுவாழ்வு தந்தார்.

திரையுலகில் தன் மூன்றாவது பயணத்தைத் தொடங்கினார் நாகேஷ். அன்று தொடங்கிய பயணம் 'தசாவதாரம்' திரைப்படம் வரைக்கும் தொடர்ந்து. அந்தப் பயணம் அடுத்த இதழில்.

(அடுத்த இதழில் முடியும்)

# இலங்கையன் செல்வரத்தினம்



'ஒருவரது நடத்தைப் பாங்கும், இயல்புகளும், அவர் வாழும் காலம் அவரது அகக் காரணிகள், அவர் வளர்ந்து வரும் பறக்காரணிகள் என்பவற்றாலேயே உருவாக்கப்படுகின்றன' என்னும் கூற்றில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தவர் மறைந்த விஞ்ஞானக் கல்வி அதிகாரி இலங்கையன் செல்வரத்தினம். உடுப்பிட்டியில் வறிய குடும்பதில் பிறந்தவர். வறிய குடும்பத்தில் பிறந்தவர். மிக இளம் பராயத்திலேயே அன்னையின் அரவணைப்பைப் பெறமுடியாத பாலகனாக வளர்ந்தவர். மனநோயால் பீடிக்கப்பட்ட தாயார். கூலித்தொழிலே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்த தந்தை. அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் ஒரு மூலையில் வாழ்ந்து வந்தவர். தனது அயரா உழைப்பால் முன்னுக்கு வந்தவர். அவர் முன்னுக்கு வருவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்தவர்கள் இருவர். ஒருவர் அவரது தாய் மாமன், மற்றவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி பல சமூகத்தில் ஒதுக்கப்பட்ட நலிவடைந்திருந்தவர் களுக்குக் கல்வியறிவூட்டி முதனிலைப் படுத்தியவர் கே.ரி. ஜோன் அவர்கள்.

## த. சிவபாலு (தலைவர்)

### கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

உடுப்பிட்டியில் உயர் சாதியினர் மட்டும் படித்துவந்த அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அன்று அதிபராக இருந்த ஜோனிடம் இருந்தது. சாதியின் பெயரால் உரிமைகளை அதுவும் கற்கும் உரிமை மறுதலிக்கப்படுவதனை எந்த ஒரு கல்வியியலாள னும் ஏற்றுக்கொள்ளமாட்டான். ஆழ்ந்த கருத்தைக் கொண்டிருந்த அமெரிக்க மிஷனரிமார் தங்கள் பாடசாலைகளில் கல்வி கற்ற எல்லா வகுப்பினருக்கும் வாய்ப்புக்களை அளித்தனர். இதனால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் ஒரு சிலராவது இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்க வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வித வாய்ப்புக்களைப் பெற்ற ஒரு சிலரில் இலங்கையன் செல்வரத்தினமும் ஒருவர் என்பதனை அவரது வரலாற்றுக் குறிப்புக் காட்டி நிற்கின்றது. அவர் எழுதிய 'வாழ்வும் வடுவும்' என்னும் வரலாற்று ஓவியம் அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையைப் படம்பிடித்துக்காட்டுகின்றது. 'மனிதன் ஒரு சிந்திக்கும் பிராணி இச்சிந்தனை ஆற்றல்தான் மனிதனை மற்றைய விலங்குகளிலும் மிக உயர்வான பிராணி என இனங்காண்கின்றது. இது ஒருவர் பெறும்கல்வி, மற்றும் அனுபவங்களைப் பொறுத்து விருத்தி அடையக்கூடியது. சிலர் தங்கள் சிந்தனை இது வரைக்குந்தான் என எல்லைப்படுத்தி வாழ்கிறார்கள். அதற்குமேல் சிந்தித்தால் அது பாவச்செயல் எனக் கருதுகிறார்கள்போலும்' என அவர் குறிப்பிடுகின்றார்.

60-70 வருடங்களிற்கு முன்பு பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்போடு முழுக்குப்போடும் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் அடக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களே. அதன் பின்னர் அவர்கள் தங்கள் பெற்றோருக்குத் துணையாக தங்கள் குலத்தொழிலையே மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். அந்தச் சூழலைப் புறத் தொதுக்கி எதுவரினும் வரட்டும் மலையே யாயினும் தலையே சுமப்பது என்பது போல தனக்கு ஏற்றட்ட இடர்கள், சுமைகள், துன்பங்களை எல்லாம் ஒரு சவாலாக ஏற்றுச் சவாலே சமாளி என முன்னுக்கு வந்தவர்களுள் இலங்கையன் செல்வரத்தினம் ஒருவர்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு, கற்றனைத் தூறும் அறிவு' என்னும் வள்ளுவன் குறள்பால் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருப்பதனை நான் நன்கு அறிவேன். கல்வியே கருந்தனம், கல்வியால் இந்தச் சமுதாயத்தையே மாற்றமுடியும் என்ற நம்பிக்கை கொண்டவர். தனது சமூகத்தின் இடர்நிலை களையப்பட வேண்டும் என்னும் உயரிய நோக்கும், அயரா உழைப்பும் கொண்டவர் அவர். தாய்மொழி, ஆங்கிலக் கல்வி, விஞ்ஞானக் கல்வி என அவர் முப்பரிமாணங்களை மனதிருத்தி அனைத்துப் பிள்ளைகளுக்கும் தமிழ் மொழிக் கல்வி கிட்ட வேண்டும் என உழைத்தவர். யோக் நகரத்தில் தமிழ்ச் சிறாருக்கு கல்வியறிவூட்ட பெற்றோரின் உதவியை நாடி அங்கு தமிழ் கற்க வழிவகுத்தவர். பின்னர் அந்தப் பிள்ளைகளுக்கு ரொறன்ரோ கல்விச் சபையால் தமிழ் மொழி கற்பிக்கப்படுவதற்கு அரும்பாடு பட்டவர்களுள் முன்னைநாள் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் செல்லத்துரை, தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கமலநாதன் போன்றோரோடு இணைந்து எப். ஜே. அலெச்சாந்தர் பாடாசாலையில் தமிழ் மொழி கற்பிப்பதற்கான விண்ணப்பத்தை செய்து அது அங்கு கற்பிக்கப்பட காலாக அமைந்தவர் இலங்கையன் செல்வரத்தினம் என்பது அவரோடு நன்கு உறவாடியவர்களுக்குத் தெரியும். நான் தமிழ் கற்பிக்கச் சென்றவேளை தன்னிடமிருந்த தமிழ்ப் புத்தகங்களில் சிலவற்றைத் தந்து என்னை ஊக்கப்படுத்தியவர் அவர்.

எதனையும் விஞ்ஞானக் கண்கொண்டு நோக்கும் பகுத்தறிவாளன் அவர். நீண்ட சமுதாய நோக்கும் பரந்த பார்வையும் கொண்டு வாழ்ந்துவந்த அவர், தான் பெற்றுக்கொள்ளும் அல்லது அறிந்து கொள்ளும் விடயங்களைத் தனது நெருக்கமான-வர்களோடு பகிர்ந்துகொள்ளும் மாண்புடையவர். பலமுறை என்னோடு பல விடயங்களை பற்றிக் கலந்துரையாடியுள்ளார். அநீதிகள் ஏதாவது நடக்கின்றது என்று கேள்வியுற்றால் கொதித்தெழுவார். அவரது இரத்தக் கொதிப்பு அதிகமாகின்றது என்றால் சமுதாயத்தில் வேண்டப்படாத செயல்கள் இடம்பெறுவதாகத்தான் இருக்கும். ஒரு முறை இரவு 1:30க்கு எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் குரல் கொடுத்ததும் மறுமுனையில் இருந்து 'இவங்களை என்னப்பா செய்யிறது' என்று ஆவேசமாகச் சத்தமிட்டார். அநியாயமாகச் சாத்திரிமாருக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் பணத்தை விரயம் செய்கிறார்களே! என்றார். நான் அவரை சமாதானப் படுத்திச் சாந்தப்படுத்த வெகு நேரம் எடுத்தது? அவர் சும்மாய் இருக்கிறியள் ஏதாவது செய்யுங்கோ என்று மிக அதிகார தோரணையில் கட்டளையிடுவது போலச் சொல்லுவார். அமைதியாக, இந்த விடயங்களை உடனடியாகச் செய்ய முடியாது மெல்ல மெல்லத்தான் செய்யலாம். இது எமது சமுதாயத்தில் புரையோடிப்போன விடயங்கள். நீங்கள் ஏன் வீணாக இந்தச் சாமத்தில் உங்கள் உடல் நலத்தைக் கெடுக்கின்றீர்கள் என்பேன். அதன் பின்னர் சற்று அமைதி கொள்ளுவார்.

'தன்னைப் போல் பிறரையும் நேசி' என்னும் கருத்தோடு ஒன்றிவிட்ட மனவியல்பு அவருக்கு. தான் எடுத்துக்கொண்ட விடயத்தை நிறைவேற்ற அரும்பாடு படுவார். தனது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைப்பார். மற்றவர்கள் மறுப்புத் தெரிவித்தால் வெகுண்டெழுந்து அதனை ஏற்றுக்கொள்ள பகீரதப் பிரயத்தனம் செய்வார். அதற்கான பல ஆதாரங்களையும் அவர் முன்வைக்கத் தவறுவதில்லை. அவரோடு கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக ராஜா மகேந்திரனின், Homelife GTA அலுவலகத்தில் நடைபெற்றுவரும் 'சொல் புதிது' என்னும் சொல்லாக்கக் குழுவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அது அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் தலைமையில் மாதாந்தம் இடம்பெற்று வருகின்றது. இலங்கையன் செல்வாவின் பிரசன்னம் அங்கு தனித்துவமானது. கலைச்சொல், குறிப்பாக விஞ்ஞான, கணித துறைகளோடு தொடர்புடைய அனுபவ ஆற்றல் மிக்கவர். சிலவேளைகளில் அதிபர் பொ.க. வுக்கும் செல்வாக்கும் தற்கம் ஏற்படும். மிகுந்த காரசாரத்தோடு இலங்கையன் தனது கருத்துக்களை வைக்கப் பின்நிற்பதில்லை. இருவரும் முடிவுக்கு வரும்வரை விட்டுவிடுவதாக வும் இல்லை. சில வேளைகளில் இவர்கள் இருவருக்கும் நடுவே நான் மாட்டுப்பட்டுக் கொண்டுள்ளேன். நடுவே இருந்து நான் 'இருவரும் எனக்கு அடித்துப் போடாதேயுங்கோ' என்று சிரிப்பேன். அத்தோடு அவரும் சிரித்துவிட்டு அமைதி யடைவார். அருமையான பல கருத்துக்களை விளக்கத்தோடு தந்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார். அவரின் இழப்பு கலைச் சொல் ஆக்கக் குழுவிற்கு பேரிழப்பு என்பது குறிப்பிடத்துக்கது. அவர் நிரந்தரமாகவே தனது சேவையை நிறுத்திக்கொண்டார் என்பது அக்குழுவில் உள்ள அனைவருக்குமே கவலை தருகின்றது.

திரு. செல்வரத்தினம் அவர்கள் பணியாற்றிய எல்லாப் பிரதேசங்களிலும் தமிழ் மொழியையும் தமிழ் அறிவையும் பரப்பவேண்டும் என்ற வேணவாவோடு பணியாற்றி வந்துள்ளார். மன்னார் மாவட்டத்தில் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதனை இயங்கவைத்து பாரதி விழாப்போன்ற பல சமூக செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இவ்விதமே கொழும்பில் கடமையாற்றிய காலத்தில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இணைந்து அங்கு உள்ள பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டி வந்தார். கணிதம், விஞ்ஞானம் இரண்டையும் கற்பிப்பதில் வல்லவராக இருந்து அவர் மாணவர்களை அறிந்து அவர்களுக்கு ஏற்றவகையில் கற்பிப்பதில் வல்லமை பொருந்தியவராகவும் காணப்பட்டார்.


கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆரம்ப உறுப்பினர்களுள் ஒருவரான செல்வா தன்னாலான ஆலோசனைகளை, ஆதரவினை நல்கி வழிநடத்த உதவியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது வாழ்வில் தான் அனுபவித்த துன்பங்கள், அல்லல்கள், படிப்பினைகள் அனைத்தும் ஏனைய சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும் என்பதில் அவர் அக்கறை கொண்டவர். அவரால் எழுதப்பட்ட 'வாழ்வும் வடுவும்' என்னும் நூல் இதற்கு சான்றாக உள்ளது. இலங்கையனுக்கு பவளவிழாக் கண்டபோது அந்தக் குழுவில் நானும் ஒருவனாக இருந்து செயற்பட்டமையை நினைக்கும் போது மனதிற்கு மகிழ்ச்சியை தருகின்றது. பவள விழா மலரைத் தயாரிப்பதில் என்னோடு கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களும் இரவோடு இரவாக இருந்து அதனைத் தயாரித்தமையும் அவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கருத்துக்களும் அவரோடு இணைந்தவர்களின் கருத்துக்களும் என் மனதில் நிழலாடுகின்றன. நேற்று எம்மோடு உறவாடி இருந்து அன்புள்ளம் கொண்ட செல்வா இன்று எம்மோடு இல்லை என்பதனை நினைக்கவே மனம் மறுக்கின்றது. ஏழை, எளியவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டு வாழ்நாள் முழுமையும் உழைத்து நின்ற வெள்ளை உள்ளம் கொண்ட ஒரு அற்புதமான மனிதனை நாம் இன்று இழந்துவிட்டோம்.

"நெருநல் உளநொருவன் இன்றில்லை என்னும், பெருமை உடைத்திவ் உலகு". என்னும் திருவள்ளுவரின் பொன்மொழிக்கமைய அவரும் இன்று அடங்கிவிட்டார். இந்த மாஞாலத்தில் வாழ்ந்த வாழ்வின் பெருமை அவரைப் புகழ் ஏணியில் ஏற்றிவைத்துள்ளது. பொய்யுடல் போனாலும் புகழுடல் மறையாத நல்லதொரு மனிதன் செல்வா இலங்கையன். அவரோடு உறவாடி இருப்பது இன்பம், இணங்கி இருப்பது பேரின்பம். அவரின் ஆசைகள் நிராசைகளாக ஆகாமல் அவர் செய்த பணியினைத் தொடர்தலே அவருக்குச் செய்யும் செய்நன்றிக் கடப்பாடாகும்.

அவரின் பிரிவிற்கு 'சொல் புதிது' குழுமம் சார்பிலும் எனது குடும்பத்தினரின் சார்பிலும் இரங்கலை தெரிவிக்கிறேன்.


APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building

Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

## மேலைத் தேசத்தில்
## கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




Niru Niru

**Improted & Marketed By:**

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

# நாம் தமிழரா

24ஆம் பக்கத்தொடர்ச்சி

இறுதிக்கிரியை செய்கின்ற குருக்களுக்கு என்ன உரிமை உண்டு. தாலி கட்டியவனுக்கு மட்டும் தான் கழற்றச் சொல்ல உரிமை இருக்கிறது. அந்த தாலி-யை கழற்றச் சொன்ன குருக்களைப் பார்த்து எந்த பெண்ணியம் பேசும் பெண்கள் கேள்வி எழுப்பினார்களா? இல்லையே ஏன்? பெண்ணியம் பேசும் பெண்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். இந்த இடத்திலே தான் தந்தை பெரியாரை எனக்கு நினைவுக்கு கொண்டுவர விரும்புகிறேன். இச்செயல் தவறு என்பதை தந்தை பெரியார் இடித்துரைத்தும் உணர்ச்சி இல்லாத தமிழர் நாங்கள். சைவ சமயத்தில் எந்தக் கடவுள் சொன்னார் கணவனை இழந்த பெண் தாலி அணியக்கூடாது என்று? இவை அனைத்தும் மனிதனா ல் உருவாக்கப்பட்டன.

தமிழனுடைய சைவக் கோயில்களில் தமிழ் இல்லை. சைவக் கடவுள்களின் பெயர் தமிழ் அல்ல. சிவலிங்கம் என்றால் சிவனுடைய ஆண்குறி என்பது பொருள். இதைப்பற்றி எந்த தமிழனுக்காவது தன்மானம் இருக்கிறதா? கோயில்களில் இருக்கக்கூடிய கடவுளின் உருவங்களும் கற்பனை உருவங்கள் தானே. பிள்ளையாரை நேரடியாகக் கண்ட தமிழன் இருக்கிறானா? பிள்ளையாருக்கு குடமுழுக்கு செய்யச் சொல்லி பிள்ளையார் சொல்லியிருக்கிறாரா? அல்லது எமது சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் குடமுழுக்கு செய்யச் சொல்லி சொன்னாரா? இல்லையே.

வடமொழி மந்திரத்திற்கு ஈர்ப்பு இருக்கின்றது என்று சொல்லுகின்ற படித்த அறியாமையால் துவள்பவர்களே என்றைக்காவது திருமுறை களை இசையோடு பயிற்சி செய்து பாடியிருக்கிறார்களா? இல்லையே. அப்படி யென்றால் எப்படி திருமுறையின் ஈர்ப்பை உணர முடியும். இப்படியான செயல்களையா வது பகுத்து அறிந்து செயல்படலாம் அல்லவா.

யார் தமிழன்?

பல ஆயிரம் ஆண்டுக்கு முன் தமிழரின் வாழ்க்கை மகிழ்ச்சியானது. எழிதானது. இப்படித்தான் தமிழர் வாழ்ந்திருக்கிறார்கள். இலங்கையைத் தமிழர் ஆண்ட வரலாறு உண்டு. இந்தியாவை தமிழர் ஆண்ட வரலாறு உண்டு. இன்று தமிழருக்கு என்று ஒரு நாடு இல்லாமல் நாடு நாடாக அலைகிறார்கள். எமக்கு ஏன் இந்த நிலை? தமிழன் தமிழனாக வாழாததுதான் இதற்கு காரணம்.

இன்று தமிழன் தன்னுடைய தாய்மொழியைப் பேசுகிறானா? தன்னுடைய மொழியறிவை கற்று புலவனாகியிருக்கிறானா? இல்லை. வேற்றுமொழி மோகத்தினால் தமிழின் அழகை அழிக்கின்றான். தமிழைப் பேசினால் தரக்குறைவாக எண்ணுகின்ற தாழ்வுமனம் கொண்டவர்கள் நாங்கள். எப்படி நாங்கள் தமிழர் என்று மார்தட்ட முடியும்.

தமிழனுக்கு ஒவ்வாத பகவத்கீதையையும் இராமாயணத்தையும் தலையிலே தூக்கி ஆடுகிறோம். தமிழ் வரலாறு தெரிந்தாலும் கனடாவில் உதெல்லாம் பார்க்க முடியாது என்று கனடா வாழ் அறிஞர் கவிஞர் முனைவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் சொல்லுகிறார்கள்.

பிரதமை துவிதியை திருதியை சதுர்த்தி பஞ்சமி சட்சி சப்தமி அட்டமி நவமி தசமி ஏகாதசி துவாதசி திரயோதசி சதுர்த்தசி அமாவாசை என்றால் என்ன? இது பற்றி யாருக்காவது தெளிவு இருக்கிறதா? விளக்கம் தாருங்கள்.பிள்ளையார் சதுர்த்தியில் பிறந்தாரா? பிள்ளையாரின் பிறந்த நாள் எப்போது?

ஆடி அமாவாசை. இது சரியா? ஒருவர் இறந்தால் அவருடைய திதி சித்திரைத் திங்கள் வளர்பிறையில் வரும் பஞ்சமி என்று எடுத்துக் கொண்டால், இறந்தவர் ஆணாக இருந்தால் பஞ்சமியில் ஆண்டுத்திவசம் செய்வர். பின் ஆடி அமாவாசையில் நீர்க்கடன் என்ற போர்வையில் இன்னொரு ஆண்டுத்திவசம் செய்வர். ஆகவே இறந்த ஒருவருக்கு ஒரு ஆண்டில் இரண்டு திவசம் செய்கிறோம். இது சரியா?

அன்புடன்
மு.க தமிழேந்தி

கருத்து பகிர்ந்திட தொலைபேசி எண்: 647-297-7120
மின்னஞ்சல் முகவரி:M.K.Tamilanthi@gmail.com

# மத நல்லிணக்க...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

தேங்காய்களும் தினசரி பல்லாயிரக் கணக்கானவர்களால் தரிசிக்கப் பெறுகிறது.



வழிப்போக்கன்

நாகூர் ஆண்டவர் சமாதி அடைந்த தினமான ஜமாத்தில் ஆகிறு மாதம் பத்தாம் தினம் நாகூரில் ஆண்டுதோறும் பெரும் திருவிழா (கந்தூரி) நடைபெறுகிறது. 14 நாட்கள் நடைபெறும் இந்த விழாவுக்கு இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் நாகூரில் கூடி வலியுல்லா அவர்களின் அருள் வேண்டுகின்றனர். இங்கு வருபவர்களில் 20 சதவீதம் பேர்தான் இஸ்லாமியர்கள். மற்றவர்கள் அனைவரும் பிற மதத்தினர் என்பதுதான் நாகூரின் சிறப்புக்கு முக்கியக் காரணம். வாரத்தில் வெள்ளிக்கிழமை மட்டுமே இஸ்லாமியர்கள் தொழுவதற்கு வருவார்கள். மற்ற தினங்கள் அனைத்து மக்களின் தரிசன நாளாகத் தான் திகழ்கிறது. இந்து மதத்தினர் தினசரி வந்து செல்கிறார்கள். அதேபோல், கிறிஸ்துவ மதத்தினரும் தங்களுக்கு இன்னல் நேரும் போதெல்லாம் வேளாங்கண்ணி மாதா, பூண்டி மாதா ஆலயங்களுக்கு இணையாக நாகூருக்கும் வந்து பிரார்த்தனை செலுத்துகிறார்கள்.

தர்காவின் குளத்தருகே, பக்தர்கள் நேர்த்திக் கடனைச் செலுத்த, முடி இறக்கும் இடம் உள்ளது. இந்து மதத்தினரைப் போல இங்கும் பக்தர்கள் மொட்டை அடித்து, குளத்தில் நீராடி தர்காவிற்குச் செல்கிறார்கள். இந்து கோயில்களில் விபூதி வழங்கப்படுவது போலவே, இங்கும் ஊதுபத்தி சாம்பல் விபூதியாக வழங்கப்படுகிறது.

நாகூர் தர்காவில் துன்பங்கள் துடைக்கப்படுகின்றன. பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. நோய்கள் குணமடைகின்றன. பேய்கள் விரட்டப்படுகின்றன. செய்வினை, தீவினைகள் அகலுகின்றன என்பது மக்கள் நம்பிக்கை.

**எப்படி செல்வது? எங்கே தங்குவது?** சென்னையில் இருந்து தஞ்சாவூர் சென்று, அங்கிருந்து நாகூர் செல்லலாம். தஞ்சாவூரில் இருந்து 65 கி.மீ தூரத்தில் உள்ளது நாகூர். தஞ்சாவூரில் இருந்து அடிக்கடி பேருந்து போக்குவரத்து உண்டு. நாகூரிலேயே பெரிய தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன. எனவே, நாகூரில் தங்கிப் பார்த்துச் செல்ல விரும்புபவர்கள் நாகூரிலேயே தங்குவது சிறந்தது.

இலவசம்! இலவம்! இலவசம்!
Free Accident Claim Services
Motor Vehicle Accident

- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?
- உங்கள் வாகன விபத்துக் கோரிக்கையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்ள விரும்புகிறீர்களா (Free Accident Claim)
- வாகன விபத்தில் வலி, வருத்தம், காயம், உடல் உபாதை அல்லது மனநல பாதிப்பு ஏற்பட்டதா?
- வாகன விபத்தினுள், விபத்து உங்கள் தவறானாலும் அல்லது உங்கள் தவறாக இல்லாவிட்டாலும் பெரும் தொகை பணத்தினை நட்ட ஈடாக பெற விரும்புகிறீர்களா?
- பல வருட அனுபவம் மிக்க எங்கள் வழங்கறிஞர்களின் (Lawyers) இலவச ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
- Licenced and Excellent Physiotherapy, Doctors, Lawyers & Assessment Services.



Legal Defence Team Inc.
220 Duncan Mills Dr.
Suite 519, Toronto, ON (Donmills &Sheppard)

Call: Suresh : 416-276-0059
[24 மணிநேர தமிழில் சேவை]
Fax: 416-385-1804

Our Services: Scarborough, Markham, Mississauga, Richmond Hill, Aurora, New Market, Brampton, Pickering

- உங்களுக்கு உதவுவதே எங்கள் நோக்கம். பிறரிடம் சென்று ஏமாறு முன் எங்களை ஒரு முறை அழைத்து ஆலோசனை பெறுங்கள்.
- எமது அனைத்து சேவைகளும் 100% சட்ட ரீதியானவை.

கடன் பிரச்சினையில் தவிக்கிறீர்களா?

- கடன் சுமை தாங்க முடியவில்லையா?
- உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
- உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
- கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.



இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்

1. Consumer Proposal: உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.
2. Debt Consolidation: உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.
3. Bankruptcy: அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.
4. Line of Credit: ( Mini Score 680 and Min 2 years credit a must)
5. Criminal Problems, Traffic Ticket Problems

Call:சுரேஸ் - 416-276-0059 24 hrs. Hotline
Fax: 416-385-1804

# பிறரைப் பாதித்து பலிகடாக்களை உருவாக்கும் சக்தி என்னிடம் இல்லை

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 144



மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214

**லலிதா புரூடி**

பிறரின் வாழ்வில் குறுக்கிட்டு அவர்களைப் பலிகடாக்களாக்கிவிடும் சக்தி எனக்கு இருக்கின்றது என இதுவரை நம்பியதற்காக, என்னை மன்னித்திட நான் இன்று உடன்படுகின்றேன்.

சில சமயங்களில் நாம் சிலருக்கு அசௌகரியமும் துன்பமும் விளைவிக்கும் செயல்களைச் செய்து விடுகிறோம். அநேகமாக எமது செயல்களின் பிரதிபலன்களை நாம் அறிந்து கொள்வோம். ஆனால் சில வேளைகளில், வேறொருவர் சுட்டிக்காட்டும்வரை, நாம் என்ன தவறு செய்தோம் என்பதை நாம் உணர்வதேயில்லை. எமது பிழையைப் புரிந்து கொண்டதும் நாம் மிகவும் மனம் வருந்துவோம். கவனக்குறைவுடன் நாம் தெரியாமல் செய்த தவறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்நாள் பூராகவும் கடமைப்பட்டிருக்க வேண்டும் என நம்பி விடுகின்றோம்.

அன்பானவரே! நீ செய்த ஏதோ ஒரு தவற்றினால் ஒருவர் நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக நீ நினைத்தால், தொடர்ந்தும் நீ மனவருத்தப்பட்டுக் கொண்டுதான் வாழப்போகிறாய். முன்பு நீ எப்படி இருந்தாலும் இப்போ எப்படி இருந்தாலும், உன்னால் வேறொருவர் நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டிருப்பவராகக் கருத முடியாது. இவ்வாறின்றி, பிறர் வாழ்வில் குறுக்கிட்டு உதவியிருக்கின்றேன் என நீ நம்பினாலும், வேறொருவர் ஜீவியத்தில் குறுக்கிடுவதற்கு உனக்கு இல்லாத உரிமையும் சக்தியும் உன்னிடம் இருப்பதாக நீ கருதுகிறாய் என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகின்றது. பிறர் உன்னால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என நீ நம்புவது, அவர்களின் சிந்தனை, செயல்களுக்கு நீ தான் பொறுப்பு என்றாகி விடுகின்றது. இப்படி நினைப்பதோ உணர்வதோ வருங்காலத்தில் தேவையில்லாத பாரிய துன்பத்தை உனக்குக் கொடுக்கும்.

ஒருவர் வாழ்வில் உன்னால் தாக்கம் ஏற்பட்டிருந்தாலும் அவர் நிரந்தரமாக உனது பலிகடா அல்ல. வாழ்வெனும் அரங்கத்தில் நாம் யாவரும் நடனமாடுகின்றோம். எம்மில் சிலர் சிறந்த நர்த்தகர்கள். தாளலய ஞானமில்லாத சிலரால் நடனமாடவே முடியாது. உன்னுடன் நடனமாட நீ ஒருவரை அழைக்கும் போது, நீ அல்ல, அவர் தான் உன்னுடன் ஆடுவதா இல்லை என்பதைத் தீர்மானிக்க வேண்டும். உனது ஜோடியின் காலை தவறுதலாக நீ மிதித்து விட்டால் உடனடியாக மன்னிப்பு கேட்டுக்கொள். அதற்காக அவருக்கு புதிய காலணி வாங்கிக் கொடுக்க முன்வராதே. தாம் உயிர்வாழ்வதால் ஒரு பிரயோசனமுமில்லை என அவர் நினைத்தால், மன்னிப்பு கேட்டுக்கொள். தொடர்ந்தும் என்னுடன நடனமாட வரும்படி அவரை நச்சரிக்காதே. என்னால் பிறரை நிரந்தரமாகப் பாதிக்க முடியாது. ஆனால் அப்படி பாதித்திருந்தால் மன்னிப்பு கேள். உன்னால் செய்யக்கூடிய நட்டஈட்டைச் செய். பின்பு அவரை விட்டு தூர விலகிப் போய்விடு.

நீ செய்த தவறினால் ஒருவருக்கு வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்க வேண்டும் என நீ இன்றுவரை நம்பி வந்திருக்கலாம்.

முதலில் நீ பிறரின் நலனைப்பற்றி யோசிக்காது அசிரத்தையுடன் அவர்களைத் துன்புறுத்திய தருணங்களை உணர்ந்து அவற்றை ஒப்புக்கொள். பின்பு அதற்காக உன்னை மன்னித்துவிடு. இறைவனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு, வாழ்வில் மனநிம்மதியுடன் தொடர்ந்தும் நடனமாடு.

வாழ்வில் நான் செய்த தவறுகளை மன்னிக்கும் முயற்சியை இன்று ஆரம்பிக்கின்றேன் என்னால் பாதிக்கப்பட்டு பலிகடாவாகிய ஒருவருமே என் வாழ்வில் இல்லை என்பது எனக்குத் தென்பூட்டுகிறது.



SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

வருமான வரி மீள்வு
Income Tax Refund

• தனிப்பட்ட குடும்பத்தினரின் வருமான வரி மீள்வும் எதிர்கால ஆலோசனைகளும்
• தனியாக தொழில் முயற்சியில் ஈடுபடுவோரின் வரிப்பத்திரம் தயாரிப்பதும் எதிர்கால ஆலோசனைகளும்
• வாடகை வருமான செலவுகளுக்கான (வீட்டின் ஒரு பகுதியோ, முழுமையாகவோ) வரி மீள்வு சேவை
உதயன் ஐயாத்துரை Tel.: 416.999.3555


வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva, P.Eng.
Real Estate Broker
Principal Mortgage
RE/MAX

Condo. for sale $149,900
• 665 Kennedy Rd • #510 • 401 / Mccowan • 3 Bedrooms • 2 Washrooms • Fridge, Stove, Washer, Dryer, All Light Fixtures, Ceiling Fan

Condo. for sale $175,000
• 2466 Eglinton Ave 1210 • Midland & Eglinton • 2 + 1 Bedrooms • 2 Full Washrooms • Existing Elf's, Stove, New Fridge, New Dishwasher, Washer & Dryer.

HOUSE FOR SALE $529,900
• 77 Forestbrook Dr • 14th & 9Th line • 2 - Storey Brick house • 4 Bedrooms • 4 Washrooms • Fridge • Stove • wawher & Dryer • Centreal Vacuum • Alarm System All Elf

HOUSE For Sale $464,900
11 Bridport Cres. • Brimley/ Mcnicoll/ Mccowan • Bedrooms: 4 + 1 • Washroom: 4 • 2 Fridges, 2 Stoves, Washer, Dryer,Central Air, Central Vacuum

CONDO.FOR SALE $199,900
McCowan & HWY 401
• Mccowan/Hwy 401 • 2 Bedrooms • 2 Washrooms • Elfs, Fridge, Stove, Newer Dishwasher, Built-In Microwave, Washer, Dryer, Window Coverings (Exclude Mbr Drapes), Broadloom W/ Laid .

Condo. for sale $249,900
•83 Mondeo Dr. #112 • Birchmount & Ellesmere • 2+1 Bedrooms • 2 Washroom • Fridge ,Stove ,Washer,dryer

HOUSE For Sale $339,900
• 29 Sawdon Dr. Burns/Thickson, • Whitby • Bedrooms: 4 + 2 • Washrooms: 4 • 2 parking • Finished BSMT • Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE $229,000
• Ellesmere & Birchmount •2 Bedrooms •2 Washrooms Storage Unit! Appliances Incl - Billiards Room, Indoor Swimming Pool, Party Room, Basketball Court, Movie Room, Party Lounge, Bbq Terrace, Gym, Sauna, Guest Suites, Security Guard, & More

HOUSE For Sale $339,000
• 154 Fitzgibbon Ave. • Midland / Lawrence • Bedrooms: 3 + 3 • Washrooms: 3 • 3 Stoves 3 Fridges , Washer , Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MORTGAGE CONSULTANT

•Experienced • Reliable • Trustworthy
For your Mortgage and Secured Line of Credit
Pl. Call: Raymond Liu
(Manager, Residential Mortgages)
Tel.: 416.618.2132 Cell: 416.614.5446
raymond.liu@td.com www.tdcanadatrust.com/msf/raymondliu

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

ELECTRICAL WORKS
FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880